நாவாந்துறைப் படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## வன்னியில் மீள் கட்டுமானமும் குடியேற்றமும்



## குருதியில் நினைவழுதி....!

## த.தே.கூட்டமைப்பின் புதிய அறிவிப்புகள் நல்ல சமிக்ஞைகளே! ஆனால்...?

## உயிர் வலிக்கும் கணங்கள்...!



## வலி சுமந்த மே மாதம்

# சட்டத்தரணிகளின் பணிப் பகிஷ்கரிப்பால் நீதிமன்றச் செயற்பாடுகள் முடக்கம்!

குடாநாட்டில் தொடரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்காக உயர்மட்டச் சந்திப்பு ஒன்று கடந்த 13ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் பணிக்குப் பொறுப்பான நீதித்துறையினர், பொலிஸார், படையினர் ஆகியோர் கலந்து கொண்டு குடாநாட்டில் தொடரும் வன்முறைச் சம்பவங்களை அடியோடு இல்லாமல் செய்வதற்கான யோசனைகள் குறித்து ஆராய்ந்தனர்.

கூட்ட ஆரம்பத்தில் இருந்து முடியும் வரை சட்டத்தரணிகளின் கண்டனக் கணைகள் பொலிஸார் மீதே விழுந்தன.

சாவகச்சேரி மாணவன் கபிலநாத் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரணை செய்து வரும் சாவகச்சேரி நீதிவான் ரி.ஜே.பிரபாகரனுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல், முழு நீதித்துறையினருக்கும் எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே கருதவேண்டியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் விரைந்து மேற்கொள்ளப்படவில்லை. சம்பவம் நடந்து ஒருவாரமாகியும் பொலிஸார் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பொலிஸார் மீது பாய்ந்தனர் சட்டத்தரணிகள்.

நீதிவானுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக பொதுமக்கள் வழங்கிய கடிதத்தின் அடிப்படையில் சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவைப் பிறப்பித்தது. ஆனால் பொலிஸார் உருப்படியாக எதையும் செய்யவில்லை என்று சட்டத்தரணிகள் காட்டமாகக் குரல் எழுப்பினர்.



மஹிந்த ராஜபக்ஷ



கோத்தபாய ராஜபக்ஷ



இரா.சம்பந்தன்

அநாமதேய கடிதங்கள் என்று கூறிவிட்டு கொலை அச்சுறுத்தல்கள் குறித்து பாராமுகமாக இருக்க முடியாது. கொழும்பில் அநாமதேயக் கடிதங்கள் மூலம் பல சம்பவங்களின் விவரங்கள் வெளியாகின. பலர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். அந்த வகையில் நீதிவானுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்து பொலிஸார் விசாரணை யைத் துரிதமாக நடத்தி சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்றும் சட்டத்தரணிகள் குரல் எழுப்பினார்கள்.

நீதிவானுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலைக் கண்டித்து நீதிமன்றச் செயற்பாடுகளை புறக்கணிக்கும்போராட்டத்தை சட்டத்தரணிகள் முன்னெடுத்துள்ளனர். விரைந்து நடவடிக்கை எடுத்து, நீதிமன்றச் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்ப பொலிஸார் உதவ வேண்டும் என்று சட்டத்தரணிகள் கூறினர்.

நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். இதுவரை எவரையும் கைதுசெய்யவில்லை. விசாரணையின் முன்னேற்ற அறிக்கையை விரைவில் யாழ். நீதிவானிடம் கையளிக்க இருக்கிறோம். அது தொடர்பாக யாழ். நீதிவான் விடுக்கும் கட்டளையை நடைமுறைப்படுத்துவோம் என்று பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நீதிவான் அச்சுறுத்தல், கொலை, கடத்தல், கப்பம் கோரல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் நேரிலும், தொலை பேசியிலும் பேசியதாக மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா அங்கு தெரிவித்தார்.

வன் செயல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நடவடிக் கைகளை விரைந்து எடுக்கவிருப்பதாக அவர் தன்னிடம் கூறியதாகவும் விக்னராஜா கூறினார்.

வன்முறைச் சம்பவங்களை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியான சூழலை ஏற்படுத்த பல விதமான செயற்பாடுகளை முன்னெடுக்கப் போவதாக கோத்தபாய தனக்குத் தெரிவித்ததாகவும் விக்னராஜா தெரிவித்தார்.

அந்த உறுதிமொழியை ஏற்று, சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பைச் கைவிட்டு நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் நீதிபதி விக்னராஜா சட்டத்தரணிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

நீதிவான் அச்சுறுத்தப்பட்ட விவகாரம் குறித்து உறுதியான பதில் கிடைக்கும் வரை எமது பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என்று சட்டத்தரணிகள் அறிவித்துள்ளனர்.

சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பால் நீதிமன்றச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. வழக்குகள் எல்லாம் தவணை போடப்படுகின்றன. இதனால் பலர் தொடர்ந்து சிறைச்சாலைகளில் தவம் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நீதிபதி அச்சுறுத்தப்பட்ட விடயம் தொடர்பாக காத்திரமான செயற்பாடு முன்னெடுக்கப்படும் வரை, நீதிமன்றச் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பும் சாத்தியம் இல்லை என சுட்டிக் காட்டப்படுகின்றது.

நீதிமன்றச் செயற்பாடுகள் செயலிழந்ததால் பல வழக்குகள் விசாரணைகள் இன்றி தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எப்போது வழமை நிலை திரும்பு கின்றதோ அப்போதுதான் சட்டம், ஒழுங்கு சீராக நடைமுறைக்கு வரும்.

இதற்குப்புறம்பாக -

குடா நாட்டில் தொடரும் கடத்தல், கொலை, கப்பம் கோரல் போன்ற சம்பவங்களைத் தடுக்க இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரமாக்கியுள்ளனர்.

மானிப்பாய் வேலக்கைப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கும் பதினொரு வயது மாணவி ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

மாணவி கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து மானிப்பாயில் குவிக்கப்பட்ட படையினர் அந்தப் பகுதியில் சல்லடைபோட்டுத் தேடுதல் நடத்தினர்.

இரவு இரவாக நள்ளிரவு வேளையிலும் படையினர் மேற்கொண்ட தேடுதலின் பயனாக அந்த மாணவி மீட்கப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட அந்த மாணவி பற்றைப்பகுதியில் அழுது கொண்டு நின்றபோது படையினர் அவரை மீட்டுள்ளனர். பின்னர் பொலிஸாரிடம் அந்த மாணவி ஒப்படைக்கப்பட்டார்.

சகல பகுதிகளிலும் படையினர் பிரசன்னமாகி இருந்து தேடுதல், சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யாழவன்

குடாநாட்டில் தொடரும் வன்முறைச் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வரப் படையினர் ஆரம்பித்துள்ள இந்த நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குமாறு யாழ். பிராந்திய படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

சட்ட விரோதமாக மணல் ஏற்றுதல், சட்டவிரோதமாகக் கசிப்பு விற்பனை போன்றவற்றைத் தடுக்க உதவுமாறு பொதுமக்கள் தரப்பில் இருந்து கோரிக்கைகள் வருவதால், அந்தச் செயற்பாட்டிலும் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என யாழ். நகர தளபதி மேஜர் நிஷங்க கூறுகிறார்.

தனித்துப் படையினர் இந்தச் செயற்பாட்டில் ஈடுபடாது பொலிஸாருடன் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர் என தளபதி கூறுகின்றார்.

இத்தகைய செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் நல்ல ஆதரவை வழங்குகிறார்கள் என்றும் கூறுகிறார் தளபதி.

ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபட்ட படையினர் இன்று வன்முறைச் சம்பவங்களை ஒழிப்பதிலும் சமூக விரோதச் செயல்களை தடுப்பதிலும் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது.

கொலை, கப்பம் கோரல், கடத்தல், மற்றும் சமூக விரோதச் செயல்களை முடிவுக்கு கொண்டுவந்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதி, அச்சநிலை போக்கப்பட்டு சமூக வாழ்க்கை மீண்டும் ஏற்படவேண்டும் என்பதே சகலரினதும் விருப்பமுமாகும்.

## தீர்வு குறித்த பேச்சுக்கள் திரைமறைவில் ஆரம்பமா?

அதுநிற்க -

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆகக் கூடிய ஆசனங்களுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் அரசுத்தரப்புக்கும் இடையில் திரைமறைவில் பேச்சுகள் ஆரம்பமாகிவிட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத் தகவலை உறுதி செய்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

கடந்த 60 வருடங்களாகத் தொடரும் இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வு ஒன்றைக் காணக்கூடிய சந்தர்ப்பம் இப்போது உருவாகியுள்ளது.

கடந்த காலங்களில் ஒரு கட்சி தீர்வை முன்வைக்க, மறுகட்சி எதிர்ப்பதும், மறுகட்சி தீர்வை வைக்க எதிர்க்கட்சி எதிர்ப்பதும் தான் வழமையாக இருந்தது.

இதனால் தீர்வு எட்டப்படாத நிலையில் தேசியப் பிரச்சினையாக - எரியும் பிரச்சினையாக - இனப்பிரச்சினை வளர்ச்சி கண்டது.

தற்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கட்சிதான் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறும் நிலையில் ஆட்சியில் உள்ளது.

இந்த நிலையைப் பயன்படுத்தி தீர்வு ஒன்றைக் காண அரசு முன்வருமானால், நிச்சயம் நாட்டில் அமைதி ஏற்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

இத்தகைய தீர்வு ஒன்றை முன்வைக்க அரசு முன்வருமானால் அரசுக்கும், அந்தச் செயற்பாடுகளுக்கும் வடக்கு - கிழக்கு மீள்குடியமர்வு, அபிவிருத்திப் பணிகளுக்கும் அரசுக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறுகின்றார்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வு ஒன்றை முன்வைத்து பேச்சுகள் நடத்தப்பட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் நாடு அபிவிருத்தியை நோக்கி நகர வாய்ப்புக் கிட்டும்.

அது சாத்தியமாகுமா என்ற கேள்விக்கு காலம்தான் பதில் கூறவேண்டும்.

****




# வலி சுமந்த மே மாதம் !

ஆயிரக்கணக்கான மரணங்களை, கொடூரக் கொலைகளை, குண்டு வீச்சுக்களைத் தாங்கி சாட்சிகளே இல்லாத சாவுக் களமாய்க் கிடக்கிறது வன்னி மண்.

உலகம் வேடிக்கை பார்க்கவில்லை, தூண்டியேவிட்டது. பக்கத்து நாடுகள் கண்டிக்கவில்லை, ஆயுதங்கள் கொடுத்தன. ஆலோசனைகள் சொல்லின. ஆதரவாக நின்றன. மொழி, இனம் பற்றிப் பேசியே உலகத் தலைவர் ஆனவர்களின் கண்களில் நீர் இல்லை, முகத்தை வேறுபக்கமாகத் திருப்பிக்கொண்டார்கள். எதையாவது செய்திருக்க வேண்டிய சொந்தங்கள், கதை கேட்க ஆரம்பித்தார்கள். 'சொந்த சகோதரர் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை கலங்காத' எம் முன்னே ஈழத்தில் சாவுச் சங்கு ஊதப்பட்டு ஓராண்டு ஆகிறது. 'மே' மாதக் கலண்டரில் உலகத் தமிழன் குறித்து வைத்திருக்கிறான், 'வலி சுமந்த மாதம்' என்று. இனி ஒவ்வோர் ஆண்டும் அக்னி வெயிலைவிடக் கொடுமையாக நமது உள்ளங்களை அது சுடும்.

ஆனால், கொழும்பு மகிழ்ச்சியாக இருக்கிறது. மே 12 முதல் 20 ஆம் திகதி வரை போர் வீரர்களின் வாரமாகக் கொண்டாடுகிறார்கள். முப்படைகளின் தளபதியாகவும் ஜனாதிபதியாகவும் இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, தனது முழுக் குடும்பத்தையும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி அழகு பார்க்கப் பயன்பட்ட யுத்தத்தின் வெற்றி அல்லவா இது!

'நாடு இப்போது அமைதியின் பக்கம் இருக்கிறது' என்று மஹிந்த அறிவித்திருக்கிறார். ஆனால், யதார்த்தம்?

''உங்கள் நாட்டில் குண்டுச் சத்தம் இல்லைதானே... அப்படியானால் அமைதி யுகம் ஆரம்பமாகிவிட்டதா?'' என்ற கேள்விக்கு, கொழும்புப் பத்திரிகையாளர் ஒருவர் சொன்னார்... ''பாதிப் பேரைக்கொன்று விட்டார்கள். மீதிப் பேர் நடைப்பிணங்களாக அலைகிறார்கள்'' என்று.



சாவகச்சேரியில் கபிலநாத் என்ற மாணவனைக் கடத்திய கும்பல் மூன்று கோடி ரூபாய் பணம் கேட்டுக் காத்திருந்தது. அவ்வளவு பணம் தரும் அளவுக்குப் பெற்றோரிடம் வசதி இல்லை. கபிலநாத் கொல்லப்பட்டான். இப்படி எத்தனையோ சம்பவங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம். சட்டத்துக்குப் புறம்பான கைது, ஆள் கடத்தல், கப்பம் கோருதல், கொள்ளைச் சம்பவங்கள், கொடூரக் கொலைகள், கற்பழிப்புகள்... ஆகியவை நடக்கும் இடமாக இப்போதைய ஈழம் இருக்கிறது.

இந்தச் சம்பவங்களைப் பட்டியலிட்டு நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் எம்.பி. அப்பாத்துரை விநாயகமூர்த்தி பேசியிருக்கிறார். 'ராணுவத்தின் ஆட்சி நடக்கும் பகுதியில் இந்தச் சம்பவங்கள் நடக்கின்றன. இவை திட்டமிட்டுச் செயல்படும் குழுக்களால் நடத்தப்படுகின்றன. ராணுவத்துக்குத் தெரியாமல் இது எப்படி நடக்க முடியும்?' என்று கேட்டார். பதில் சொல்வதற்குத்தான் எவரும் இல்லை. கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா எனக் கொஞ்சம் காசு வைத்திருக்கும் தமிழர்கள் தலைமறைவாக வாழ்ந்தாக வேண்டிய சூழலே இன்றும் நிலவுகிறது.

மூன்று லட்சம் மக்களை முள்வேலிக் கம்பிகளுக்குள் வைத்திருந்து முடமாக்க நினைத்த அரசுக்கு எதிராக உலக நிர்பந்தம் அதிகமானது. எனவே, கொஞ்சம் கொஞ்சமாக வெளியேவிட்டனர். இன்னமும் 36 ஆயிரம் தமிழர்கள் மட்டுமே. முள்வேலிகளுக்குள் இருக்கிறார்கள் என்கிறது இலங்கை அரசு. புலிகள் அமைப்பில் இணைந்து உயிரை விட்ட 40 ஆயிரம் போராளிகளின் குடும்பங்களே இதில் அதிகம். 'உங்களை வெளியில்விட்டால், எங்கள் நாட்டுக்கு ஆபத்து. மறுபடியும் ஆயுதம் தூக்க நீங்கள் உதவியாக இருப்பீர்கள்' என்று, வெளியேவிட மறுத்துவிட்டார்கள். அதே வெயிலிலும் மழையிலும் கூடாரங்களுக்குள் இவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். ''இதுவரை ஒரு லட்சத்து 63 ஆயிரம் பேரை மீள் குடியேற்றம் செய்துள்ளோம். இவர்களும் அடிப்படை வசதி எதுவும் இல்லாத இடங்களில் தவிக்கிறார்கள். கிளிநொச்சியில் குடியேற்றப்பட்ட மக்கள், மோசமான நிலையில் உள்ளனர். அவர்களை நான் பார்க்கச் சென்றபோது, மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள். வன்னியில் மட்டுமல்ல, கிழக்கிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு வீட்டு வசதி இல்லை. 10 குடும்பங்களை எடுத்துக்கொண்டால், ஏழு குடும்பங்களில் குடும்பத் தலைவர்கள் இல்லை. சிறு குழந்தைகளுடன் பல்வேறு அசௌகரியங்களுடன் மக்கள் இருப்பதை நான் பார்த்தேன்'' என்று மீள்குடியேற்ற அமைச்சராகப் பொறுப்பு ஏற்றுள்ள கருணா சொல்கிறார். அவராலேயே மறைக்க முடியாத அளவுக்கு மக்கள் அநாதைகளாக அலைவது தொடர்கிறது.

சொந்த ஊருக்கு அனுப்பப்பட்டால் அங்கு வீடுகள் இருந்த தடயம் மட்டும்தான் இருக்கிறது. விவசாய நிலங்களைப் பயன்படுத்த முடியாமல் நாசம் செய்துள்ளார்கள். மீன்பிடிப் படகுகள் உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன. இப்படி ஏதுமற்ற நிலையில்தான், மீள்குடியேற்றம் நடந்துள்ளது. விவசாயமும் மீன் பிடித்தலும்தான் அவர்களுக்குத் தெரிந்த தொழில். ஆனால், அதைச் செய்வதற்கு வழி ஏதும் இல்லை.

கிழக்கு மாகாணத்தில் 49 ஆயிரம் தமிழ்ப் பெண்கள் இப்போது விதவைகளாக இருக்கிறார்கள். இதில் 25 ஆயிரம் பேர், 30 வயதுக்கும் குறைந்தவர்கள். அடுத்தகட்ட வாழ்க்கை என்ன என்பதே தெரியவில்லை. குழந்தைகளை என்ன செய்வது என்றும் புரியவில்லை.

''பெரிய கடல் இருக்கு... ஏரி இருக்கு. வெள்ளாமைக்கு வயல், விறகு வெட்டக் காடு இருக்கு. நல்ல வளமான இடம் எங்கட வாகை. ஆனால், யுத்தம் எங்கட வாழ்வில் விளையாடிப் போட்டுது பாருங்கோ. எங்கட நிலத்தில வெள்ளாமையைச் செய்வம். மீனைப் பிடிப்பம். காட்டுக்குப் போவம். பட்டினி கிடக்க மாட்டம். ஏதோ வசதியா இருந்தனங்கள். இப்ப ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு என்ன பாடுபடுறம்? எல்லாம் போச்சு! முன்பெல்லாம் புலியள் இருக்கிறதென்று கெடுபடி பண்ணினாங்க. இப்ப தேனெடுக்க, விறகு வெட்ட, தொழில் செய்ய, காட்டுக்குப் போக படையிடம் அனுமதி வாங்கணும். அபிவிருத்தி என்று அரசாங்கம் சொல்லும், குடியேற்றத்துக்கு உதவி என்று சொல்லும். நிவாரணம் தாரேனெண்டு சொல்லும். எல்லாமே பொய்!'' என்று வாகை மீனவர் சொல்லும் வார்த்தைதான் மொத்த ஈழத்துக்குமான நிலை.

தமிழர்கள் வசதியாக வாழ்ந்து தொழில் செய்த இடங்களில் எல்லாம் இப்போது சிங்களவர்கள் குடியேறி, விவசாயம் பார்க்கிறார்கள். மீன் பிடிக்கிறார்கள்.

'தமிழ்ப் பற்றுள்ள தேசிய விடுதலை இயக்கம்' என்ற பெயரால் யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் ஒரு ரகசிய துண்டறிக்கை எல்லா வீடுகளுக்கும் போடப்பட்டுள்ளது. 'தென்இலங்கையில் இருந்து அதிக அளவிலான சிங்களவர்கள் சுற்றுலாப் பயணிகளாக எம் மண்ணை ஆக்கிரமித்து, தமிழ் மக்களாகிய எம்மைச் சிறுபான்மையினர் ஆக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். வர்த்தக நிலையங்களில் சிங்களப் பெயர்ப் பலகை எழுதுதல், சுற்றுலாப் பயணிகளுக்கு வீடுகள் கொடுத்தல், சிங்களவர்களுக்கு வீடுகள், காணிகள் விற்றல், சிற்றுண்டிகளில் சிங்களப் பாடல்களை ஒலிபரப்புதல் ஆகியவை தொடங்கிவிட்டன, என்கிறது இந்தப் பிரசுரம். அதாவது, வல்வெட்டித்துறையில் பிரபாகரன் வீடு இடிப்பு, கரும்புலி மில்லர் நினைவாக நெல்லியடியில் வைக்கப்பட்ட நினைவுத் தூண் உடைப்பு, யாழ்ப்பாணம் உடுப்பிட்டியில் இருந்த மாவீரர் துயிலும் இடம் இடிப்பு... என போர் நினைவுச் சின்னங்கள் அனைத்தும் இடிக்கப்பட்டு வரும் நிலையில், இன்னொரு பக்கம் வெளிப்படையான சிங்களக் குடியேற்றமும் தடங்கல் இல்லாமல் நடக்கிறது.

''உணவுக் களஞ்சியமான வன்னி மண்ணில் உற்பத்தியைப் பெருக்கி, மற்றவருக்கு உண்டி கொடுத்த நாம், ஒரு படிச் சோற்றுக்குக் கையேந்தி வரிசையில் நிற்கிறோம்'' என்று தமிழ் எம்.பியான சிவஞானம் சிறீதரன் நாடாளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார்.

அன்றாட வாழ்க்கைக்கு அவஸ்தைப்பட்டு... சொந்தத் தொழிலும் செய்யவிடாமல், கிடைக்க வேண்டிய சிறு வேலையும் மறுக்கப்பட்டு... வாசலுக்கு வந்தால் வளைக்கப்படுவோமோ என்று பயந்து, உட்கார ஒரு நிரந்தரக் கூரை இல்லாமல் தவித்து... என நான் சொல்லாத துன்பம் அனைத்தையும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறது, ஈழத் தமிழினம்.

இந்தக் கஷ்டங்கள் எதற்கும் சம்பந்தம் இல்லாத வகையில் பல்லாயிரம் கோடி முதலீடுகளை சீனா இறக்கி வருகிறது. 'உங்களுக்கான அத்தனை உதவிகளையும் செய்யக் காத்திருக்கிறோம்' என்று பாகிஸ்தான் பிரதமர் அறிவித்து இருக்கிறார். மிகப் பெரிய காற்றாலை மின் திட்டத்தைக் கைப்பற்றிய மகிழ்ச்சியில் இருக்கிறது இந்தியா. இன்னும் எத்தனையோ நாடுகள் தங்களது முதலீட்டுக்கான சந்தையாக இலங்கையை மாற்றிவிட்டன. அமைதி தோய்ந்த கடல்பரப்பு முழுதும் கேளிக்கை விடுதிகள், சுற்றுலா மாளிகைகள் அமைக்க இடம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

கொடூரம் என்னவெனில், கொழும்புச் சுற்றுலாவின் அங்கமாகப் பாலியல் தொழில் மாறிப் போனதுபோல, இன்னும் சில ஆண்டுகளில் தமிழ்ப் பரப்பும் மாற்றப்பட இருக்கிறது. தமிழ்ப் பெண்களின் எதிர்காலத்தை நினைத்தால், பகீரென்கிறது. பண்பாட்டுச் சந்தைக்கு திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைத்தீவை மொத்தமாகத் தாரைவார்க்கும் படலத்தில் ஆரம்பக்கட்ட வேலைகள் நடந்திருக்கின்றன. இந்த வளம் கொழிக்கும் பகுதியை எதைக் காரணம் காட்டியும் கைவிட்டுவிடக் கூடாது என்று பல்வேறு நாடுகள் துடிக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள், அமைப்புரீதியாகவோ அல்லது தனித்தனிக் குழுக்களாகவோ அங்கு இயங்குகிறார்களா என்பதை நிரூபிக்கும் சம்பவங்கள் இதுவரை இல்லை. ஆனால், புலி வருது என்ற பூச்சாண்டிகளைச் சிங்கள அரசு நிறுத்தவில்லை. 'புலிகளின் புதிய ராணுவப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது' என்று பிரதமர் டி.எம்.ஜயரட்ண அறிவித்துள்ளார். ''பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கக்கூடிய சந்தர்ப்பங்களை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்'' என்கிறார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய. ''இன்னும் பயங்கரவாதம் கனன்று வருகிறது'' என்று சொல்கிறார் மஹிந்தாவின் மகன் நாமல். நண்பர்களைவிட எதிரிகளுக்குத்தான் எல்லாம் தெரியும்... என்பதை வைத்துப் பார்த்தால், ஈழத்தில் ஏதோ நடக்கப்போவதற்கான சாத்தியங்கள் இருப்பதாகவே தெரிகின்றன.

சக்கரம் மீண்டும் ஆரம்பித்த இடத்துக்கே வந்திருக்கிறது. துன்பத்தில் அதிக துன்பமும், சோகத்தில் அதிக சோகமுமே ஈழத் தமிழ் இனத்துக்கு வாய்த்திருக்கிறது. இந்நிலையை எந்த தேவதூதன் மாற்றுவான் என்பதுதான் தெரியவில்லை!

**திருமாவேலன்**

நன்றி : இணையம்

சுடர் ஒளி

மே. 16 - மே. 22, 2010

85, ஜெயந்தமல் விமாரன்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115738005 பக்ஸ்: 0114734404
E-mail: editorial@sudaroli.com

## பிரிட்டிஷ் தேர்தல்

பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கடந்த 13 ஆண்டுகளாகப் பதவியில் இருந்த தொழிற்கட்சி தோல்வி அடைந்திருக்கிறது.

650 உறுப்பினர்கள் கொண்ட பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கன்சர்வேட்டிவ் கட்சி 306 ஆசனங்களையும், தொழிற்கட்சி 258 ஆசனங்களையும், லிபரல் ஜனநாயகக் கட்சி 57 ஆசனங்களையும் பெற்றது மூலம் எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாத நிலைமை ஏற்பட்டது. தற்போது இரண்டாம் உலக மகாயுத்தத்துக்குப் பின்னர் முதல் தடவையாக கூட்டரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் டேவிட் கெமரூன் பிரதமராகவும் லிபரல் ஜனநாயகக் கட்சித் தலைவர் நிக்கிளெக் துணைப் பிரதமராகவும் பதவி ஏற்றுள் ளனர்.

பிரிட்டனில் வாக்களிப்பு நடைபெற முன்னரே, அமையப்போவது தொங்கு நாடாளுமன்றம் அல்லது கூட்டரசாங்கம் என்றே பொதுஜன அபிப்பிராய வாக்குக் கணிப்புகள் தெரிவித்திருந்தன. ஏனெனில் லிபரல் ஜனநாயகக்கட்சி பொது மக்கள் மத்தியில் கணிசமான. ஆதரவை இம்முறை பெற்றிருந்தது.

எதிர்பார்க்கப்பட்டபடியே எந்த ஒரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறத் தவறிவிட்டன. இதன் விளைவு தற்போது சுமார் 70 ஆண்டுகளுக்குப் பின்பு பிரிட்டன் கூட்டரசாங்கத்தைப் பெற்றுள்ளது.

ஜனநாயக நடைமுறைகள் உள்ள நாடு ஒன்றில் இரு கட்சி ஆட்சி முறையே சிறந்ததாகக் கருதப்பட்டு வருகிறது. பிரிட்டன் தற்போது கூட்டரசாங்கத்தை நோக்கி நகர்ந்திருப்பதால் எதிர்காலத்தில் - தற்போது ஜனநாயக ஆட்சி நடை பெறும் ஆசிய நாடுகளைப் போன்று - பிரிட்டனும் அரசியல் ஸ்திரமின்மைக்குள் தள்ளப்படும் அறிகுறிகள் தென்படுகின்றன.

உலகப் பொருளாதார நெருக்கடி, பயங்கரவாதத்துக்கு எதிரான போர் ஆகியவை பிரிட்டனில் முதன்மை பெற்றிருப்பதும், ஆட்சி மாற்றம் ஒன்றை பிரிட்டிஷ் மக்கள் விரும்பியதுமே கன்சர்வேட்டிவ் கட்சியின் வெற்றிக்கு வலுவூட்டி இருந்தன.

ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் ஆசிய நாட்டவர்கள், கறுப்பினத்தவர்கள் ஆகியோரின் வாக்கு வங்கியிலேயே தொழிற்கட்சியின் வெற்றி தங்கி இருந்தது.

இலங்கைத் தமிழர்கள் உட்பட ஆசிய நாட்டவர்கள் கணிசமான அளவு பிரிட்டனில் வசித்து வருகின்றனர். ஆனால் இவர்களது வாக்குகளை தொழிற்கட்சி இம்முறை முழுமையாகப் பெற்றிருக்குமா என்பது சந்தேகமே! இலங்கை இனப்பிரச்சினையில் தொழிற்கட்சியின் முக்கிய அமைச்சர்கள் சிலர் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான போக்கைக் கடைப்பிடித்திருந்த போதிலும் கடந்த ஆண்டு மே மாதம் இடம்பெற்ற பேரழிவின் போது பிரிட்டனால் உருப்படியாக எதனையும் செய்ய முடியாது போனது. பிரிட்டனின் ஆதரவு பேச்சளவில் மாத்திரமே இருந்தது.

இலங்கை கடைசியாக பிரிட்டிஷ்காரர்களினால் ஆளப்பட்டதால் இலங்கையின் இன்றைய நிலைமைக்கு பிரிட்டனுக்கும் பெரும் பொறுப்பு இருக்கிறது. இதனை உணர்ந்து தற்போது பதவி ஏற்றுள்ள கன்சர்வேட்டிவ் கட்சி செயற்படுமானால் ஆசிய மற்றும் கறுப்பின மக்களின் ஆதரவையும் அது எதிர்காலத்தில் சுலபமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

# அழுக்கு நீரால் குளித்தல்!

தமிழ்த் திரைப்படங்களின் இறுதிக் கட்டங்களில் வில்லன் திடீரென நல்லவனாக திருந்தி விடுவதைப் போல அரசின் நடவடிக்கைகள் சில அமைந்து போயுள்ளன.

கடந்த காலங்களில் தனது எதிராளிகள் மற்றும் தன்னை விமர்சிப்போர் தொடர்பில் மிகவும் மூர்க்கத்தனங்களுடன் நடந்துகொண்ட அரசு, இப்போது தனக்கும் நல்ல முகம் இருப்பதாகக் காட்டிக் கொள்ள எத்தனிக்கின்றது.

ஜனதிபதி மற்றும் அரசாங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் சிலவற்றை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

அவைகளில் பிரதானமானது, ஜெனரல் சரத்பொன்சேகாவை நாடாளுமன்றம் செல்வதற்கு அரசாங்கம் அனுமதித்தமையாகும். (ஆனால், கடந்த 05 ஆம் திகதி இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் ஜெனரல் பொன்சேகா கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்படவில்லை என்பது வேறு கதை)

அடுத்த விடயம், ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்துக்கு ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பாகும்.

அரசாங்கம் மற்றும் ஜனாதிபதியின் இவ்வாறான முடிவுகளுக்குரிய பின்னணிக் காரணங்கள் என்னவாக இருக்கும் என்கின்ற ஆராய்ச்சிகளை ஒரு புறம் வைத்து விட்டுப்பார்த்தால் நாங்களும் நல்லவங்கதான், எங்கள் மனசுகளுக்குள்ளும் ஈரம் இருக்கிறது என்று காட்டுவதற்கான அரசின் எத்தனமாகவே, மேற்படி நடத்தைகளைக் காண முடிகிறது.



அதேவேளை, ஜெனரல் பொன்சேகா மீது அரசாங்கம் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளுக்குப் பயந்துபோய், இனியாவது அவர் - கொஞ்சம் அடக்கி வாசிப்பார் என்றுதான் ஆளுந்தரப்பில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஜெனரல் அடங்கவில்லை. தான் நாடாளுமன்றத்துக்கு வந்தமையானது, அரசுக்கு ஏற்பட்ட மாபெரும் அவமானமாகும் என்று ஆட்சியாளர்களை அவர் நையாண்டி செய்திருக்கின்றார்.

அந்த நையாண்டித்தனம் அரசுக்குப் பிடிக்குமா? அதனால், கடந்த 05 ஆம் திகதியன்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்ளாமல் ஜெனரல் பொன்சேகா தடுக்கப்பட்டார். இதை அவர் அடக்கி வாசியாததன் - பக்க மற்றும் பின் விளைவாகவே கருத முடிகின்றது.

இதேவேளை, சபை அமர்வில் சரத் பொன்சேகா கலந்து கொள்ளாமல் தடுக்கப்பட்டதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கண்டித்துள்ளார்கள். சபை அமர்வுக்கு ஜெனரலை அழைத்து வராததன் மூலம், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமையை அரசு மீறியிருக்கின்றது என - எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மன்றில் பேசியுள்ளார்.

இதில்; புதினம் என்னவென்றால், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்சவும், ஜெனரல் பொன்சேகாவுக்காக சபையில் வாதிட்டிருக்கின்றார். கடந்த காலங்களில் பொன்சேகாவை மிகவும் கடுமையான தொனியிலும், வார்த்தைகளாலும் தாக்கிப் பேசி வந்தவர்களில் விமல் வீரவன்ச முக்கியமானவர்.

ஆனால், கடந்த 05 ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் வைத்து பொன்சேகாவுக்காக விமல் பேசியிருக்கின்றார். நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்கு அன்றைய தினம் ஜெனரல் பொன்சேகாவை அனுமதித்திருக்க வேண்டுமென்றும், பொன்சேகா தடுக்கப்பட்டமையை தாம் ஆதரித்தால் - எதிர்காலத்தில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்தக் கதி ஏற்படலாமென்று - தான் அஞ்சுவதாகவும் விமல் கூறியிருக்கின்றார்.

வீரவன்சவின் இந்த உரையை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியாமல், ஆச்சரியம் நிறைந்த தொனியில் பலர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றார்கள். இது குறித்து நண்பரொருவர் நம்மிடம் பேசியபோது, கோழி நனைவது குறித்து ஓநாய்க்கு என்ன கவலையாம் என்று நக்கல் செய்தார்.

உண்மையாகச் சொன்னால், கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலங்களில் - போதும் போதும் என்கிற அளவுக்கு உள்ளூரிலும், உலக மட்டத்திலும் அரசாங்கம் தனது பெயரைக் கெடுத்துக் கொண்டு விட்டது. இருந்தாலும், அவை குறித்து அரசாங்கம் - பெரிதாக அப்போது அலட்டிக் கொள்ளவில்லை. தனது இலக்குகளை அடைவதிலேயே குறியாக இருந்தது.

ஆனால், இப்போது ஆட்சியாளர்களின் கனவுகள் பலித்திருக்கின்றன. அவர்கள் நினைத்தவைகளில் மிக அதிகமானவற்றை அடைந்து விட்டார்கள். அசுரத்தனமானதொரு பெரும்பான்மையுடன் ஆட்சியொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. இனி - அடுத்த கட்டம், ஆட்சியை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதுதான்.

ஆனால், அவ்வாறு வெற்றிகரமானதொரு ஆட்சியை நடத்துவதற்கு ஆயிரத்தெட்டுத் தடைகள் இருக்கின்றன. அதில் முக்கியமானது நிதிப் பிரச்சினை!

இலங்கையின் நிதி நிலைமை மிகவும் மோசமாய் உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் கவலை தெரிவித்திருக்கின்றது. வெளி உலகில் இலங்கை கடன் பெறுவதென்பதும் அத்தனை சுலபமில்லை. கடந்த காலங்களில் உதவி வழங்கும் நாடுகளுடன் சண்டித்தனம் பண்ணி விட்டு, இப்போது உதவி என்று போய் எந்த முகத்துடன் நிற்பது? அதனால்தான், மிக அவசரமாய் தம்மை மிக நல்ல பிள்ளைகளாகக் காட்ட வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

அதன் பொருட்டுத்தான் - சரத்பொன்சேகா நாடாளுமன்றம் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டார், திஸ்ஸநாயகம் மன்னிக்கப்பட்டார். மேர்வின் சில்வா ஊடகப் பிரதி அமைச்சுப் பொறுப்பிலிருந்து கழற்றியெடுக்கப்பட்டார். (மேர்வின் சில்வாவை ஊடகப் பிரதி அமைச்சராக நியமித்ததைக் கண்டித்து சர்வதேச அமைப்புக்கள் அறிக்கை விட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது)

அரசின் இந்த செயல்களை உலகம் வரவேற்றிருக்கின்றது. அமெரிக்காவும், இன்னும் சில நாடுகளின் அமைப்புகளும் திஸ்ஸநாயகத்துக்கு ஜனாதிபதி வழங்கிய பொதுமன்னிப்பை புகழ்ந்திருக்கின்றன. இதைத்தான் ஜனாதிபதியும் எதிர்பார்த்தார்.

காலியாகிப் போய்க்கிடக்கும் அரசின் கஜானாவை நிரப்புவதற்கும், எதிர்கால வரவு செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையை ஈடு செய்வதற்கும், பணக்கார நாடுகளின் முன்னால் நமது ஆட்சியாளர்கள் பாத்திரமேந்த வேண்டி யுள்ளது. அதனால், நாளை அல்லது நாளை மறுநாள் - திஸ்ஸநாயகம் மன்னிக்கப்பட்டமை போன்று - இன்னும் சில அதிசயங்களும் நிகழலாம். அது குறித்தெல்லாம் நாம் ஆச்சரியம் கொள்வதற்கு ஒன்றுமில்லை.

இதேவேளை, இந்த ஆட்சியில் நடப்பதையெல்லாம் அனைவரும் சும்மா பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்கிறதொரு நிலை அல்லது மனோபாவம் உருவாகி வருவதையும் காணக் கூடியதாகவுள் ளது. இதற்கு மிக முக்கிய காரணம், பலமானதொரு எதிர்க்கட்சி இல்லாமல் போனமையாகும். குறிப்பாக, ஐ.தே.கட்சி அடைந்துள்ள வீழ்ச்சியும், அந்தக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளும் ஆளுந்தரப்பாருக்கு இன்னும் சாதகமாக அமைந்து போய்விட்டது.

குறிப்பாக ஐ.தே.கவுக்கு ரணில் தலைவராக இருக்கும் வரை எதிர்க்கட்சி குறித்து, அரசுக்கு எந்தவிதக் கவலையும் இல்லை என்கிற நிலை உருவாகியுள்ளது. அதனால்தான், தொடர்ந்தும் ரணில் விக்ரமசிங்கவே எதிர்க்கட்சித் தலைவராக இருக்க வேண்டும் என அனைத்துக் கடவுள்களிடமும் பிரார்த்திக்கின்றேன் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கடந்த வாரம் நாடாளுமன்றில் கூறியிருக்கின்றார்.

வெளிப்படையாகச் சொன்னால், எதிர்க்கட்சித் தலைவராக ரணில் இருப்பதென்பது, எதிர்த் தரப்பினரை விடவும், ஆளுந்தரப்பாருக்கே சாதகமும், சந்தோசமும் உள்ள விடயமாக மாறிப் போயிருக்கிறது.

இந்த நிலையில், ஐ.தே.கவின் தலைமைப் பதவியிலிருந்து ரணிலைத் தூக்குவதற்கான நடவடிக்கைகள் கட்சிக்குள்ளும், கட்சிக்கு வெளியிலும் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, ஐ.தே.கவின் தலைமைத்துவ ஆசனத்தில் - முன்னாள் ஜனாதிபதி ரணசிங்ஹ பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாஸவை அமர்த்துவதற்கான முன்னேற்பாடுகள் நிகழ்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

சஜித் - அதிகம் அலட்டிக் கொள்ளாமல், தனது அரசியலை வெற்றிகரமாகக் கொண்டு செல்லும் ஒருவர். தந்தையின் அரசியல் நுட்பங்கள் மற்றும் ஆளுமைகள் இவரிடமும் ஏதோ ஒரு விதத்தில் இருக்கின்றன. ஆனால், தோல்விகளுக்கு மேல் தோல்விகளைக் கண்டு, துவண்டு போய்க் கிடக்கும் ஐ.தே.கட்சியை தலைமையேற்றுக் கொண்டு செல்வதற்கான திறமை இவரிடம் இருக்கின்றதா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டியுள்ளது.

இது தவிர, ஐ.தே.கட்சியை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் வகையில், புதிய தலைமையொன்றிடம் ஒப்படைத்தாலும் கூட, ஆளுங்கட்சிக்கு அச்சுறுத்தலானதொரு நிலைக்கு அக்கட்சியை மாற்றியெடுப்பதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும்!

ஆக, ஐ.தே.கவுக்குள் என்னதான் சிறப்பான மாற்றங்கள் நிகழ்ந்தாலும், இப்போதைக்கு அது ஆளுங்கட்சிக்குச் சவாலாக அமையாது!

இதேவேளை, ஐ.தே.கட்சிக்கு இரண்டு சிறப்பான அடையாளங்கள் உள்ளன என்று அரசியலில் ஒரு பேச்சுண்டு. ஒன்று: அது முதலாளிகளின் அல்லது வர்த்தக சமூகத்தின் கட்சி எனும் அடையாளம். இரண்டாவது: பெருந்தேசியக் கட்சிகளுள் முஸ்லிம்களின் ஆதிக்கம் அல்லது முஸ்லிம்களின் ஆதரவு கூடிய கட்சி என்கிற அடையாளமாகும்.

ஆனால், இப்போது அந்த இரண்டாவது அடையாளத்தையும் ஐ.தே.க. இழந்து வருகிறது. முன்பெல்லாம், ஐ.தே.கவின் தலைவர்களாக முஸ்லிம்கள் பலர் இருந்தனர். ஆனால், இப்போது அந்தக் கட்சியின் மூத்த முஸ்லிம் தலைவர்களெல்லோரும் ஓரங்கட்டப்பட்டு வருவதாக முஸ்லிம்கள் மத்தியில் ஒரு மனக்குறை உண்டு. இவ்வாறானதொரு நிலையினால், ஐ.தே.கவின் முக்கியஸ்தர்களாக இருந்த பல முஸ்லிம் அரசியல்வாதிகள் அந்தக் கட்சி நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கிப் போயுள்ளதைக் காண முடிகிறது.

உதாரணமாக, ஐ.தே.கட்சியைச் சேர்ந்த முஸ்லிம்களில் ஒருவரைக் கூட, இம்முறை தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அந்தக் கட்சி நியமிக்கவில்லை. இது முஸ்லிம்கள் மத்தியில் கடுமையான தொரு மனக்கசப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

-மப்றூக்-

(26 ஆம் பக்கம் பார்க்க)



# பிறக்கும் சிசுக்களுக்கு பூரணசத்துக்களை கொண்டமைந்த ஆகாரமான தாய்ப்பால்

**-மீரா**

பிறக்கும் குழந்தைகளுக்கு தாய்ப்பாலே மிகச்சிறந்த சத்துகள் நிறைந்த 'ஆகாரம் என்பது தற்போது ஆதாரபூர்வமாக நிருபிக்கப்பட்டுள்ளது. எனினும், தாய்ப்பாலில் அடங்கியுள்ள சேர்க்கைகள் தாய்மாருக்கு தாய்மார் வேறுபடுகிறது. இவ்வேறுபாடானது தாய்மார் உள்ளெடுக்கும் உணவு, பரம்பரை வழியிலான காரணிகள் என்பவை காரணமாக நிர்ணயிக்கப் படுகிறது. புதிதாக பிறந்த குழந்தைக்கு உடனடியாக தாய்ப்பால் கொடுக்கப்படுவது அவசியத்திலும் அவசியமாகிறது.

குழந்தை பிறந்த முதல் நாளிலிருந்து தாயின் முலைப்பாலின் உற்பத்தி 3 கட்டங்களை உள்ளடக்கியதாக உள்ளது.

குழந்தை பிறந்து 5 நாள் வரைக்கும் இந்த தாய்ப்பாலானது 'கொலஸ்ட்ரம்ஸ்' என அழைக்கப்படுகிறது. இந்த தடிப்பான, எண்ணெய் போன்ற சாடையான மஞ்சளான திரவமானது மிகவும் உயர்தர புரதம் மற்றும் பாதுகாப்பு சேர்க்கைகளான இமியுனோ குளோபிலின், லக்டோபெரின், லைசோஸைனம், நியூகிளியோடைட்ஸ் மற்றும் ஒலி கோசக்கரைட்ஸ் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. மேலும், கொலஸ்ட்ரம்ஸ் ஆனது உயர்தர கனியுப்புகளை உள்ளடக்கியுள்ளது. எனவே, இப்பாலினை குழந்தை உள்ளெடுக்கிறதா என்பதை தாய் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தாய்ப்பாலானது 6ஆம் நாளில் இருந்து 10 நாட்கள் வரைக்கும் உயர்தரத்தில் லக்டோஸையும் கொழுப்பையும் உள்ளடக்கிய தாகவுள்ளது.

தாய்ப்பாலானது 10 நாட்களின் பின்னர் கூடிய அல்லது குறைந்த நிலையான தன்மையைக் கொண்டதாக இருக்கும். இது தற்போது பூரணமான தாய்ப்பால் என அழைக்கப்படும்.

100 மில்லிலீற்றர் பூரணமான தாய்ப்பாலானது சத்துகளை அண்ணளவாக பின்வரும் அளவுகளில் கொண்டதாக இருக்கும். 1.2 கிராம்-புரதம், 4 கிராம்-கொழுப்பு, 7.4 கிராம்-லக்டோஸ் (வெல்லம்/ பிரதானமாக காபோவைதரேற்று). 1-1.2 கிராம்-ஒலிகோசக்கரைட்ஸ் (ப்ரிபயோட்டிக் காபோவைத ரேற்றுநார்) இவை தவிர மேலும் பல்வேறு கனியுப்புகள், விற்றமின்கள் அடங்கியுள்ளன.

தாய்ப்பால் ஒலிகோசக்கரைட்டுகள் (Human Milk Oligosaccharides-HMOs) அண்மைக்காலமாக தாய்ப்பாலின் ஒலி கோசக்கரைட்டுகள் தொடர்பாக அதிகளவு ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன. இந்த சத்தானது புரதத்துக்கு நிகரான சத்தாகும். பாரியளவில் இது உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஒலிகோசக் கரைட்ஸ் ஆனது 5 தொடக்கம் 10 தனியான சிறிய காபோவைதரேற்று மூலக்கூறுகளால் (இவை மொனோசக்கரைட்ஸ் என அழைக்கப்படும்) ஆக்கப்பட்டதாகும்.

(17ஆம் பக்கம் பார்க்க)



# த.தே. கூட்டமைப்பின் புதிய அறிவிப்புகள் நல்ல சமிக்ஞைகளே! ஆனால்...?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த வாரம் விடுத்துக் கொண்டிருக்கும் அறிவிப்புகள் பெரும்பாலும் நல்ல சமிக்ஞைகளாகவே இருக்கின்றன. ஆனால், இந்த நிலைப்பாடு ஒரு செயற் திட்டத்தின் அடிப்படையிலும் விஞ்ஞான பூர்வமாகவும் இருக்குமானால் அதை வரவேற்கலாம்.

அரசாங்கத்துடன் ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் இணக்கப்பாட்டுக்கு வருவது நல்லது. அத்துடன் பாதிக்கப் பட்ட மக்களின் தேவைகளில், நலன்களில், அவர்களுடைய எதிர்காலம் தொடர்பாக சில முக்கியமான விடயங்களில் ஒத்துழைப்பதும் அவசியமானது.

இன்றைய அரசியற் சூழலில் தமிழ் மக்களின் உடனடி நலன்களைப் பாது காக்கவும் நீண்டகால அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவும் இது ஒரு தவிர்க்க முடியாத சந்தர்ப்பமும் தேவையான மார்க்கமுமாகும். ஆனால், இதற்குக் கூடிய விழிப்புத் தேவை.

மகிந்த ராஜபக்ஷவின் அணுகுமுறையும் அவருடைய அரசாங்கம் இப்போது பெற்றிருக்கும் மூன்றில் இரண்டு பங்கை எட்டுகின்ற ஆதரவுப் பலமும் அவரைக் கொண்டு பல காரியங்களையும் செய்விக்க உதவும். இதை அதற்குரிய விழிப்போடும் எச்சரிக்கையோடும் கையாளவேண்டும். அதுவே முக்கியமான சவால்.

ஏனெனில் சிங்கள அரசியல் பொறிமுறை அதன் இராஜதந்திரம் என்பன மிகவும் வளர்ச்சியடைந்தவை.




ஆகவே அவற்றை எதிர் கொள்வதற்கு தமிழ்த்தரப்புக்கும் அதற்குரிய வளங்களும் அணுகுமுறைகளும் தேவை.

இப்படி இந்தப் பத்தியை எழுதும் போது சிலருடைய இரத்தம் சூடேறலாம். அவர்கள் கூட்டமைப்பின் மீது இப்போதே கடுமையான கோபத்தோடிருக்கிறார்கள். எந்த அடிப்படையில் கூட்டமைப்பு செயற்படவுள்ளது என்ற தெளிவில்லாமலே அரசாங்கத்துடன் சேர்ந்து சம்மந்தப்பட்ட சில எம். பி மார் மட்டும் தங்கள் நலனை அடையப் பார்க்கிறார்கள் என்று சந்தேகிக்கிறார்கள்.

சிலரோ இதை வேறு விதமாக நோக்குகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை எந்த நிலையிலும் தமிழ்க்கட்சிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்காமல், இணக்கத்துக்குப் போகாமல்; மாசு மறுவற்று இருக்க வேண்டும். இப்படியான நிலைப்பாட்டினால் மக்களுக்கு பாதிப்புகள் ஏற்பட்டாலும் பரவாயில்லை. ஆனால், விட்டுக் கொடுக்கவோ நட்புப் பாராட்டவோ கூடாது.

இன்னொரு சாராரின் பார்வை வேறு விதமானது. அது கூட்டமைப்பு ஒரு போதும் சரியான தீர்மானத்தை நீண்ட காலப் பார்வையோடு செயற்படுத்தாது, வெறும் பத்திரிகைப் பரபரப்பை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என்பது.

இத்தகைய ஒரு பின்னணியில், தமிழ்த்தேசியவாத சக்திகளின் இந்த விதமான நெருக்கடி சார்ந்த பார்வை கூட்டமைப்புக்குச் சில சங்கடங்களையும் உண்மையான நெருக்கடிகளையும் கொடுக்கத்தான் போகின்றன. சில பிரிவினர் கூட்டமைப்பை கடுமையாகச் சாடப் போகின்றனர். ஆனால், இதையிட்டு கூட்டமைப்பு தளர்ந்து போகக் கூடாது. ஆனால், அதேவேளை நேர்மையாகச் செயற்பட வேண்டிய கடப்பாடும் அதற்குண்டு.



அதாவது கடந்த காலங்களைப் போல வெறும் சாட்டுப் போக்குகளைச் சொல்லிக் காலத்தைக் கடத்த முடியாது என்பது இந்தத் தடவை கூட்டமைப்பு எதிர் கொள்ளப் போகும் சவால்களில் முக்கியமானது.

ஆகவேதான் இந்த முறை இத்தகைய ஒரு நிலைப்பாட்டுக்கு அது தன்னை வடிவமைக்கத் தொடங்கியுள்ளதோ என்று சிந்திக்கத் தோன்றுகிறது. அதாவது ஒரு விஷப் பரீட்சைக்கு.

தவிர, மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி முறையில் பொருத்தமான அரசியல் நிலைப்பாட்டை எடுப்பதன் மூலமே எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் கூட்டமைப்புச் சிந்தித்திருக்கக் கூடும். இது முக்கியமானது.

— அருள் மனோகரன்

ஏறக்குறைய இத்தகைய ஒரு நிலைப் பாட்டைத்தான் கடந்த தேர்தலின்போது டக்ளஸ் தேவானந்தாவும் எடுத்திருந்தார். அவருடைய அரசியல் எதிர்காலத்தையும் அவருடைய கோணத்திலான அரசியலையும் முன்னெடுக்க வேண்டுமானால் அரசாங்கக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவது தவிர்க்க முடியாது என்பதை டக்ளஸ் விளங்கியிருந்தார்.

அத்தகைய ஒரு விளக்கத்தை இன்று சம்மந்தனும் பெற்றிருக்கிறார் எனலாம். இது சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு எடுக்கப்படும் முடிவாகும். அதேவேளை எதிர்த்தரப்பை ஒரு வகையில் நெருக்கடிக்குள்ளாக்கும் செயலுமாகும்.

அதாவது, நாங்கள் சமாதானத்துக்கும் அமைதிக்கும் ஒத்துழைப்புக்கும் ஐக்கியத்துக்கும் தயார். அப்படியென்றால் அவற்றுக்கான பயணங்களை ஆரம்பிக்கலாம் என்பதே இதன் செய்தியாகும்.

தமிழ்த் தேசியவாதக் கட்சி ஒன்று இப்படி அரசாங்கத்தரப்புக்கு பகிரங்கமாகவே ஆதரவளிப்பது நீண்டகாலத்துக்குப் பின்னர் இதுவே முதற் தடவையாகும். இந்த அறிவிப்பானது, சிங்களத் தேசியவாதச் சக்திகளை கட்டுப்படுத்தக் கூடியது.

சிங்களத் தேசியவாதச் சக்திகள் எப்போதும் தமிழ்த் தேசியவாதச் சக்திகளில்தான் பலம் பெறுகின்றன. அவற்றில் தான் தமக்கான ஊட்டத்தைப் பெற்று உயிர் வாழ்கின்றன. அதைப் போல தமிழ்த் தேசியவாதச் சக்திகளுக்கும் சிங்கள தேசிய வாதச் சக்திகள் தேவையாக இருக் கின்றன.' சிங்கள தேசியவாதம் அதன் தீவிர நிலைப் பாடுகளை வைத்தே உயிர் வாழ்கிறது என்று ஒரு தடவை சிங்கள ஊடகவியலாளரான நண்பர் ஒருவர் சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது.

எனவே, இந்த விளக்கத்தின் படி முதலில் சிங்களத் தேசிய வாதச் சக்திகளை கட்டுப் பாட்டுக்குள்ளும் அமைதிப் பிராந்தியத்துக்குள்ளும் கொண்டு வரவேண்டுமானால் தமிழ்த் தேசியவாத சக்திகள் தேவை கருதி நிதானமாகவும் புதிய அணுகு முறையிலும் விடயங்களைக் கையாள வேணும்.



கடும்போக்கைக் கைவிட்டு, கடும்போக்காக பேசுவதைத் தவிர்த்து, அரசாங்கத்துடன் இணங்கி, ஒத்துழைத்து பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பது என்று அறிவிக்கும் போது எதிர்ச்சக்திகள் நிலை தடுமாறும்.

ஏனென்றால் அந்த எதிர்த்தேசிய வாதச் சக்திகள் அமைதியை, தீர்வை எதிர்ப்பதற்கான துரும்புகள் இப்படி அதிர்ச்சிகரமாக எடுக்கப்படும் முடிவுகளில் கிடைக்காமற் போகும். இது ஒரு வகையான அரசியற் பொறிமுறையே. இதனால் அரசாங்கம் சாட்டுப் போக்குகளைச் சொல்ல முடியாத நிலை ஏற்படும்.

ஆகவே கூட்டமைப்பின் இந்த மாதிரி அறிவிப்புகளை முதலில்; வரவேற்கலாம்.

அரசாங்கத்துக்கு இப்போது பல நெருக்கடிகள் இருக்கின்றன. நாட்டின் அபிவிருத்தி, வேலைவாய்ப்புப் பிரச்சினைகள், சம்பள உயர்வு, இராணுவத்தை தொடர்ந்து எப்படிக் கையாள்வது என்ற விவகாரம், இனப்பிரச்சினைக்கான தீர்வு, போர்க்குற்றப் பிரச்சினை, அகதிகளுக்கான மறுவாழ்வு, யுத்தத்தின் பின்னரான மீளமைப்பு போன்ற அவசிய பிரச்சினைகளால் அரசாங்கம் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நெருக்கத்துக்கு வருவதன் மூலம் பல நெருக்கடிகளில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம். அத்துடன் பொருளாதார நிலைமைகளில் முன்னேற்றத்தைக் காணலாம்.

அதாவது பிரச்சினை தீர்க்கப்படுகிறதோ இல்லையோ மனித உரிமைகள் விவகாரம், போர்க்குற்றச் சாட்டு, அகதிகளின் பிரச்சினை போன்ற வெளியுலக அழுத்தங்களைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசாங்கத்துக்கு இது உதவும்.

அத்துடன் நாடுகடந்த தமிழீழம் என்ற புலம் பெயர் தமிழர்களின் அல்லது விடுதலைப் புலிகளின் ஆதரவுச் சக்திகளின் வெளியுலக எழுச்சியை முடிவுக்குக் கொண்டு வரலாம். அல்லது அதை வலுவிழக்கச் செய்யலாம் என அரசாங்கம் நம்புகிறது.

மேலும், ஜே.வி.பி இப்போது வடக்குக் கிழக்கில் தன்னுடைய அரசியல் வேலைகளை தீவிரப் படுத்தியிருக்கிறது. குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்துதல், தமது பழைய உறுப்பினர்களைத் தேடிக்கண்டு பிடித்து மீண்டும் அந்த உறவைப் புதுப்பித்து அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதற்காக அது முயற்சிக்கிறது.

மேதினத்துக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் ஜே.வி.பி. யாழ்ப்பாணத்தில் ஒட்டிய சுவரொட்டிகள் இதற்குச் சாட்சியம்.

எனவே இத்தகைய நிலைமைகளைக் கொண்ட பின்னணியில் இப்போது ஒரு தரப்பை இன்னொரு தரப்பு அனுசரித்தே ஆக வேண்டிய ஒரு நிலைமை இரண்டு தரப்புகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதால், இரண்டு தரப்புக்களும் சில விட்டுக் கொடுப்புகளுக்கு வந்து சில புதிய எல்லைகளைத் தொடவேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

ஆனால், இதில் யார் வெல்வது, யார் தோற்பது என்பதே முக்கியமானது.

நிச்சயமாக எவரும் தோற்கத்தேவையில்லை. ஒருவர் தோற்றால் அது ஒரு போதும் நிரந்தர அமைதியையோ தீர்வையோ பெற்றுத்தராது. காரணம் எவருடைய தோல்வியின் மேலும் எந்த நிரந்தர அமைதியும் நிரந்தர வெற்றியும் நிர்மாணிக்கப்படுவதில்லை.

ஆகவே வெற்றி தோல்விகளுக்கு அப்பால், அப்படிச் சிந்திப்பதற்கு அப்பால், யார் வெல்வது யார் தோற்பது என்று சந்தேகப்பட்டு அச்சப்படுவதற்கு அப்பால் இரண்டு தரப்புக்களும் சகிப்போடும் நம்பிக்கையோடும் பிரச்சினையைக் கையாள வேணும்.

நிரந்தரமான தீர்வும் நிரந்தர அமைதியும் ஏற்படுமானால் அது இந்த நாட்டுக்கும் இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகுமல்லவா!

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் தமிழர்கள் பட்ட பாட்டை ஓர் அனுபவமாகக் கொண்டால் பல புதிய பிராந்தியங்களில் பயணிக்கக் கூடியதாக இருக்கலாம்.

அதுவே இன்று தேவை.



# உயிர் வலிக்கும் கணங்கள்...!

யுத்தம் முடிவடைந்து, இப்போது ஒரு வருடமாகிவிட்ட நிலையில் நாட்டில் பெரிய அளவில் மாற்றங்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில், பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் அடைக்கலமான பல லட்சம் மக்கள் தொகையில் சில ஆயிரம் பேரே மீள் வாழ்வுக்குத் திரும்பியுள்ளனர். ஏனைய அனைவருக்கும் நிவாரணக் கிராமம் எனப்படும் முகாம்களே தஞ்சமாகியுள்ளன. அந்த மக்கள் போலவே ஒரு வருட வாழ்க்கையை புனர்வாழ்வு முகாம்களில், 'விடுதலையாகி விடுவோம்' எனும் எதிர்பார்ப்போடு கழித்து விட்டு காத்திருக்கிறார்கள்; முன்னைய புலிப்போராளிகள் என முத்திரை குத்தப்பட்டுள்ளவர்கள்.

வன்னிப் பகுதிகளிலிருந்து வவுனியாவுக்குள் மக்கள் உட்பிரவேசித்த போது, படையினர் கூறிய சூசகமான கருத்துக்களை மீளவும் ஒருதடவை நினைவு கூர வேண்டும். 'புலிகளோடு தொடர்புபட்டிருந்தவர்கள் அனைவரும்... எதுவிதமான ஒளிவுமறைவுமின்றி, எமது உறுப்பினர்களிடம் பதிந்துவிட்டு பயமேதுமின்றி போகலாம்' இது ஓமந்தை சோதனைச் சாவடியில் வைத்து கூறப்பட்டது. பின்னர், நலன்புரி முகாம்களுக்கு வந்தபின்னர், ஒரு மாதம் கழித்து... மீண்டும் வந்து ஒலிபெருக்கியில் அறிவித்தார்கள். 'இயக்கத்தில் இருந்தவர்கள் அனைவரும் உடைமைகளோடு வாருங்கள்! உங்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு அளித்து, அதாவது சமூகத்தோடு நீங்கள் வாழக் கூடியதாக மாற்றி ஒருவருட முடிவுக்குள் உங்களை விடுதலை செய்து விடுகிறோம். அப்படி நீங்கள் வராது போனால் இங்கே எவராவது செய்யும் குற்றங்களுக்காக நீங்கள் தான் தண்டனை பெறவேண்டி வரும்!' என்றார்கள்.

யதார்த்தமாகத் தானே சொல்கிறார்கள். ஆகவே, ஒரு வருடகாலத்தை எப்படியாவது கழித்துவிட்டு, பின்னர் குடும்பத்தோடு நிம்மதியாக வாழ்வோம் என அவர்களின் வார்த்தைகளை உண்மையென எண்ணி பதிந்தவர்கள் அனைவரும் பஸ்ஸில் ஏற்றப்பட்டு புனர்வாழ்வு முகாம்களுக்குள் முடக்கப்பட்டனர். சென்ற பின்னர்தானே பலருக்கு, பல மர்மங்கள் புரிந்தன.

பல தகுதிகளில் இருக்கும் பொறுப்பதிகாரிகள், 'இதோ! இந்த ஒரு வருட இறுதிக்குள் உங்கள் அனைவரையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, வெகுவிரைவில்....' மிகுதியை எழுதவே தேவையில்லை அனைவருக்கும் புரிந்துவிடும். அவர்களின் கண்துடைப்பு வார்த்தைகளை நம்பி காத்திருக்கின்றவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் ஏராளம்.

இவ்வாறாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றவர்களில் சிலரை விடுதலை எனும் பெயரில் விடுவிப்பதும் பின்பு மீண்டும் இரகசிய ஆட்கடத்தல்கள் மூலம் பிடித்துச் செல்வதும் பலரறிந்ததே. இப்படி, மீண்டும் ஒரு கண்துடைப்புச் செயற்பாடாக புனர்வாழ்வு முகாம்களில் சாதாரணதர மற்றும் உயர்தர மாணவர்களை ஓரிடத்தில் (வ/வுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவு வளாகம்) இணைத்து கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி வருகிறது அரசு. வெளியிலிருந்து பார்ப்பவர்களின் கண்களுக்கு 'இது எத்தனை பெரிய மனிதாபிமானச் செயல்' எனச் சொல்லத் தோன்றும். ஆனால், இந்த பரிமாணம் பல உள்நோக்கங்களின் உந்துதலினால் தொடங்கப்பட்டது என்பது சிலரைத் தவிர வேறு எவருக்கும் தெரிய வாய்ப்பில்லை. மகா வித்தியாலய ஆசிரியர்களை அழைத்து இந்த மாணவர்களுக்கு கற்பிக்கப்படுகிறது. இந்த மாணவர்கள் இருபத்துமூன்று வயதுக்குட்பட்டவர்களே! மாணவர்கள்தானே என இவர்களை விடுதலை செய்தால் என்ன? கற்கும் சமூகத்தை வெளியில் சுதந்திரமாக கற்க விடலாம்தானே? தடுப்பில் வைத்து படிக்க வைப்பதென்பது அதிக பெறுபேறுகளை எதிர்பார்க்க முடியாததாகும். கிளியை கூண்டினுள் சிறைப்படுத்திவிட்டு பேசச் சொன்னால் பேசுமா? இது ஏன், சம்பந்தப்பட்டவர்களுக்கு புரியவில்லை? இத்தனை வினாக்குறிகளுக்கும் விடை கூற எவருமேயில்லை.

இதேநேரம், புனர்வாழ்வு முகாம்களில் உள்ள இன்னுமொரு தொகுதியினர், மட்டக்களப்பு, பொலநறுவை எல்லைகளில் உள்ள வெலிகந்த, சிங்கபுர போன்ற சிங்களக் கிராமங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். தொழிற்பயிற்சி என்று கூறிவிட்டு, இப்போது காடுகளை வெட்டி வேலை வாங்கப்படுகிறது. அவர்களின் உறவுகள் அதிகளவான பணம் செலவழித்துத் தான் அவர்களை அங்கே சந்திக்கப் போகிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து அங்கு போய்வர, சராசரியாக பத்தாயிரம் ரூபா தேவைப்படுகிறது. சாதாரணமாக அகதி முகாம்களில் உள்ள உறவுகள், பத்தாயிரம் ரூபாவுக்கு எங்கே போவார்கள்? இருப்பவைகளை விற்றுத் தான் வவுனியாவில் இருக்கும் போதே வந்து போவார்கள். இன்று, நிவாரணமே சரிவர வழங்கப்படாத நிலையில், எவ்வாறு இந்த உறவுகள் சந்திக்க தூரதேசம் போகமுடியும்?

இவர்களின் சிக்கல் இவ்வாறிருக்க, இன்னொரு பக்கத்தில் பல பத்திரிகைகள் ஈன இரக்கமில்லாமல் செய்தி வெளியிடுகின்றன. 'முன்னாள் புலி உறுப்பினர்களின் கைவரிசைகள்....' இப்படித்தான் கொட்டை எழுத்துக்களில் செய்திகள் விரிகின்றன. எவராவது கொஞ்சமாவது யோசிக்கிறார்களா? இப்படியான பழிசுமத்தல்கள் தமக்கு இனிமேலும் வரக்கூடாது என்பதற்காகவே புனர்வாழ்வு முகாம் எனப்படும் தடை முகாம்களில் அவர்கள் வேதனையோடு வாழ்கிறார்கள். ஆனால், எதுவுமே சரியாகத் தெரியாமல் கொழும்பிலிருந்து எழுதுகின்ற சில கட்டுரை ஆசிரியர்கள் அவர்களின் வாழ்வில் புயல்காற்றின் அழிவுகளாய் பல அனர்த்தங்களை ஏற்படுத்துகின்றனர். பல பெரும் புள்ளிகளுக்கு 'சல்யூட்' அடித்து, தமது வியாபாரத்தைக் கொண்டு நடத்தும் சில ஊடகங்கள் சிறிதளவாவது சிந்தித்து செய்திகளை வெளியிட வேண்டும்.

ஆகவே, போர் ஓய்ந்து ஒரு வருடம் கடந்துவிட்டது. இவர்களை பகடைக்காயாய் வைத்து ஆடிய ஆட்டங்கள் போதும். இனியேனும் இவர்களுக்கு வாழ்வில் ஒளி கொடுக்க வேண்டும். புனர்வாழ்வு முகாம்களில் விடிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் உறவுகளுக்கு, புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட அமைச்சுகள், அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களும் சரியான, தெளிவான சிந்தனாசக்தி கொண்டவர்களே! எனவே, இனிவரும் நாட்களாவது மாற்றங்களை ஏற்படுத்துமா எனப் பொறுத்திருந்து பார்ப்போம்.

அளம்பிலான் ரமேஷ்



# விடிவுக்காக ஏங்கும் உறவுகள்

**அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

# மன அழுத்தமே அதி உயர் இரத்த அழுத்தத்திற்குக் காரணம்

கேள்வி: ஆண். வயது 28. கடந்த ஒரு வருடமாக பாரம் தூக்கும் உடற்பயிற்சி(Weight lifting Exercises) செய்து வந்துள்ளேன். உடற்பயிற்சியின்போது களைப்படையாமல் உடற்பயிற்சி செய்யும் (Stamina) உடல் வலுவும் உள்ளது. ஆனால், எனது எடை அதிகரிப்பதாக இல்லை. தினமும் நாலு வேளை புஷ்டியான உணவுகளை எடுத்து வருகின்றேன். உடல் எடை அதிகரிக்க - Dietary Supplements என விளம்பரப்படுத்தப்படும் மா உணவு வகைகளை உபயோகிப்பது நல்லதா?

பதில்: எனதும் மற்றும் அநேக மருத்துவர்களினதும் கருத்துப்படி - இந்த உப உணவு வகைகள் தயாரிக்கப்படும் எதுவித தரப்படுத்தல் முறைகளும் பின்பற்றப்படுவதில்லை. அவற்றில் என்ன என்ன சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பது அவற்றின் Label இல் தரப்பட்டிருந்தாலும் உண்மையல்ல.



முதுகெலும்பில் சில்லு விலகியதால் - Slipped Disc சத்திர சிகிச்சை செய்து சுகமாகியுள்ளேன். சத்திர சகிச்சையின் பின்னர் என்னை குதிக்கும் உடல் பயிற்சி (Jumping) எதுவும் செய்யவேண்டாம் என்று வைத்தியர் அறிவுறுத்தியிருந்தார். இப்பொழுது இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. இப்பொழுது நான் குதித்து ஓடும் பயிற்சி (Jog & Run) செய்யலாமா? உடற்பயிற்சிகூடத்தில் (Gymnasium) பயிற்சிகளுக்கு போகலாமா? இப்பொழுது எனக்கு ஒரு கோளாறும் இல்லை. சில வேளைகளில் மட்டும் உடல் களைப்பு ஏற்படும் பொழுது எனது வலது இடுப்பு மூட்டு (Hip Joint) வலிக்கின்றது.

பதில்: பொதுவாக - முதுகெலும்பு சில்லு விலகியதற்கு செய்யப்படும் சத்திர சிகிச்சையின் பின்னர் குறைந்தது 6 மாதத்திற்கு 'குதித்தல்' பயிற்சி செய்யக்கூடாது என்பது விதி. சில்லு அகற்றிய பின்னர் முதுகெலும்பில் ஏற்படும் வெற்றிடத்தில் - குதிப்பதனால் அழுத்தம் ஏற்படும் என்பதால்தான் இந்த அறிவுறுத்தல். குதிப்பது மாத்திரமல்ல, ஓடுதல் மற்றும் குதித்து ஓடுதல் என்பவற்றையும் தவிர்க்க வேண்டும். சிறிது காலத்தின் பின்னர் அந்த இடைவெளி ஓரளவு நிரந்தரமாகி உறுதியாகிவிடும். அதன் பின்னர் பொதுவாக ஓடுதல், குதித்தல் செய்யலாம். நீங்கள் இரண்டு வருடகாலமாக தேகப்பயிற்சிகள் செய்யாமல் இருந்துள்ளீர்கள். எனவே,

ஆனால், எதுவிதமான காரணங்களோ, நோயோ இன்றி - அதி உயர் இரத்த அழுத்தம் மாத்திரமே இருக்குமானால் அதனை ESSENTIAL HYPERTENSION என்று கூறுவார்கள். ஒரு தரம் அதி உயர் இரத்த அழுத்தம் என்று அவதானிக்கப்பட்டுவிட்டால் - ஆயுள் காலம் வரை மருந்து மாத்திரை என்று சீவிக்க வேண்டியதுதான். ஏனெனில், பொதுவாக தடிமல் - காய்ச்சல் போல் ஒரு குறிக்கப்பட்ட நாட்களுக்கு மட்டும் இருந்துவிட்டு போய்விடும் நோயல்ல அதிஉயர் இரத்த அழுத்தம். மருந்து மாத்திரை உபயோகித்து இந்த இரத்த அழுத்தத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். சிகிச்சையை கைவிட்டால் ஒரு வாரத்தில் இரத்த அழுத்தம் அதிகரித்துவிடும். எனவே, வைத்தியர்கள் உங்களுக்கு உயர் இரத்த அழுத்தம் என்று தீர்மானிப்பதற்கு கொஞ்சம் நிதானத்துடன் அவசரப்படாமல் - பல தடவை அழுத்தத்தை அளந்துதான் செய்வார்கள்.

உயர் அழுத்தத்திற்கு - சிறுநீரகக் கோளாறுகள், நீரிழிவு, கொலஸ்திரோல் போன்றவை சில வேளைகளில் காரணங்களாக இருப்பினும் பெரும்பாலும் மன அழுத்தம் என்பவை அதி உயர் இரத்த அழுத்தத்திற்கு காரணமாக விளங்குகின்றன. எனவே, உங்களை பரிசோதித்த வைத்தியர் உங்களுக்கு அந்த

பதில்: மன இறுக்கமான சூழலிலிருந்து ஒரு சுதந்திர சூழலுக்கு நீங்கள் வந்திருந்தாலும் - உடல் மட்டும்தான் வெளியே வந்திருக்கின்றதே தவிர மனம் இன்றும் அந்த சூழலிலேயே வாழுகின்றது. உங்கள் உளப்பாதிப்பும், உடல்பாதிப்பும் இப்பொழுது தங்கள் சுயரூபங்களை காட்டத் தொடங்கியுள்ளன. முன்னர் சிறைவாழ்க்கையின் கஷ்டமான ஆரம்ப காலத்தின் பின்னர் - இது தான் இனி வாழ்க்கை - விடிவே கிடையாது. இதை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று மனம் 'அந்த' வாழ்க்கையை ஏற்றுக்கொண்டு அதற்கு அனுசரித்து நடக்கத் தொடங்கியதால் உங்களை உடலும் வருத்தவில்லை.

இப்பொழுது புதுச்சூழல். மனம் இலகுவில் ஏற்றுக் கொள்ளாது. எத்தனை



அவை கொடுக்கப்பட்ட மருத்துவ ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அளவில் கலக்கப்பட்டிருக்கின்றதா என்று எந்த ஒரு பரிசோதனை சான்றிதழும் இணைக்கப்படுவதில்லை. எனவே, இவை நன்மை தருவதைவிட உடலுக்கு ஊறு விளைவிக்கலாம் என்ற சந்தேகம் மருத்துவ உலகில் உள்ளது. நீங்கள் கொஞ்சம் கவனித்துப் பார்த்தீர்கள் என்றால் பொதுவாக இந்த தயாரிப்புக்கள் பிரபல மருந்து கம்பனிகளின் தயாரிப்புக்களாக இருப்பதில்லை என்பதைப் புரிந்துகொள்வீர்கள். ஏன் மருத்துவ உலகில் அங்கீகரிக்கப்பட்ட - தரப்படுத்தலுக்கு ஆளாகின்ற - மருந்து உற்பத்தி நிலையங்கள் இந்த Supplement தயாரிப்புக்களில் ஈடுபடுவதில்லை என்பது ஒரு கேள்விக்குறி. எனது அபிப்பிராயத்தைச் சொல்வதென்றால் - 'அமிர்தமும் அளவுக்கு மிஞ்சினால் நஞ்சாகும்' என்ற அடிப்படையில் சாதாரணமான புரதச் சத்துக்கூட - தினமும் உடலுக்கு தேவையான அளவுக்கு மீறி உண்ணப்படுமானால் சிறுநீரகம் மற்றும் சமிபாட்டு உறுப்புக்களுக்கு நிச்சயம் குந்தகம் விளைவிக்கும். பாரம் தூக்கும் பயிற்சி செய்பவர்கள் பொதுவாகவே நிறைய புரதச்சத்து உணவு எடுக்க வேண்டும். ஆனால், 'நிறைய' என்ற சொல்லின் அளவு எவ்வளவு என்று குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனிக்கவும். நீங்கள் இந்த ஊர் பேர் தெரியாத உப உணவு வகைகளைத் தவிர்த்து வழமையாக உண்ணும் புரதங்களை உணவுகளில் சேர்த்து வாருங்கள். அத்துடன் ஒரே உணவை தினமும் உண்பதால் உடலுக்கு அந்த உணவு (Complacent) பழகி அதிலிருந்து அதிகளவு சத்து உறிஞ்சப்படுவதும் குறையலாம். எனவே, வாரத்துக்கு வாரம் உணவுப் பொருட்களை மாற்றுங்கள். பொறுமையும் ஊக்கமும் உங்கள் உடற்பயிற்சியும் உடல் எடை அதிகரிக்க உதவும்.

கேள்வி: ஆண். வயது 27. இரண்டு வருடங்களுக்கு முன்னர்

முதுகெலும்பு பகுதியில் அழுத்தம் கொடுக்கக்கூடிய பயிற்சிகளை மெதுவாக ஆரம்பிக்கவும். சத்திர சிகிச்சையின் பின்னர் முதுகெலும்புக்கு பக்க தசைகள் உறுதியாவதற்கு சில பயிற்சிகள் செய்ய அறிவுறுத்தியிருப்பார்கள். அவற்றை நீங்கள் தொடர்ந்து செய்து வருகின்றீர்கள் என்று அனுமானிக்கின்றேன். அவ்வாறு இல்லையெனில், அவற்றை மீண்டும் செய்ய மெல்ல மெல்ல தொடங்கவும். எதற்காக Jogging என்கின்ற குதித்தோடல் பயிற்சியை செய்ய தீவிரம் காட்டுகின்றீர்கள். இந்த பயிற்சி கடின தரையில் செய்யும்போது முதுகுப் பக்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் பயிற்சியாகும். முதலில் Brisk Walking என்கின்ற வேக நடைப்பயிற்சியை ஆரம்பியுங்கள். பின்னர் படிப்படியாக மற்றப் பயிற்சிகளை செய்யலாம். GYM பயிற்சிகளை மருத்துவரின் ஆலோசனை கேட்டு தொடங்கவும். பயிற்சிகளின் போது முதுகுவலி - வேறுவலி ஏற்பட்டால் உடனே பயிற்சிகளை நிறுத்தி வைத்திய ஆலோசனை பெறவும்.

கேள்வி: வயது 38. ஆண். கடந்த இருவாரங்களுக்கு முன்னர் தலைவலி என்று மருந்தெடுக்க சென்றபோது - பொது வைத்தியர் எனது BLOOD PRESSURE ஐ அளந்து எனக்கு அதி உயர் இரத்த அழுத்தம் இருப்பதாக கூறினார். ஆனால், அன்று மருந்து எதுவும் தரவில்லை. தொடர்ந்து ஒரு வாரம் காலை, மாலை இரத்த அழுத்தத்தை அளந்து குறித்துக்கொண்டு வரும்படி கூறி - ஒரு வாரம் கழிந்து - எனக்கு அதி உயர் அழுத்த நோய் இல்லை எனவும் மன இறுக்கமில்லாத வாழ்க்கையை நடத்தும்படியும் அறிவுறுத்தினார். ஏன் என்னை பலதடவைகள் இரத்த அழுத்தத்தை அளந்து குறிக்கும் படி கூறினார் என்பது எனக்கு புதிராக உள்ளது. முதல் நாளில் இருந்த அதி உயர் இரத்த அழுத்தம் பின்னர் காணாமல் போனது எப்படி?

பதில்: அதி உயர் இரத்த அழுத்தம் என்பது ஒரு நோயின் அறிகுறியாகவே பொதுவாகக் கருதப்படுகின்றது.

வேளையில் இந்த அதி உயர் இரத்த அழுத்தம் நோயின் காரணமாகவா அல்லது தற்காலிக மன இறுக்கம் STRESS காரணமாகவா என்பதை சிகிச்சை மூலம் அறிந்து கொள்வதற்காகவே - பல நாட்கள் பல முறை இரத்த அழுத்த அளவீடு செய்யச் சொல்லியிருக்கிறார். இத்தகைய பொது உணர்வு (COMMONSENSE) விஞ்ஞான அடிப்படை விளக்கம், மனிதாபிமானம் கொண்ட மருத்துவர் உங்களுக்கு கிடைத்திருப்பது உங்கள் நல்ல காலம் என்று எண்ணுகின்றேன்.

மேலும் தற்பொழுது உங்களுக்கு இரத்த அழுத்த நோய் இல்லாவிடினும், இப்படி சில வேளைகளில் - மன அழுத்தம் மற்றும் மன இறுக்கம் காரண மாக உங்களுக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்கும் குணம் இருக்குமானால் நீங்கள் வருடத்திற்கு இரண்டு தடவை களாவது இரத்த அழுத்த பரிசோதனை செய்து கொள்வது அவசியம். ஏனெனில் அடிக்கடி மன இறுக்கத்தால் பாதிக்கப்படும் மனிதர்கள் - அதி உயர் இரத்த அழுத்த நோய்க்கு ஆளாவது அறியப்பட்ட கருத்து ஆகும்.

கேள்வி: ஆண். வயது 28. திருமணமாகவில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தில் நிரபராதியான நான் இரண்டு வருடம் ரிமாண்டிலும் சிறையிலும் கழித்துவிட்டு தற்பொழுது வீடு வந்துள்ளேன். உண்மையில் ஒரு நரகத்தில் இருந்து வந்ததுபோல இருக்கிறது. சுமார் இருபது கைதிகளுடன் ஒரே அறையில் இருக்க வேண்டும். மாறி நிற்கவும் முடியாமல், தூங்கவும் முடியாமல் பட்ட கஷ்டங்கள் எத்தனையோ. இப்பொழுது விடுதலையாகி வந்தாலும் மனம் என்னவோ போலிருக்கிறது. தூக்கம் சரியாக வருவதில்லை. பசியும் அதிகமில்லை. தேகம் முழுவதும் சோர்கிறது. அடிக்கடி தடிமல், காய்ச்சல் ஏற்படுகிறது. வயிற்றுப் பொருமல், வயிற்றோட்டம், மலச்சிக்கல் என்று மாறிமாறி நோய்கள் என்னை வாட்டுகின்றன. எனக்கு உங்களால் என்ன பரிகாரம், ஆலோசனை தரமுடியும்.

தான் இன்பமும் மகிழ்ச்சியும் இருந்தாலும் மனம் அதை ஏற்றுக்கொள்ளும் இடத்தில் இல்லை. போதாக்குறைக்கு 'நம்பிக்கை தராத' எதிர்காலம். இனி என்ன செய்யப் போகின்றேன் என்ற அங்கலாய்ப்பு. எப்படி என்னை இந்த உலகம், குடும்பம், சமூகம் ஏற்றுக்கொள்ளப் போகின்றது என்கின்ற அவநம்பிக்கை - தாழ்வு மனப்பான்மை. எல்லாம் உங்களுக்கு PSYCHOSOMATIC உளவியலினதாகிய உடல்நோயை தந்துள்ளது.

நீங்கள் பழைய நினைவுகள், பழைய அனுபவங்களிலிருந்து விடுபட முயற்சிக்க வேண்டும். இதற்கு உங்கள் குடும்பத்தினர் பக்க பலமாக இருக்கவேண்டும். எதற்கும் முதலில் உங்களை ஒரு முழு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தவும். மருத்துவப் பரிசோதனையில் எதுவித நோய்களும் கண்டறியப்படாவிடில் அதற்கு மருத்துவ சிகிச்சை பெறவும். என்னைப் பொறுத்தவரையில் உங்களுக்கு ஏற்பட்டிருப்பது CONFINED SPACE எனப்படும் அறைக்குள் தொடர்ந்து அடைக்கப்பட்டிருந்ததால் ஏற்பட்ட மனோநிலை. இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது ஜப்பானில் சிறை வைக்கப்பட்டிருந்த அமெரிக்க கைதிகளிடம் இம் மாதிரி கோளாறுகள் காணப்பட்டன.

சரியான மனவள ஆலோசனையும் - நண்பர், உற்றார், உறவினரின் ஆதரவும் இருந்தால் நிச்சயம் நீங்கள் குணமடைவீர்கள்.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர்
என். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு - 14.

ஜப்பானின் டோக்கியோவில் இருந்து 100 கி.மீ. தொலைவில் இருக்கும் ஹகோனில் இருக்கிறது பீஜோல்ஸ் நோவ். இங்கே உள்ள நீச்சல் குளம் தான் ஸ்பெஷல். முழுக்க முழுக்க தண்ணீருக்குப் பதிலாக வைன் மிதக்கும். குடிக்கலாம் அல்லது குளிக்கலாம். கூடவே, பச்சைத் தேயிலைச் சாறும் கலந்திருக்கும். வைன், தோலுக்கு நல்லதாம். தேயில்லை நோய் எதிர்ப்புச் சக்தியைத்



# விடுமுறையை வித்தியாசமாகக் கொண்டாட வித்தியாசமான சில இடங்கள்



தூண்டிவிடுமாம்!

**

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் 21 வருடங்களாக நடந்து வருகிறது கரப்பான்பூச்சி பந்தயம். பந்தயத்தைப் பார்ப்பதைவிட அழகுப் பெண்களைப் பார்க்க வரும் கூட்டம்தான் அதிகம். பியர் போத்தல்களோடு வலம் வருவார்கள் பல நாட்டுப் பெண்கள். கரப்பான்பூச்சியைப் போல பெண்கள் பின்னால் அலைவார்கள் ஆண்கள்!

**

ஜப்பான் சென்றால், நூடுல்ஸிலேயே குளிக்கலாம். 'மிளகு தூவப்பட்ட நூடுல்ஸ் சூப்பில் குளித்தால் தோல் சுத்தமாகும்' என்கிறார்கள். இருந்தாலும், உடம்பு எரியுதே என்று பதறும் கஸ்டமர்கள்தான் இங்கே அதிகம்!

**

காம்பியாவுக்குச் சென்றால், 'நிங்கி நாங்கா ஹன்டிங்' எனப்படும் மனிதக் குரங்கு வேட்டையில் கலந்துகொள்ளலாம். ஒற்றையாகத் தேடலாம். இல்லையென்றால் 'நான் தனியாள் இல்லை' என்று கூட்டமாகத் தேடலாம். குரங்கு முந்திக்கொண்டு உங்களைப் பார்க்காத வரைக்கும் பிரச்சினை இல்லை!

ரஷ்யாவில் காதல் கண்ணாமூச்சியால் குடும்பத்தின் மேல் இளைஞர்களுக்குப் பாசம் குறைவதைக் கவலையோடு சுட்டிக்காட்டினார் பிரதமரின் மனைவியான ஸ்வெட்லனா. உடனே, சென்ற ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் திகதியைக் 'காதலர் தின எதிர்ப்புத் தினம்' என்று அறிவித்து விடுமுறைவிட்டார்கள். இனி, ஒவ்வொரு ஜூலையிலும் குடும்பப் பாசத்தை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள் நாடெங்கும் நடைபெறும்!

**

ஸ்பெயினின் தக்காளித் திருவிழா உலகப் பிரபலம். 'லா டொமாட்டினா' என்று அழைக்கப்படும் இந்தத் திருவிழா, ஆகஸ்ட் மாதம் கொண்டாடப்படுகிறது. ஸ்பெயினின் புனால் நகரத்தில் கொண்டாடப்படும் இந்தத் திருவிழா, 'அந்த நகரத்தில் வாழ்ந்த துறவி ஒருவரைக் கௌரவிக்கும் விதமாகக் கொண்டாடப்படுகிறது' என்று கூறுகிறார்கள். இந்தத் திருவிழாவுக்காக ஒரு வாரத்துக்கு முன்பிருந்தே ஸ்பெயின் தயாராகிவிடும். தக்காளிகளை அடித்து விளையாடி ஊரையே சிவப்பாக்கி விடுவார்கள். அதன் பிறகு, தீயணைப்புத் துறையினர் வந்து, கலன் கலனாகத் தண்ணீர் விட்டு நகரத்தையும் மக்களையும் சுத்தப்படுத்துவார்கள்!



# தக்காளித் திருவிழா

**

தாய்லாந்தில் இந்துக் கடவுளான ஆஞ்சநேயருக்கு நன்றி தெரிவிக்க, 'லோப்பரி குரங்கு பபே' என்கிற விழாவைக் கொண்டாடுகிறார்கள். நவம்பர் மாதம் லோப்பரி என்கிற இடத்தில் மடை நிறையக் காய்கள், பழங்கள், சுவையான உணவுப் பொருட்களை வைத்துக் குரங்குகளுக்கு விருந்து அளிக்கிறார்கள் தாய்லாந்து மக்கள். வருடா வருடம் வருகிற கூட்டத்தைப் பார்த்து, விடுமுறை தினமாக அறிவித்துவிட்டது தாய்லாந்து அரசு!

**

இவ்ரியா திருவிழா இத்தாலியில் பிரபலம். ஒருவரை ஒருவர் ஆரஞ்சுப் பழங்களை வைத்து அடிப்பார்கள். அந்தக் காலத்தில் திருமணமாகும் ஒவ்வொரு பெண்ணும் தன் கன்னித்தன்மையை அரசனுக்குத்தான் முதலில் கொடுக்க வேண்டுமாம். அதற்கு அடுத்துதான் கணவன். வயலெட்டா என்கிற புதுப் பெண், அரசனின் தலையைத் துண்டித்து தன் கற்பைக் காப்பாற்றிக் கொண்டாளாம். வயலெட்டாவைக் கைது செய்ய வந்த அரச படைகளை, இவ்ரியா மக்கள் கல்லால் அடித்து விரட்டினார்களாம். அதன் நினைவாக இப்போது ஆரஞ்சுப் பழத்தால் அடிக்கிறார்கள்!









தொடர்ந்து விமானப் பயணம், பார்ட்டி என ஒன்றரை மாதம் ஐ.பி.எல், கிரிக்கெட்டுக்காகச் சுற்றியதால் நான்கு கிலோ எடை அதிகரித்து விட்டாராம் ப்ரீத்தி ஜிந்தா.

# ஐ.பி.எல்லால் குண்டானார்



விலங்குகள் என்றால் அவ்வளவு பிரியம் சமீரா ரெட்டிக்கு. மும்பை விலங்குகள் காப்பகத்துக்கு அடிக்கடி செல்பவருக்குச் சொந்தமாக விலங்குகள் காப்பகம் அமைக்க ஆசை.

# மிருகங்கள் மீது பிரியம்....!

# கென்யாவில் ஒபாமா தினம்!



அமெரிக்க அதிபர் ஒபாமாவின் பெயரால் 'அதிபர் தினம்' கொண்டாடப்படுகிறது. அந்த நாடு, கென்யா!

கென்யா, கறுப்பர்களின் பூமி. வெள்ளை ஆதிக்கம் நிறைந்த அமெரிக்காவில் முதன்முதலாக கறுப்பரான ஒபாமா, அதிபராக வெற்றி பெற்ற நாள் 2008, நவம்பர் 6. இப்போது, நவம்பர் 6, கென்யாவில் ஒபாமா தினம். இது தேசிய விடுமுறை நாள். ஒபாமாவின் தந்தை ஒரு கென்யர் என்பதும் காரணங்களில் ஒன்று. ஒபாமா வெற்றி பெற்ற அடுத்த நாளே, "உங்களின் வேர்கள் கென்யாவில் இருந்து தொடங்குவதை நினைத்துப் பெருமிதம் அடைகிறோம். உங்களின் வெற்றி பல்லாயிரக்கணக்கான மக்களுக்குத் தூண்டு கோலாக இருக்கும். கென்யாவின் மீது இந்த வெற்றி இன்னும் சிறப்பாக எதிரொலிக்கும்!" என்றார் கென்யாவின் அதிபர் மவாய் கிபாக்கி, இனப்பெருமிதம் பொங்க!.

ஒபாமாவின் வெற்றி ஒட்டுமொத்த கென்ய மக்களின் வெற்றியாகவே பார்க்கப்படுகிறது. அலபாமா நாடும் ஒவ்வொரு வருடமும் இரண்டாவது திங்கள் கிழமையை 'பராக் ஒபாமா தினம்' என்று அறிவித்திருக்கிறது.

"இந்த உலகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் கனவைக் காண எவரும் அஞ்சக் கூடாது என்பதை உங்கள் வெற்றி தெரிவித்திருக்கிறது!" என்றார் நெல்சன் மண்டேலா.

உயிருடன் இருக்கும் ஒருவருக்கு அவரின் வாழ்நாளிலேயே அவர் பெயரால் விடுமுறை அளிக்கப்படுவது உலகத்தில் இதுவே முதன் முறையாம். கறுப்புக்குக் கிடைத்த சிறப்பு!

''அம்மா... அம்மா... என்னோட பிறந்தநாளுக்கு, புதுச்சட்டையும், இனிப்பும் வாங்கித் தாங்கம்மா... நாளைக்கு நான் பள்ளிக்கூடத்தில கொண்டு போய்க் கொடுக்கணும்... நேற்று, நிஷா தன்னோட பிறந்த

## சிறுகதை

நாளுக்காக ரொபி கொண்டு வந்து... எல்லோருக்கும் தந்தாம்மா... அப்போ... நானும் சொன்னேன்... எனக்கும் நாளைக்குப் பிறந்த நாள் நானும் ரொபி கொண்டு வருவேனே என்று... அம்மா...ம்மா.. வாங்கித் தருவீங்களா....?'' தன் தாயிடம் காரணத்தைத் தெளிவாகச் சொன்னாள் தங்கா.

''தங்கா நாங்கள் என்ன வசதியாக சொந்த ஊரில் வாழுவதாக நினைப்பா? அன்றாடம் சாப்பாட்டுக்கே அடுத்தவனை நம்பிக் கிடக்கிறோம்.... இது தெரியாமல் நீ வேற.....'' தாயிடமிருந்து வந்த பதிலைக் கேட்டு சிணுங்கினாள் மகள்.

''அம்மா எல்லாப் பிள்ளைகளும் புது உடுப்பு போட்டுக் கொண்டு வரும்போது.... நான் மட்டும் போட்ட சட்டையையே போட்டுக் கொண்டு போறேன்.... நீங்கள் எனக்கு வாங்கித் தராட்டி, நான் இனிப் பள்ளிக்கூடம் போகமாட்டேன்....'' தங்காவிடமிருந்து வந்த வார்த்தைகள் கண்ணீரோடு வெளிவந்தன. தன் மகளின் அறியாமையை நினைத்தும், தன் ஏழ்மையை நினைத்தும் தேவியால் எதுவும் பேசமுடியவில்லை. விழிகள் கசிந்தன. அழுகை நெஞ்சை அடைக்க ''தங்கா... இங்க பாரம்மா எங்களோட நிலைமை தெரிஞ்சும் நீ இப்படி அடம்பிடிக்கலாமா....? இந்த முகாமில் என்ன உழைப்பிருக்கு...? நான் தான் ஏதாவது உழைக்கிறேனா.....?'' மகளை ஆறுதல் படுத்த முயன்றாள் தேவி.

''நான் கேட்டுக் கொண்டே இருக்கிறேன்... நீங்கள் காரணம் சொல்லுறீங்கள். எனக்கு அந்தக் கதை தெரியாது. வாங்கித் தந்தால்தான் பள்ளிக்கூடம் போவேன். இல்லாட்டி....''

பளார், பளாரென தேவியின் கரங்கள் மகளின் கன்னத்தில் அறைந்தன. கோபம் தீரும் வரை தங்காவுக்கு அடித்தாள். சொன்னால் விளங்காத வயசா? பதினான்கு வயசில் வீட்டு நிலைமை தெரியாதா...? அடிவிழுந்த இடங்களைத் தடவியபடி தங்கா கூடார மூலையில் சுருண்டு கொண்டாள். மகளைப் பார்த்த போது தேவிக்கு துக்கம் இதயத்தைப் பிளந்தது. இருந்தும் என்னிடம் இருக்கிறதா பிள்ளை கேட்டவுடன் கொடுப்பதற்கு. நான் என்ன செய்வது? யாரிடம் கேட்பது?

தங்காவின் அழுகை ஓயவில்லை. அழுதுகொண்டே படுத்திருந்தாள். தன் கேள்வியில் என்ன தவறிருக்குது? தான் பிறந்தநாளுக்காக புதுச்சட்டை கேட்டது தவறா? அந்தப் பிஞ்சின் வாதம் அவளின் வயதோடு ஒப்பிடும் போது சரியானதுதான். தன் வயதை ஒத்த பிள்ளைகள் குதூகலமாக வலம்வர, தானும் அப்படி இருக்க வேண்டும் என்றுதானே குழந்தைகள் விரும்புவார்கள். அந்தக் கனவுகளில் வீட்டுக் கஷ்டம் தெரியவா போகிறது? வன்னியில் இருந்ததைப் போலவே இப்போதைய காலத்தையும் எண்ணிக் கொண்டிருந்தாள் குழந்தை. சிறு மாற்றம் தானே என்பது அவளின் எண்ணம். ஆனால் தமிழரின் அத்தியாயமே மாறியிருப்பதை இந்தப் பாலகி எப்படி அறிவாள்.

தேவிக்கு தங்காவைப் பார்க்கப் பார்க்க அழுகை மேலிட்டது.



# புதுச் சட்டை

ஆத்திரத்தில் அடித்துவிட்டோமே என அவளின் உள்ளம் கனத்துக் கொண்டிருந்தது. சின்னவளின் அறியாமையை நாம்தானே தெளிவுபடுத்த வேண்டும். அதைவிட்டுவிட்டு, அவசரப்பட்டு கோபப்பட்டு விட்டோமே... தேவியின் மனச்சாட்சி குற்றம் சுமத்தியது. வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு எழுந்து தங்காவின் அருகிலே போனாள்.

இவளைக் கண்டதும் மறுபுறம் திரும்பிக் கொண்டாள் குழந்தை. ஆதரவாக கேசத்தை வருடியவள், ''தங்காம்மா.... அழாதேடா.... நான் சொன்னதை கேட்டிருந்தா... அடிச்சிருப்பேனா..... அம்மாவோட கஷ்டம் உனக்குத் தெரியும் தானே. நீ கேட்டது தப்பில்லையம்மா.. ஆனால் எங்கட நிலைமை தெரியாமல் ஆசைப்பட லாமா.... இதென்ன எங்களோட அளம்பில் மாதிரியா... நீ கேட்டவுடனே வாங்கித் தர. இது அகதி முகாம்... நாங்கள் நினைத்தவுடனே எதுவுமே செய்யமுடியாதம்மா... சாப்பாடு தண்ணிக்கே திண்டாட்டம்... யாரும் தர்றதை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறம்.... உனக்கு சட்டை வாங்கிறதென்றால் ஆயிரம் ரூபாயாவது வேணும்.... ஆனால் என்ன செய்வது? ஆயிரம் ரூபாய்த் தாளைக் கண்டே எத்தனை நாளாச்சுது தங்கா... அம்மா சொல்வதைக் கேட்பியா?'' மகளின் தலையை வருடிக் கொண்டே கேட்டாள் தேவி. பதிலேதும் பேசாமல் படுத்திருந் தாள் தங்கா.

பிள்ளைகளுக்கெங்கே புரியப் போகி றது பெற்றோரின் துன்பம். நாங்கள் கஷ் டம் தெரியாமல் பிள்ளைகளை வளர்த்து விட்டோம். பிள்ளைகளில் பிழையில்லை. நாங்கள் தான் குற்றவாளிகள். தாயின் வேதனை தெரியாமல் அடம்பிடிக்கும் மகளை தேற்றுவதிலே முனைந்தாள் தாய் தேவி.

**இராமசாமி ரமேஷ்**

''தங்கா உன்னோட பிறந்த நாளுக்கு விதவிதமாக உடுப்பு வாங்கித் தர எனக்கு ஆசைதானம்மா... ஆனால், இந்த நிலைமையில் என்னம்மா செய்ய முடியும்? ஊரில என்றால், போன வருஷம் செய்த மாதிரி கேக் வெட்டி, போட்டோ எடுத்துக் கொண்டாடியிருக் கலாம். இங்க நிலைமை தெரியும் தானேம்மா? நிவாரணம் தராவிட்டால்... சாப்பாடுமில்லை. இந்த நேரத்தில நீ இப்படி அடம்பிடிக்கலாமா...?''

''அப்பா இருந்திருந்தாலாவது அவரிடம் கேட்டிருப்பேன்.... அவர் தான் இல்லையே. நீங்கள் எப்போதும் இப்படித்தான்'' மீண்டும் பழையபடி வேதனையைக் கிளறினாள் மகள். அவள் சொல்வது சரிதான். வன்னியில் தன் கண்ணில் படும் அழகுப் பொருட் களை எல்லாம் தன் பிள்ளைக்காக வாங்கி அழகுபார்ப்பான் நட்சத்திரன். இன்று....?

''இல்லம்மா தங்கா. அப்பா இருந்திருந்தால் நீ கேட்டிருக்கலாம்.... அப்பாவைத்தான் சந்தேகத்தின் பேரில் கொண்டு போட்டாங்களே... பூஸா முகாமில் உன்னுடைய அப்பா தவித்துக் கொண்டிருக்கிறார்.... நீ என்னடாவென்றால்....'' தேவியால் மேலே பேசமுடியவில்லை. கட்டுப் படுத்த முடியாத அழுகை வெளிக்கிளம் பியது. தாங்கமாட்டாமல் அழுதாள். கணவரின் பிரிவைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தாங்கிக் கொண்டு வாழ்ந்தவள், இன்று பிள்ளையின் கேள்வியால் துடித்துப் போனாள். நட்சத்திரன் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவன் என்று யாரோ சொன்ன தகவலின் அடிப்படையில், பாதுகாப்புப் படையினர் அவனைக் கைது செய்து கூட்டிச் சென்றனர். எத்தனையோ போராட்டங்களின் மத்தியில், போரின் பிடியிலிருந்து தப்பி வந்து முகாம் சேர, அவனுக்கு இப்படியானதொரு கொடுமை.

வன்னியில் நட்சத்திரன், கடற்றொழி லாளர் சங்க சமாசத்தின் செயலாளராக இருந்தது மட்டுமே. செயலாளரை புலிப் பொறுப்பாளர் என யாரோ திரித்துவிட்டார்கள். காரணகர்த்தாக் களை சுதந்திரமாக உலாவ விட்டு விட்டு, அப்பாவிகளைத் தானே இந்த அழகான உலகம் தண்டிப்பது வழமை. கணவன் தடுப்பு முகாமுக்குப் போன பின்னர் இரு தடவைகள் மாத்திரமே பார்க்கப் போயிருந்தாள் தேவி. அங்கு போக உதவியாக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும் உதவிப் பணம் தான் உதவியது. அத்தோடு அவளின் கழுத்து, கைகளில் கிடந்த நகைகளும் பயணத் திற்கு உதவின. இன்னும் அவனை விடவில்லை. அடுத்த சந்திப்புக்கு இன்னும் பத்து நாட்களில் போகலாம். பணம்தான் சிக்கல்.

தாய் அழுவதைப் பார்த்த தங்கா, தாயின் கண்ணீரைத் துடைத்து விட்டாள். பிள்ளையின் நெஞ்சை தேவியின் வேதனை தாக்கியிருந்தது. ''அம்மா அழாதீங்கம்மா.. நான் இனி சட்டை கேட்கமாட்டேன். அழாதீங்க...அப்பா வந்தப் புறம் என் பிறந்தநாள் கொண்டாடுவோம்... அம்மா நாங்கள் அப்பாவைப் பார்க்க எப்ப போறது.....? அப்பாவை விடமாட் டாங்களா....'' பிஞ்சின் விழிகளில் ஆதங்கம். அதன் கேள்வி தேவிக்கு புதிதில்லையே. தன் மகளை இறுக அணைத்துக் கொண்டாள். அழுது கொள்ள மட்டுமே அவளால் முடிந்தது.

இந்த இரு ஜீவன்களின் கண்ணீருக்கு முடிவு யார் கையில்....?

****

# உடலைக் குளிர வையுங்கள்!

கோடையின் பாதிப்பால் எளிதாக சில நோய்களும் வந்து விடுகின்றன. கோடைக்கேற்ற உணவு வகைகளை சாப்பிட்டால் அந்த நோய் பாதிப்பில் இருந்து தப்பிக் கொள்ளலாம்.

கோடைக்காலத்தில் நீர்ச்சத்து அதிக அளவில் தேவைப்படும். காய்கறிகளில் நீர்ச்சத்து அதிகம் காணப்படுகிறது. காய்கறிகளை முழுவதுவதுமாக பச்சையாகவோ அல்லது லேசாக வேக வைத்தோ உட்கொண்டால்தான் அதிக அளவிலான நீர்ச்சத்தை நாம் பெற முடியும். காய்கறி களைப் போன்று பழங்களிலும் நிறைய நீர்ச்சத்து உள்ளது.



காய்கறிகளையும், பழங்களையும் இந்த கோடையில் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக உட்கொள்கிறோமோ அந்த அளவுக்கு நல்லது. கோடை வெயிலில் சிறிது தூரம் நடந்தாலே வியர்த்துக் கொட்டிவிடும். வெங்காயத் தை உணவில் அதிக அளவில் சேர்த்தால் வெப்பத்தால் ஏற்படக் கூடிய அரிப்பு வராது. வெங்காயத்தில் உள்ள 'குவர்ச டின்' என்று வேதிப் பொருள் அதற்கு உதவுகிறது.

வாழைப்பழம் நிறைய சாப்பிடுவதும் கோடைகாலத்தில் நல்ல உடல் நலத்தை தக்கவைக்கும். வெயிலின் தாக்கம் தாங் காமல் நாம், குளிராக எது கிடைத் தாலும் குடிப்போம், சாப்பிடுவோம். எம்முடைய பலவீனத்தைத் தெரிந்து கொண்டுதான் நிறம், நிறமாக குளிர்பானங்களை எல்லாக் கடைகளிலும் விற்கிறார்கள். தாகம் அடங்க வேண்டும் என்பதற்காக, அவற்றை அதிக விலை கொடுத்து வாங்கிக் குடிக்கிறோம்.

இந்த குளிர்பானங்களால் உடலில் தேவையற்ற கலோரி தான் சேருமே தவிர, வேறு எந்தவித பலன்னும் கிடை யாது என்கிறார்கள் டாக்டர்கள்.

இப்போதெல்லாம் ஐஸ் காபி, ஐஸ் டீ ஆகியவையும் அமோகமாக விற்பனை யாகின்றன. ஆரோக்கியம் கருதி இவற்றை தவிர்ப்பது நல்லது. எண்ணெயில் பொரித்து எடுக்கும் சைவ மற்றும் அசைவ உணவு வகைகளை இந்த கோடையில் முடிந்தவரை தவிர்ப்பது இன்னொரு ஆரோக்கிய ரகசியம்.

வெயிலில் வெளியே செல்ல நேரிட் டால் சுத்தமான குடிநீரை கையோடு கொண்டு செல்லுங்கள். இல்லையேல், இளநீரை வாங்கிக் குடியுங்கள்.

மோர், எலுமிச்சை பழச்சாறு ஆகியவை யும் நல்லதுதான். அதேநேரம், அவற்றில் சேர்க்கப்படும் தண்ணீர் சுத்தமானதாக இருக்க வேண்டும். முடிந்தவரை, அவற்றை நீங்களே வீட்டில் தயார் செய்து உட்கொள்வது தான் சிறந்தது.

தினமும் காலை, மாலை இருவேளை குளியுங்கள். காலைக்குளியலின் போது மட்டும் தலை மற்றும் உடல் முழுவதும் தேங்காய் எண்ணெய் தேய்த்து குளிப்பது நல்லது. *

# குருதியில் நினைவெழுதி...!



எல்லாவற்றையுமே நாங்கள் சர்வசாதாரணமாக மறந்து கொண்டிருக்கிறோம். வாழ்வின் வலிமிகுந்த, இரத்த நெடில் வீசுகின்ற கணங்களையெல்லாம் மறந்துவிட்டு ஒன்றுமே நடவாததுபோல் - தோளிலே வீழ்ந்துவிட்ட தூசி ஒன்றைத் துடைத்துவிட்டு சாவகாசமாக நடப்பதைப் போல - எங்களுடைய வாழ்வின் மிகுதிக் கணங்களை கடத்திக்கொண்டிருக்கிறோம்.

புதிய வீடுகள், புதிய வாழ்வு, புதிய சூழல் என எல்லாமே புதிதாய் வந்து சேர்கையில் பழைய நினைவுகள் அவற்றுக்கிடையில் அமுங்கிப் போய் விடுகின்றன. சில நினைவுகள் திட்டமிடப்பட்ட ரீதியிலும் அழிக்கப்படுகின்றன. நினைவுகளை அழித்தல் என்பது ஒரு வரலாற்றை அழிப்பதற்கு சமமாகும். துயர் நினைவுகள் எப்போதுமே வலிகளை மட்டுமே பரிசளிக்கக்கூடியவை என்பதால் அவற்றினை மறப்பதற்கே எல்லோரும் முயல்வர். ஆனாலும் வரலாற்றின் பக்கங்களில் துருத்திக்கொண்டிருக்கும் கறை போல நேர்ந்துவிட்ட 'முள்ளி வாய்க்கால் மரணங்கள்' அத்தனை சுலபமாக ஒட்டுமொத்த தமிழர்களாலும் தூக்கியெறியப்படக்கூடியவையல்ல. ஏறக்குறைய ஒரு வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் கூட இன்னமும் முள்ளிவாய்க்கால் மர்மங்கள் தொடரவே செய்கின்றன.

வன்னி மீதான யுத்தத்தை அரசு ஆரம்பித்த கணத்திலிருந்தே மனிதப் பேரழிவு ஒன்றுக்கான வித்து முளை கொண்டு விட்டது. விமானத் தாக்குதல்கள், எறிகணைத் தாக்குதல்கள், இயற்கை சீற்றங்கள், தொற்றுநோய்கள், பட்டினி என்பவையெல்லாம் போரால் பயந்தோடிய மக்களை இடைவிடாது தொடர்ந்தன. மெல்லமெல்ல மக்கள் கூட்டத்தை இவை விழுங்கத் தொடங்கின. அரச படைகளின் கட்டுப்பாட்டில் வன்னியின் ஒவ்வொரு நகரங்களும் வீழ்ந்துகொண்டிருக்க, மக்கள் தஞ்சமடைந்த பகுதிகளின் பரப்பளவு சுருங்கிக்கொண்டிருந்தது. பாதுகாப்பு வலயம் என்று பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளை போரில் ஈடுபட்ட இரு தரப்புமே கிஞ்சித்தும் கணக்கில் எடுக்கவில்லை. மாறாக தம்முடைய போர் உபாயங்களை இத்தகைய பாதுகாப்பு வலயங்களை மையமாகக் கொண்டே இரு தரப்பும் வகுத்துக் கொண்டன. இதனால் போரில் ஈடுபட்டவர்களுக்கு ஏற்பட்டதை விடவும் போரை வெறுத்த மக்களுக்கே உண்மையில் அதிக இழப்பு உண்டு பண்ணப்பட்டது. வெறுமனே உயிரிழப்புகள் மாத்திரமன்றி உடமை இழப்புக்கள், உளநெருக்கீடுகள் என்பனவும் சிறு பகுதிகளில் தஞ்சமடைந்திருந்த மக்களை வாட்டியெடுத்தன. போரில் தாம் வெற்றியீட்டியதை காட்ட அரசும், தோற்கவில்லை என்பதைக் காட்ட புலிகளும் மக்களையே குறியீடாக பயன்படுத்தினார்கள். எனவே எப்பாடுபட்டாவது மக்களை தம் பக்கம் இழுக்க அல்லது தம்மோடு வைத்திருக்க இரு தரப்புமே பகீரதப் பிரயத்தனம் செய்தன. இதற்காக சாம, தான, பேத, வழிமுறைகளை அவை பிரயோகித்தன. இதில் குறித்தளவு வெற்றியும் அவற்றிற்குக் கிடைத்தன. நாளொரு இடமும், பொழுதொரு முகாமுமாக ஓடியலைந்த மக்கள் கடைசியாக முள்ளிவாய்க்கால் என்ற நெய்தல் நில ஓரமாக சாய்த்துச் செல்லப்பட்டனர்.

இப்போது முள்ளிவாய்க்கால் என்ற சிறுபகுதியே போர் முனையின் மையப்பகுதியாகவும் மாறிப் போனது. மக்களுக்குள்தான் புலிகளும் இருந்தார்கள். அவர்களது காவலரண்கள், மண் அணைகள், ஆயுத தளபாடங்கள், படையணிகள் எல்லாமே மக்களோடு இணைந்தது போலவே அமைக்கப்பட்டன. அதே வேளை படையினரும் மக்கள் கடைசியாகத் தஞ்சமடைந்த முள்ளிவாய்க்காலை காற்றுக்கூட உள்நுழைய முடியாதபடி இறுக்கமாக சுற்றிவளைத்திருந்தனர். கூடவே மரணங்களுக்குப் பயந்தாவது மக்கள் தம்மிடம் வருவார்கள் என்பதை கணித்துக் கொண்டு இடையிடையே சரமாரியான எறிகணைத் தாக்குதல்களையும் முள்ளிவாய்க்காலை நோக்கி அரச படைகள் நிகழ்த்தத் தவறவில்லை. படையினர் நினைத்ததைப் போலவே கொத்துக் கொத்தாக குடும்பங்கள் பலவும் செத்தழியத் தொடங்கின. உணவு விநியோகமும் மட்டுப்படுத்தப்பட்டதால் பெரும் பட்டினிநிலை அப்பகுதியெங்கும் தலைவிரித்தாடத் தொடங்கியது. எல்லாப் பொருள்களும் தங்கள் பெறுமதியை இழந்து நிற்க, உணவுப் பொருள்கள் மட்டும் தமது பெறுமதியில் அதிகரித்தபடியே இருந்தன. கடைசியாக ஒரு தாலிக்கொடியைக் கொடுத்து ஒரு கிலோ அரிசியை வாங்கிய சம்பவங்களும் நடந்தன. ஒரு மோட்டார் சைக்கிளுக்கு மூன்று தேங்காய்கள், ஐயாயிரம் ரூபாவுக்கு அரைக்கிலோ மீன் என்கிற ரீதியில் உணவுப் பண்டங்களுக்கான பெறுமதியும் விலையும் முள்ளிவாய்க்காலில் எகிறிக்கொண்டே சென்றன.

நாலாபுறத்திலிருந்தும் வருகின்ற துப்பாக்கி ரவைகளிலிருந்து தம்மையும் தம் குடும்பத்தையும் காத்துக் கொள்ள வீட்டுக்கொரு பதுங்குகுழியை அமைத்து அதற்குள்ளேயே ஒண்டிக் கொண்டு வாழ்க்கையை நிச்சயமற்ற தன்மையோடு நடத்தவேண்டி இருந்தது. சில வேளைகளில் எறிகணையோ, விமானக் குண்டுகளோ பதுங்கு குழிக்குள் வீழ்ந்தால் 'ஒத்தபடியே' குடும்பத்தோடு இறந்துவிட வேண்டும் என்பதை பெரும்பாலான மக்களின் விருப்பமாக இருந்தன. ஏனெனில் தாய் தந்தையர்களை, சகோதரர்களை, உறவுகளை, தம் துணைகளை இழந்த பலர் பித்துப் பிடித்ததுபோல் ஏதிலிகளாக அலைந்து திரிந்ததையும் எவருடைய ஆதரவும் கிடைக்காமல் அவர்கள் கண்முன்னாலேயே அணுவணுவாகச் செத்து மடிந்ததையும் முள்ளி வாய்க்காலில் எஞ்சியிருந்த மக்கள் கண்ணுற்றேயிருக்கிறார்கள். அத்தகைய நிலை தமக்கோ தம் குடும்பத்தினருக்கோ வந்து விடக் கூடாது என்பதற்காகவே அவ்வாறு செத்தாலும் ஒன்றாகச் செத்துவிட வேண்டும் என்ற முடிவுக்கு அவர்கள் வரக் காரணம்.

இதைவிட வெயிலும் தன்பாட்டுக்கு மக்களை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தது. மக்களுக்கு உரிய பொருள்கள் இன்மையால் அவர்கள் கையில் கிடைத்தவற்றைக் கொண்டே தமக்குரிய சிறுசிறு குடிசைகளை அந்தக் கடற்கரையோரமாக அமைத்திருந்தார்கள். எனவே வெயில் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி அவர்களின் குடிசைகளை ஊடுருவி அவர்களை வதைக்க முடிந்தது. நோய்கள் பெருகின. ஆயினும் உரிய மருத்துவ வசதிகளோ, மருந்துகளோ அவர்களுக்குக் கிடைக்க எந்தவொரு வழியுமில்லை.

**-நினைவன்-**

உணவு இல்லை, மருந்துகள் இல்லை, கையில் காசும் இல்லை, ஆனால் உயிரிழப்பும், வலிகளும் வேதனையும் தாராளமாகக் கிடைத்தன. இத்தகைய ஒரு மரணக் குழிக்குள் வாழ்வதிலும் பார்க்க பேசாமல் படையினரின் கட்டுப்பாட்டிற்குள் போய்விடலாம் என்று பெரும்பாலான மக்கள் தமக்குள் முடிவெடுத்தனர். படையினர் போட்ட கணக்கு எள்ளளவும் பிசகாது நிறைவேறத் தொடங்கியது. படையினரின் எறிகணை வீச்சில் கொல்லப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவோரின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது. இதைவிட தம்முடைய சிதைந்துபோன படையணிகளைக் கட்டியெழுப்பு வதற்காக கடைசிக் காலங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய அதீதமான கட்டாய ஆட்சேர்ப்பு அல்லது ஆள்பிடிப்பு மக்களை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்ல வேண்டும் என்ற உந்துதலை இன்னும் அதிகப் படுத்தியது. ஆனாலும் தமது கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி வரும் மக்கள் மீது படையினரும், தமது பிடிக்குள் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் மக்கள் மீது புலிகளும் சுட்ட சம்பவங்கள் பலவற்றை அங்கிருந்து மீண்டு வந்த பலர் இப்போது ஆறாத காயத்தோடு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

''நானும் மனுசியும் 2 பிள்ளைகளும் ஆமியின்ர கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து கொண்டிருந்தம். எங்களுக்கு என்ன நடந்தாலும் எங்கட பிள்ளையளைக் காப்பாத்த வேணும் எண்டு முதலே ஒரு முடிவெடுத்திட்டம். ஒரு காட்டுப்பாதைக்கால பதுங்கிப் பதுங்கி நடந்துவந்தம். அந்தப் பாதைக்கு இரண்டு பக்கத்திலேயும் ஆமியும் இயக்கமும் மாறி மாறி சுடுபட்டுக் கொண்டிருந்தாங்கள். திடீரெண்டு என்ர மனிசி ஐயோ எண்டு கத்திற சத்தம் கேட்டிச்சு. பதறிப் போய்த் திரும்பிப் பார்த்தன். இயக்கமோ, ஆமியோ ஆரோ சுட்ட குண்டு அவாவுக்கு கழுத்தில பட்டுட்டுது. ஒரே இரத்தம். அவா 'என்னால வரேலாது. பிள்ளைகளைக் கொண்டு நீங்கள் தப்பிப் போங்கோ' எண்டு சொன்னா. நிண்டு யோசிக்கவும் நேரமில்லை. அவாவை அரையுயிராய் அப்பிடியே விட்டுட்டு நானும் பிள்ளைகளும் இங்கால வந்திட்டம்'' என்று இன்னமும் வழிந்துகொண்டிருக்கின்ற கண்ணீருடன் தன்னுடைய கொடூரமான கணமொன்றை இரைமீட்கிறார் ஓர் இளம் குடும்பஸ்தர்.

இதைவிடவும் வலிகள் நிறைந்த கேட்கும்போதே நெஞ்சைத் துணுக்கச் செய்கிற ஓராயிரம் நிகழ்வுகளை முள்ளிவாய்க்கால் உற்பத்தி செய்து விட்டது. ஒரு மகத்தான பேரழிவோடு மே 18 முள்ளிவாய்க்கால் கொடூரங்கள் முடிவுக்கு வந்தன. கடைசிக் காலங்களில் மனிதாபிமானம் நசுங்கிச்

(26 ஆம் பக்கம் பார்க்க)


**விற்பனைக்கு**

சைவ/அசைவ Hotel ஒன்று நடாத்துவதற்கு தேவையான சகல தளபாடங்கள், பாத்திரங்கள் மிகக் குறைந்த விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வந்து பார்வையிடலாம்.

தொடர்பு:

**2505103, 0771629806**

# நட்புறவு என்ற பொருளுக்குள்ளே இந்த நானிலம் அடங்கிப் போய்விடும்






-ஏ.எச்.ஏ.ஹுஸைன்-

குடும்ப வாழ்வின் ஏனைய பகுதியில் வரக்கூடிய பிற அம்சங்கள் பற்றி சென்ற தொடரில் தொடக்கப் புள்ளியாக அமைந்த சில விடயங்களைப் பார்த்தோம்.

நமது குடும்ப வாழ்வோடு நமது உறவுகளல்லாத வேறு பலர் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ளதால் அவர்களோடு நாம் நடந்துகொள்ள வேண்டிய முறைமைகள் என்ன என்பது பற்றிச் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தங்களது வேலைகளுக்காகவும், வருமானம் ஈட்டிக்கொள்வதற்காகவும் வேலையாட்களை வைத்திருப்போர் அவர்களைத் தங்களது சகோதரர்கள் போல் நடத்திட வேண்டும். அடிமைகளைப் போல் அவர்களை வேலை வாங்கக்கூடாது.

அவர்களிடம் நீதி செலுத்துதல், இரக்கத்தோடு நடந்துகொள்ளுதல், அவர்கள் மீது அன்பும் அனுதாபமும் காட்டுதல், உணவும் உடையும் தங்குமிடமும் கொடுப்பதோடு அவர்களது வேலைக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் உரிமையும் அவர்களுக்கு இருக்கிறது.

நீங்கள் உடுப்பது போலவே உங்களால் வேலை வாங்கப் படுபவர்களுக்கும் நீங்கள் உடுக்கக் கொடுப்பது உங்கள் கடமையாகும். நீங்கள் உண்பது போலவே அவர்களுக்கும் உணவளிப்பது கடமையாகும். வேலைக்காரர்களைத் துன்புறுத்தி அவர்களை வருத்தி வேலை வாங்கக்கூடாது.

உறவினர்களுடன் பாசமாக நடந்து கொள்வது ஒருவரது உயிருக்கும் உடைமைக்கும் கிடைத்த இறைவனின் அருளாகும்.

ஏனைய குடும்ப உறுப்பினர்களோடும் உறவினர்களோடும் மிக்க கருணையோடு நடந்துகொள்ள வேண்டும். முடிந்தவரை அவர்களுக்கு உதவி செய்து வாழ்ந்திட வேண்டும். அவர்களோடு உண்மையான அன்புடன் நடந்திட வேண்டும் என்பது மட்டுமல்லாமல் அவர்களது இன்பத் துன்பங்களில் முழுமனதுடன் பங்கேற்றிட வேண்டும்.


நாம் காட்டும் பாசம், பரிவு இவைகளுக்கு உறவினர்கள் நன்றியுடன் நடந்து கொண்டாலும் சரி இல்லையென்றாலும் சரி நாம் அவர்களிடம் அன்பாக நடந்துகொள்ள வேண்டும். அவர்கள் தமது செயலுக்கு வெட்கப்படும் படியாக நமது தாராளத் தன்மை அமைந்திட வேண்டும். அவர்கள் நம்மிடம் அதுபோல் நடந்து கொள்ளவில்லையே என்ற ஏக்கம் நம்மைத் தாக்கிட நாம் இடமளிக்கக் கூடாது.

அண்டை வீட்டில் வாழ்பவர்கள் அவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் எண்ணற்ற சிறப்பான உரிமைகளுக்கு உரியவர்களாவர். இவை பற்றி வரும் தொடர்களில் காண்போம்.

****


உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும் குடும்பப் பிரச்சினைகள், சந்தேகங்கள் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார் உளநல ஆலோசகர் ஏ.எச்.ஏ.ஹுஸைன்.
கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR.
ஈமெயில் :
abdulhussein525@gmail.com


# ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்





கேள்வி: நான் ஓர் இளம் வயதுப் பெண். எனது பிரச்சினை என்னவென்றால் எனது கணவர் எதையும் ஆரஅமர யோசிக்காது சட்டென்று தீர்மானம் எடுக்கும் ஒருவராக இருந்தபடியால் எமது வாழ்க்கையும் சீர்குலைந்து போனது. ஆனால், நான் தடுமாறி விடவில்லை. உறுதியோடு இருந்தபடியால் வாழ்க்கையில் ஸ்திரமாக உள்ளேன். ஆனால், என்னை விட்டுப் பிரிந்த எனது முன்னைய கணவர் சீரழிந்து போயுள்ளார். இப்படிப்பட்ட நிலைமைக்கு என்ன காரணம்?

பதில்: 'ஆத்திரக்காரருக்கு புத்தி மட்டு' என்று சொல்வார்கள். எதையும் தீர விசாரிக்காது பலமுறை அலசிப் பார்க்காது தான் கொண்டிருக்கும் முன் அனுமானத்தோடு மாத்திரம் கணப்பொழுதில் தீர்மானம் எடுப்பவர்கள் பின்னாட்களில் வருந்த வேண்டியிருக்கும் என்பதற்கு உங்கள் முன்னாள் கணவர் ஒரு சிறந்த உதாரணம்.

எதிலுமே நின்று நிதானித்து, உற்றுக் கவனித்து அமைதியாகவும் ஆக்கபூர்வமாகவும் தீர்மானம் எடுக்க வேண்டும். ஆனால், பலர் இதில் தவறி விடுகின்றார்கள்.

முதலில் தன்னையும் பின்னர் தன்னை நம்புபவர்களையும் எல்லாவற்றுக்கும் மேலாக எல்லாம் அறிந்த ஞானமுடையோனான இறைவனையும் நம்பவேண்டும். இதில் எதையுமே நம்பாதவர்கள் தட்டித் தடுமாற வேண்டித்தானிருக்கும்.

சிலர் வேறு பல விடயங்களில் எவ்வளவுதான் சாமர்த்தியமுள்ளவர்களாக இருந்தாலும் பொறுமையைக் கையாளும் விடயத்தில் கோட்டைவிட்டுச் சறுக்கிவிடுவார்கள்.

இத்தகைய பொறுமை இழப்புக்கு பரம்பரை அம்சங்களும், பண்பாடும், கலாசாரம் மற்றும் உடல் நலம் போன்ற அம்சங்களும் காரணமாக அமையலாம்.

கேள்வி: நான் அகதியாக பாதிக்கப்பட்டுப் போயுள்ள ஒரு பெண். அத்தனை இழப்புக்களையும் சந்தித்து படாத பாடுபட்டு குடும்பத்தை பராமரிக்கின்றேன். இருந்தாலும் எனது பிள்ளைகள் ஊதாரித்தனமாக நடந்துகொள்கிறார்கள். இவர்களது இவ்வாறான நடவடிக்கைகளால் நான் மனமுடைந்து போயுள்ளேன். இவர்களை சீர்திருத்த வழியில்லையா? எந்தவிதமான பங்களிப்பும் செய்யாத இவர்கள் உதவிக்கு பதிலாக உபத்திரமாக இருக்கிறார்கள். எனது பெண்பிள்ளை கூட எனக்கு ஒரு கையுதவியும் செய்து தருவதில்லை?

பதில்: பெற்றோருக்கு ஆதரவு தெரிவித்து அவர்களுக்கு எந்நேரமும் உதவி ஒத்தாசை புரிந்து உணர்வு ரீதியாகப் பாசம் வைத்து வளரவேண்டியதும், வளர்க்கப்படவேண்டியதும் பிள்ளைகள் மீதுள்ள பொறுப்பாகும்.

பொதுவாகப் பிள்ளைகள் பெற்றோர் மீது குறிப்பாகத் தாயின் மீது பாசம் காட்டி தாயின் சொற்படி கேட்டுத்தான் நடப்பார்கள்.

ஆனால், ஒரு சிலர் புறநடையாக இவ்வாறு எதேச்சையாக நடந்து கொள்கிறார்கள். இதனால் உங்களைப் போன்ற ஒரு சிலர் மனம் நொந்து கொள்ள வேண்டி யேற்படுகிறது. பிள்ளைகளின் இத்தகைய அசிரத்தைக்கும், பொறுப்பற்ற தன்மைக்கும் அவர்கள் வளர்க்கப்பட்ட முறையும் நண்பர்கள் போன்ற கரடுமுரடான சூழலும் காரணமாக அமையலாம்.

நீங்களும் அவர்கள் அப்படியே தொடர்ந்து நடந்து கொண்டிருக்க கண்டும் காணாததுபோல் இருந்து வந்ததும் அவர்களது நடவடிக்கைகளை நீங்கள் அங்கீகரித்திருப்பதாக அவர்கள் அர்த்தம் கொண்டிருப்பார்கள். காலப்போக்கில் எல்லாம் சரியாகிவிடும் என்று நீங்கள் கண்ணை மூடிக் கொண்டிருந்ததும் ஒரு காரணமாகிப் போயிருக்கிறது.

எதற்கும் நீங்கள் மனம் சலிக்காது இருந்துகொண்டு ஊதாரிப் பிள்ளைகள் விடயத்தில் உறுதியாக இருங்கள். அவர்களை ஒரு வழிப் பண்ணுவதற்காக ஒரு நேரம் பட்டினி போட்டாலும் பரவாயில்லை. அடுத்தபடியாக இவர்கள் யாரது சொல்லுக்கு மதிப்பளிப்பார்களோ அவர்களுக்கூடாக இவர்களுக்குப் போதனை செய்யப்பாருங்கள். அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

கேள்வி: யுத்தம் காரணமான நெருக்கடிகளில் அகப்பட்டு ஒரு சில ஆண்டுகள் (சுமார் 12 வருடங்கள்) எங்களைப் பிரிந்திருந்த பிள்ளை இப்பொழுது கடவுளின் கருணையினால் மீண்டும் எம்மோடு வந்து சேர்ந்துவிட்டாள். தலையில் அவளுக்குத் துப்பாக்கிச் சன்னம் துளைத்ததினால் இப்பொழுது அவளுக்கு ஒரு பக்கம் அதாவது ஒரு கை, கால், கண் என்பன இயங்காது.

இருந்தபோதிலும் பிள்ளை உயிரோடு வந்துவிட்டார் என்பதனால் நிம்மதியடைகிறோம். ஆயினும், அவள் எந்நேரமும் மனம் நிறைந்த துயரத்தோடு உள்ளாள். தனிமையில் இருந்து தேம்பித் தேம்பி அழுகிறாள். இது ஏன்?

பதில்: உங்கள் பிள்ளையைப் போன்று அநேக இளம் பிள்ளைகளுக்கு இந்தக் கதி நேர்ந்திருக்கிறது. வெறும் உயிர் மாத்திரம் ஊசலாடும் உருவங்களாக அவர்கள் இருக்கிறார்கள். உங்கள் பிள்ளை தனிமையில் இருந்து தேம்பித்தேம்பி அழுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

முதலில் அவள் தனக்கேற்பட்டிருக்கும் ஊனத்தை எண்ணி வருந்தக்கூடும். மற்றது, அவள் அந்தக் கொஞ்சக் காலம் அவர்களது கட்டுப்பாட்டில் இயங்கியபோது அவர்களது உத்தரவை நிறைவேற்றியிருக்கலாம். இது அவளது விருப்பத்தையும் மீறி மனச்சாட்சியை உறுத்தும் வண்ணமாக அமைந்திருக்கலாம். இவ்வாறு தான் கடந்த காலத்தில் ஈடுபட்ட வன்முறைகள் சம்பந்தமான நினைவு மீண்டிடும்போது இத்தகைய துயரம் வெடித்து அழுகையாக மாறக்கூடும்.

வீட்டிலுள்ள எவராவது அவளோடு நம்பிக்கை தரும் வண்ணம் அணுகி மனம் விட்டுப் பேசுங்கள்.

உடல் ஊனமுற்றிருப்பது ஒரு பெருங் குறைபாடு அல்ல. ஆனால், மனம் ஊனமடைவதற்கு இடமளித்து விடக்கூடாது.

***

பலரின் வேண்டுகோளுக்கிணங்கி இப்பகுதியில் பிரசுரிக்கப்படும் வாசகர்களால் அனுப்பப்படும் உளவியல் சார்ந்த கேள்விகளுக்கு அவர்களின் பெயர், இடம் என்பவை குறிப்பிடப்படவில்லை.

# தாலி கலாசாரத்தின் அடையாளமா?



திருமணத்தின் போது மாப்பிள்ளை பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவது நம்மிடையே இருந்து வருகின்ற மரபு. அவரவர் வழக்கப்படி தாலி கட்டுவது நடந்து வருகிறது.
பெரும்பான்மையானோர் தாலியை புனிதமாக கருதி வருகின்றனர். திருமணம் ஆனதற்கு அடையாளமாக பெண்ணின் கழுத்தில் தாலி இருக்கிறது.

தாலி கட்டும் பழக்கம் தவிர்க்க முடியாத ஒன்று என்று இருந்த காலம் மாறி இன்று மிக பெரிய விவாத களம் திறக்கப்பட்டிருக்கிறது. தந்தை பெரியார் காலத்திலேயே தாலி மீதான விவாதம் தொடங்கி தந்தை பெரியார் தாலியை எதிர்த்து, இது பெண்ணடிமை தனத்திற்காக கொண்டு வரப்பட்டது. பெண்ணுக்கு தாலி கட்டுவதில் ஆணாதிக்கம் தான் மேலோங்கி நிற்கிறது என்று தாலி இல்லாத சுயமரியாதை திருமணங்களை நடத்தி வைத்தார். ஆனால் இன்றோ ஆணுக்கு பெண் சரிசமனாக பல்வேறு துறைகளிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் வேளையிலும் அவளுக்கு திருமணம் என்று ஒன்று வரும் போது அங்கு தாலி தான் முக்கியமாக கருதப்படுகிறது.

தந்தை பெரியார் உட்பட பலரும் சமூக மாற்றங்களை கொண்டு வர வேண்டும் என்று போராடினாலும் அந்த காலங்களை விட இன்று மூட நம்பிக்கைகள் அதிகமாகி விட்டன. இன்றைய காலகட்டங்களில் மனிதர்களின் பேராசைகளால் மூட நம்பிக்கைகள் அங்கீகாரம் பெறத் தொடங்கி விட்டன. வீடு கட்டுவது முதல் பெயர் வைப்பது வரை.

தாலி கட்டுவது என்பது ஆணாதிக்கத்தால் பெண்களுக்குள் திணிக்கப்பட்ட ஒரு மூட நம்பிக்கை தான். திருமணம் ஆனவர்கள் அந்த தாலி பெண்ணின் கழுத்தில் இருக்கும் வரை கணவன் ஆரோக்கியமாக இருப்பதாக நம்புகிறார்கள். கடந்த பல நூற்றாண்டுகளாக தாலி விவகாரத்தில் மக்களை வேறு எதையும் சிந்திக்காத வண்ணம் மூடர்களாகவே வைத்திருக்கிறார்கள்.

தாலி வந்ததன் காரணமே ஆண்களின் சுயநலமே. இன்று வழக்கத்தில் உள்ள மொழி 'தாலி பெண்ணின் வேலி' என்ன வேலி. அந்த வேலி ஏன் ஆணுக்கு இல்லை. நான் எப்படி வேண்டுமென்றாலும் இருக்கலாம் ஆனால் எனக்கு அமைய போகும் பெண் என்றுமே எனக்கு உரியவளாக இருக்க வேண்டும் என்பதற்காக தான் தாலி.



தாலி மீதான புனிதம், சாஸ்திரங்கள் ஏழைகளுக்கு இல்லாமல் போய் விடுகிறது. திருமணத்தின் போது தங்கத்தில் தாலி செய்து போட்டு கொள்கிறார்கள். பின்னர் பண தேவைகள் வரும் போது அந்த தாலியை கழற்றி அடகு வைக்கிறார்கள்.

அப்படிப்பட்ட மக்களுக்கு தாலி என்றால் கஷ்டத்தை நீக்க பயன்படும் பொருள் என்று தான் இருக்கும்.

இன்று மக்கள் கலாசாரம் எது என்றே தெரியாமல் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அதை தான் கலாசாரம் என்றும் சொல்லி வருகிறார்கள். ஆண்களும் மனைவியின் கழுத்தில் கிடக்கும் தாலி மீது வைக்கும் நம்பிக்கையை மனைவியின் மீது வைப்பதில்லை. பெண் எப்போது சமூகத்தில் தனக்கு வரும் பிரச்சினைகளையும் தானே எதிர் கொள்கிறாளே! ஆகவே, சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான உரிமைகள் வரும் போதும் தாலி என்பது காணாமல் போய் விடும்.

யாழ்ப்பாணத்திலேயே பொற்கொடியில் தாலி கட்டும் வழக்கம் உள்ளது. இந்தியாவில் எவ்வளவு பணம் இருந்தாலும் தாலியை மஞ்சள் கயிற்றில் கட்டுவதே வழக்கம். கஷ்டம் வரும் போது உதவும் என்ற வகையில் தான் பொன்னில் கொடி செய்யும் முறை யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்க வேண்டும். பின் அதுவே அந்தஸ்தைப் பறை சாற்றும் சின்னமாக காலப் போக்கில் மாறிவிட்டது. மாப்பிள்ளை எத்தனை பவுணில் தாலிக்கொடி போட்டார்? என்று விசாரிக்கும் வழக்கம் இன்று ஊர்களில் காணப்படுகிறது. கலாசாரத்துக்கு மதிப்பளிக்காது பணத்துக்கு மதிப்பளித்து வரும் காலம் இது.

* * *

## பெண்

தொகுப்பு:சாந்தி

## மாம்பழ அல்வா

தேவையான பொருட்கள்

மாம்பழம் 2
சீனி 1 கப்
பால் 2 கப்
ஏலக்காய் 2
நெய் 1 தேக்கரண்டி.



செய்முறை:-

மாம்பழத்தின் தோலை நீக்கிவிட்டு துண்டுகளாகப் போட்டு அதனை நன்றாக மசித்துக் கொள்ளவும். சுத்தமான வாய் அகண்ட பாத்திரத்தில் மசித்த மாம்பழத்துடன் சீனி,பால் கலந்து அடுப்பில் வைத்து மிதமான சூட்டில் கிளறுங்கள்.

கலவை பதமாக, ஒட்டாமல் வரும் போது நெய் சேர்க்கவும். ஏலக்காயை சிறிது சீனிடன் சேர்த்து மிக்சியில் அரைத்து சேர்க்கவும். பாத்திரத்தில் தளதளவென்று அல்வா வந்ததும், சிறிது நெய் தடவிய தட்டு அல்லது ரேயில் அல்வாவை ஊற்றி நன்கு ஆறிய பின்னர் துண்டுகளாக வெட்டிப் பரிமாறவும்.

உங்களுக்கு வேறு நிறங்கள் வேண்டுமென்றால் மாம்பழம், சீனி, பால் கலவையுடன் நிறப் பொடியை சிறிது தண்ணீரில் கலந்து சேர்த்துக் கொள்ளலாம்.

# கரும்புள்ளிகள் அற்ற பொலிவான சருமத்துக்கு....



சிலர் அழகாக இருந்தா லும், முகத்தில் கரும்புள்ளிகள் தோன்றி, அவர்களின் அழகை கெடுக்கும் விதத்தில் இருக்கும். முகத்தில் தோன்றும் கரும்புள்ளிகள் இரண்டு வகையாக பிரிக்கப்படுகின்றன. ஒன்று, சிலரது சருமத்தின் தன்மையால்,மெலனின் சுரப்பு அதிகமாக இருப்பதால், உண்டாகும் கரும்புள்ளிகள். மற்றது, மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட் கள் போன்றவற்றால் உண்டாகும் கரும்புள்ளிகள்.

கரும்புள்ளிகள் எதனால் ஏற்படுகின்றன என்பது பற்றிய டிப்ஸ் இதோ உங்களுக்காக...

**ஹோர்மோன் மாற்றங்கள்:**
சிலருக்கு, ஹோர்மோன் மாற்றங்களால், கரும்புள்ளிகள் தோன்றும். கர்ப்பிணிகளுக்கு, கல்லீரல் சீராக செயல்படாமை, விட்டமின் ஏ பற்றாக் குறை ஆகியவற்றாலும் கரும்புள்ளிகள் உண்டாகும் வாய்ப்பு உள்ளது.

**புற ஊதாக்கதிர்கள் தாக்கம்:**
சூரியனில் இருந்து வரும் புறஊதாக் கதிர்கள், தோலில் தாக்கத்தை ஏற்படுத்தும் போது கரும்புள்ளிகள் தோன்றுகின்றன.



மாநிறமாக இருப்பவர்களே இத்தகைய தாக்குதலுக்கு அதிகமாக இலக்காகின்றனர். அதிகமாக வெயிலில் சென்றால், சிறிய புள்ளிகளும் முகத்தில் தோன்றும்.

**கடும் உராய்வு:**
தொடர்ந்து கண்ணாடி அணிபவர்கள் மற்றும் அடிக்கடி முகத்தை தேய்க்கும் பழக்கம் உடையவர்கள் ஆகியோருக்கும் தொடர் உராய்வினால், கரும்புள்ளிகள் தோன்றும்.

**அலர்ஜி:**
பெர்பியூம்கள், ஹேர்-டை, ஹேர் -ரிமூவல் கிரீம் மற்றும் பிற அழகு சாதனப் பொருட்களால் உண்டாகும் அலர்ஜியினாலும் கரும்புள்ளிகள் ஏற்படும்.

**பருக்கள்:**
பருக்கள், அம்மை, படை மற்றும் தோலில் ஏற்படும் காயங்கள் போன்றவற்றால், தோலில் கரும்புள்ளிகள் மற்றும் ஆழமான தழும்பு ஏற்பட்டு விடுகிறது.

**இவற்றில் இருந்து விடுபட வழி:**
தோலில், கரும்புள்ளிகள் காணப்படுபவர்கள், தங்கள் பிரச்சினைக்கு தீர்வு காண, சிறந்த தோல் சிகிச்சை நிபுணரை அணுகலாம். உங்கள் பிரச்சினை என்ன என்பதை கண்டறிந்து அதற்கான தீர்வை தேர்ந்தெடுக்கலாம், கரும்புள்ளியின் தன்மையை பொறுத்து, மருத்துவ சிகிச்சை அல்லது அழகு சாதன சிகிச்சை போன்றவை மேற்கொள்ளலாம்.

**சாதாரண கரும்புள்ளியாக இருந்தால், அவற்றிற்கு வீட்டிலேயே செய்து கொள்ளும் சில சிகிச்சை முறைகள்:**


* ஐந்து பாதாம் பருப்புடன், ஒரு டீஸ்பூன் பிரஷ் கிரீம், அரை டீஸ்பூன் எலுமிச்சை சாறு, அரை தேக்கரண்டி துருவிய உருளைக்கிழங்கு, அரை தேக்கரண்டி முல்தானி மட்டி போன்றவற்றை சேர்த்து, நன்றாக அரைத்து முகத்தில் கரும்புள்ளிகள் உள்ள இடங்களில் தேய்க்க வேண்டும். பின், 10 நிமிடங்கள் கழித்து கழுவினால் நாளடைவில் நல்ல மாற்றம் ஏற்படும்.

* முள்ளங்கியின் சாறை முகத்தில் தடவி 15 நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவி வர முகத்தில் காணப்படும் கரும்புள்ளிகள் மறையும்.

* அதேபோல், எலுமிச்சைச் சாறுடன், இரண்டு தேக்கரண்டி வெள்ளரிச் சாறு, ஒரு தேக்கரண்டி குளிர்ந்த பால் கலந்து முகத்தில் தடவி, 15 நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும்.

* உருளைக்கிழங்கு, வெள்ளரி மற்றும் தக்காளி ஆகியவற்றை நன்கு அரைத்து, அவற்றை முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் கரும்புள்ளிக்கு 'குட்பை' சொல்லிவிடலாம். *

**சகோதரிகளே!**
பெண் பகுதியில் பிரசுரமாகும் சகோதரிகளின் பார்வைக்கு நீங்களும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பலாம்.
இச்சமூகத்தில் சகோதரிகள் மட்டத்தில் நீங்கள் காணும் குறைநிறைகளை எம்மோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.
நீங்கள் பகிர்ந்துகொள்ளும் விடயங்கள் ஒவ்வொன்றும் ஆக்கபூர்வமானவையாகவும் இருக்க வேண்டும்.
**வந்து சேர வேண்டிய எமது முகவரி:**
சகோதரிகளின் பார்வைக்கு
சுடர் ஒளி வாரமலர்,
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.



படம்-வெங்காயம்



படம்-களவாணி



படம்-துரோகி

# மீண்டும் தமிழில் சித்தார்த்!

‘போய்ஸ்’ படத்தில் நடித்த சித்தார்த், அதன் பின்பு தெலுங்குக்குப் போய்விட அங்கு கிடைத்த வரவேற்பினால் முன்னணிக் ஹீரோக்களில் ஒருவராகிவிட்டார். இப்போது கைவசம் ஏராளமான படங்களுடன் இருக்கும் சித்தார்த், மீண்டும் தமிழுக்கு வருகிறார். ‘திரு திரு துறு துறு’ படத்தைத் தயாரித்த சத்யம் சினிமாஸ் நிறுவனமும் ரியல் இமேஜ் நிறுவனமும் இணைந்து இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்கள். ஜெயந்த்ரா என்பவர் இந்தப் படத்தை இயக்குகிறார். இந்தப் படத்தில் சித்தார்த்துக்கு ஜோடியாக நடிப்பவர் ப்ரியா ஆனந்த். தமிழ் மற்றும் தெலுங்கில் ஒரே நேரத்தில் இந்தப் படத்தை வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்கள்

## தமன்னாவை நான் ரெக்மன்ட் பண்ணல!



*‘பையா’வில் ஜோடிபோட்ட கார்த்தியும் தமன்னாவும் மீண்டும் இணைகிறார்கள். இந்தப் படம் தெலுங்கு ரீமேக் ஆகும். இந்தப் படத்தில் ஹீரோயினாக நடிக்க தமன்னாவை, கார்த்தி பரிந்துரை செய்தார் என செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், அதை மறுக்கும் கார்த்தி, “அப்படி நான் ஒன்றும் தமன்னாவுக்காக ரெக்மன்ட் பண்ணலை. நாங்க இருவரும் சேர்ந்து நடித்த ‘பையா’ படம் ஹிட்டாகி விட்டதால், மறுபடியும் சேர்ந்து நடிக்க வேண்டும் என்பது இயக்குநரின் விருப்பமே... இதில் எனது தலையீடு எதுவும் இல்லை...” என்கிறார் அழுத்தமாக. நம்பிட்டோம் சாமிய்...!*

## கசிந்தது ரவணா கதை

*அலட்டிக் கொள்ளாத மணிரத்னத்தின் அல்டிமேட்டான ராவணாவின் கதை இப்போது லேசாகக் கசிய ஆரம்பித்திருக்கிறது. ராமாயணத்தின் தழுவல் என்றெல்லாம் சொல்லப்பட்டாலும், அதை நேரடியாக அர்த்தம் பண்ணிக் கொள்ள முடியாது. ஏனென்னால் திரைக்கதை அப்படி!.*

*பொலிஸ் தேடுகிற குற்றவாளிதான் ஹீரோ விக்ரம். இவருக்கு வைக்கப்பட்ட குறியில் இவரது தங்கை பிரியாமணியைக் கொன்றுவிடுகிறது பொலிஸ். இந்த படுபாதக செயலைச் செய்த பொலிஸ் அதிகாரியான பிருத்திவிராஜின் மனைவியான ஐஸ்வர்யாவைக் கடத்திக் கொண்டு காட்டுக்குள் பதுங்கிவிடுகிறார் விக்ரம். காடுமேடெல்லாம் சுற்றித்திரியும் ஐஸ், மீண்டும் பொலிஸாரின் கைக்குக் கிடைக்கும் போது சந்தோஷப்பட வேண்டிய பிருத்விராஜ், நீயும் அவனும் ஒன்ணா சுத்தினீங்க. நீ சுத்தமா இருக்கியான்னு தெரியணும் என்று கூற, ஐஸ்சின் ' அதிர்ச்சியும் முடிவும் என்ன என்பதுதான் ராவணாவாம்.*



படம்-ராக்த சரித்திரா

## குவியும் படங்கள்

இந்த மாதம் முதல் ஏகப்பட்ட திரைப்படங்கள் வெளியாகவுள்ளன. இந்தியாவில் பரீட்சைக் காலம் என்பதால் சில படங் களையும், ஐ.பி.எல். கிரிக்கெட்டால் சில படங் களையும் வெளியிடாமல் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தார்கள். இதனிடையே சினிமாவுக்கான இரண்டு விடயங்களும் தற்போது இல்லையென்பதால் படங் கள் வெளியாகின்றன. எத்தனையோ படங்கள் வந்தாலும் ஒன்றிரண்டு படங்கள்தான் பார்க்க வேண்டும் எனும் ஆவலைத் தூண்டுகின்றன. மேலும், பெரிய ஹீரோ படங்களைப் போல, கூப்பிட்டு உட்கார வைத்து நொக்கு நொக்கென்று அடித்து அனுப்ப மாட்டார்கள் என்பதால் மக்கள் தைரியமாக தியேட்டர் பக்கம் வருவார்கள். அந்த வகையில் ‘இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம்’, ‘கோரிப்பாளையம்’, ‘அம்பாசமுத்திரம் அம்பானி’, ‘மாஞ்சா வேலு’, ‘களவாணி’, ‘கனகவேல் காக்க’, ‘ஐவர்’ ஆகிய படங்கள் உள்ளன. இவற்றில் எதை ஓடவைப்பது என்பது அந்தந்தப் படத்தின் கதையில்தான் இருக்கிறது.

## காமடியனாக ஆர்யா!

‘சிவா மனசுல சக்தி’ படத்துக்குப் பிறகு ராஜேஷ்.எம் இயக்கும் படம் ‘பாஸ் என்கிற பாஸ்கரன்’. இந்தப் படத்தை ‘நான் கடவுள்’ படத்தைத் தயாரித்த வாசன் விஷுவல்ஸ் வெச்சர்ஸ் தயாரிக்கிறது. இதுகுறித்து இயக்குநர் ராஜேஸ் கூறியவை வருமாறு:-

“இந்தப் படத்தில் நாயகனாக ஆர்யா நடிக்கிறார். நாயகியாக நயன்தாரா நடிக்கிறார். இது ஆர்யாவுக்கு முற்றிலும் புதுமையான படம் என்று சொல்லலாம். சமீபத்தில் வெளியான ‘நான் கடவுள்’ உட்பட எல்லாப் படங்களிலும் ஆக்ஷன் ஹீரோ, மிரட்டலான அகோரி வேடம் என்று நடித்திருக்கிறார். ஆனால், இதில் ஆர்யாவைப் புதுமையாகக் காண்பிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். இதுவரை ஆர்யா கொமெடி ரோலில் நடித்ததில்லை. இந்தப் படத்தின் கதையை ஆர்யாவுடன் இணைத்துப் பார்த்தபோது மிகப் பொருத்தமாக இருந்தார்.

கதையைக் கேட்ட பிறகு அதிக ஈடுபாட்டுடன் நடித்திருக்கிறார் ஆர்யா. படப்பிடிப்புத் தளத்தில் நயன்தாரா அதிகம் பேச மாட்டார். ஆனால், படத்தில் அவருடைய நடிப்பு பேசப்படும். அந்தளவுக்கு கரக்டருக்கு அழகு சேர்த்திருக்கிறார். இந்தப் படத்தின் , இசையமைப்பாளர் யுவன்ஷங்கர் ராஜாவுக்கு அதிக பங்கிருக்கிறது. பின்னணி இசையாகட்டும் , பாடல்களாகட்டும் மிரட்டியிருக்கிறார். யுவன் நா.முத்துக்குமார் கூட்டணியில் எல்லாப் பாடல்களும் பெரியளவில் வெற்றியடையும். என்னுடைய முந்தைய படம் போல் இந்தப் படமும் ரசிகர்களின் மனதை லேசாக்கி மகிழவைக்கும் என்றார்.



கமலினி முகர்ஜி

# ஜக்கிசான் படம் தமிழில்!



ஹொங்கொங் 2சூப்பர் ஸ்டார்' ஜாக்கிசான் சிறுவன் ஜேடனுடன் இணைந்து நடித்த 'தி கராத்தே கிட்' படம் ஜூன் 11ஆம் திகதி தமிழில் மொழி மாற்றம் செய்து வெளியிடப்படவுள்ளது. தன் தாயுடன் சீனாவுக்கு இடம்பெயரும் சிறுவன், போன இடத்தில் அவனது வகுப்பு மாணவர்களால் கொடுமைப்படுத்தப்படுகிறான். ஒரு மாணவி முன்பும் அவனை அவமானப்படுத்துகின்றனர். மனதளவில் பலவீனமான அவன் சித்திரவதைகளின் வலியால் துடிக்கிறான். அவனுக்கு குங்பூ மாஸ்டராக வருபவர் சிறுவனுக்கு நேர்ந்த கொடுமைகளை அறிகிறார். போராடி ஜெயிப்பது எப்படி என்று கற்றுக் கொடுக்கிறார். பிறகு சிறுவன் நிமிர்ந்து நின்று வெற்றி பெறுவதுதான் கதை. சிறுவனாக ஜேடன் நடிக்க, குங்பூ மாஸ்டராக ஜாக்கிசான் நடிக்கிறார். சிறுவர்களைக் கவரும் வகையில் படம் உருவாக்கப்பட்டு உள்ளது. சிறுவன் ஜேடனாக நடிப்பவர் பிரபல ஹொலிவூட் நடிகர் வில்ஸ்மித்தின் மகன். ஹொலிவூட் நிறுவனமான 'சோனி பிக்சர்ஸ்' இந்தியாவில் இந்தப் படத்தை வெளியிடுகிறது.

# மகனுக்காக ஒரு பாட்டு

சில வருடங்களுக்கு முன்னர் இசைஞானி இளையராஜாவின் மூத்த வாரிசான கார்த்திக் ராஜா பல படங்களுக்கு இசையமைத்துப் பிஸியாக இருந்தார். ஆனால், தற்போது ஒன்றிரண்டு படங்கள்தான் வருகின்றன. அதையும் சரியான நேரத்தில் இசையமைத்துக் கொடுக்காமல் இழுத்தடித்து வருகிறார். இதனால், நிறையப் புது இயக்குனர்களின் படங்களுக்கு இசையமைக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. சமீபத்தில் வெளியான 'ரெட்டச்சுழி' படத்திலும் பாடல்கள், பின்னணி இசை என எதுவும் பேசப்படாதமையால் மேலும் வருத்தத்தில் இருக்கிறார் கார்த்திக் ராஜா. இந்நிலையில், தற்போது ஒரு படத்திற்கு வாய்ப்பு வந்துள்ளது. அந்தப்பட இயக்குனர் சொன்ன ஒரே கண்டிஷன், என் படத்துக்கு இசையமைக்க வாய்ப்பு வேண்டுமென்றால், இளையராஜா சார் குறைந்த சம்பளத்திற்கு ஒரு பாடல் பாடிக் கொடுக்க வேண்டும் என்பதுதான். இதை இளையராஜாவிடம் கார்த்திக் ராஜா சொல்ல, மகனுக்காகப் பாடித் தருகிறேன் என்றிருக்கிறார். வாய்ப்புக்காக என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது என்றாராம் இளையராஜா.

# ஆந்திரா போகிறார் நமீதா!

தமிழில் அநேகமாக தலைமுழுகப்பட்ட நமீதாவுக்கு ஆந்திர தேசம் கை கொடுத்திருக்கிறது. இவர் பாலகிருஷ்ணா வுடன் ஜோடி சேர்ந்த 'சிம்ஹா' என்ற படம் செமத்தியான ஹிட். அதுவும் ஆந்திராவில் தனி தெலுங்கானாக் கலவரத்திற்குப் பிறகு ஹிட் ஆகிய முதல் படம் என்பதால் இந்த ஹிட்டுக்குப் பெரிய மரியாதை கிடைத்திருக்கிறதாம். போதும் தமிழ்நாட்டுக்கு உழைச்சது. நம்ம பக்கம் வாங்க என்று இருகை நீட்டி அழைக்கிறதாம் ஆந்திரா. இதையடுத்து ஏராளமான படங் களுக்கான அட்வான்ஸையும் வாங்கிவிட்டாராம் நமீதா.

# மே 21இல் மகனே என் மருமகனே ரிலீஸ்!

விவேக் நடித்த 'மகனே என் மருமகனே' படம் ஒரு வழியாக திரைக்கு வருகிறது. ஹீரோவாக விவேக் தேறுவாரா என்பதைச் சொல்லும் கடைசிப் பரிசோதனை இந்தப் படம். பத்திரிகையாளர்களையும் அவர்கள் குடும்பத்தையும் தரக்குறைவாகப் பேசிய பிறகு விவேக் சம்பந்தப்பட்ட அனைத்தையும் பத்திரிகையாளர்கள் புறக்கணித்து வந்தனர். அவர் பேச எழுந்தால் ஒட்டு மொத்த பத்திரிகையாளர்களும் வெளிநடப்புச் செய்வார்கள். இந்தப் புறக்கணிப்பு விவேக்கைவிட அவரை வைத்துப் படம் தயாரித்தவர்களைதான் அதிகம் பயப்பட வைத்தது. இந்த எதிர்ப்பின் காரணமாக படம் ஊத்திக் கொண்டால்? என்ன செய்வது என்ற இந்த ஒரே காரணத்துக்காக டி.பி.கஜேந்திரன் இயக்கிய 'மகனே என் மருமகனே' பட ரிலீஸ் தள்ளிக்கொண்டே போனது. காரணம் படத்தில் இரண்டு ஹீரோக்களில் விவேக்கும் ஒருவர். சமீபத்தில் ஒவ்வொரு பத்திரிகையாளர்களையும் தனது பத்திரிகையாளர் சந்திப்புக்காக முட்டிபோடாத குறையாக அழைத்து எல்லோர் முன்பும் மன்னிப்புக் கேட்டார் விவேக். அதன் பிறகே பத்திரிகையாளர்கள் சமாதானமடைந்தனர். அதன் விளைவு இப்போதே தெரியத் தொடகியுள்ளது. பல மாதங்களாகத் தள்ளிப்போன 'மகனே என் மருமகனே' இந்த மாத இறுதியில் திரைக்கு வருகிறது. கெட்டப் போடுவது, குரலை மாற்றிப் பேசுவது என்று இந்தப் படத்திலாவது கடிக்க மாட்டார் என நம்புவோம்.

# சண்டை இல்லாத ஆக்ஷன் படத்தில் அஜித்!

வைத்தியரின் அட்வைஸ்படி படங்களில் அதிக 'ரிஸ்க்' எடுக்கக் கூடாது என முடிவு எடுத்துள்ளார் அஜித். பலமுறை முதுகுத் தண்டில் சத்திர சிகிச்சை, கார் ரேஸூக்கான பயிற்சி என உடம்பைக் கெடுத்து கொண்டவர் அஜித். இனி அதுபோல இல்லாமல், சண்டைக் காட்சிகள் குறைவான படங் களில் மட்டுமே நடிக்க இருக்கிறார் என அவரே தெரிவித்துள்ளார். அதைப் புரிந்து கொண்ட இயக்குனர் பூபதிபாண்டியன் அதிகம் டான்ஸ் மூவ்மெண்ட், ரிஸ்கான சண்டைக் காட்சிகள் இல்லாமல் ஒரு ஆக்ஷன் கதையைச் சொல்ல, அஜித் உடனேயே ஓ.கேயும் சொல்லிவிட்டார். அதே நேரம் அவரின் ரசி கர்களின் எதிர்பார்ப்பையும் பூர்த்தி செய்யும் விதமாகவும் படம் இருக்குமென்கிறார் பூபதிபாண்டியன். சண்டை என்றால் சட்டை கிழியத் தானய்யா செய்யும், சண்டையில கிழியாத சட்டை எங்க இருக்கு எனக் கிண்டல் அடிக் கின்றனர் சிலர்.

# "புலிகள்கொஞ்சம் பதுங்கும்போது நரிகள் ஆட்டம் போடுமே! நரிகள் வேஷம் கலையும்போது புலிகள் வென்று காட்டுமே!!"

உணர்வோடு வைக்கப்பட்ட பாடலா, அல்லது விளம்பரத்துக்காகவா? தெரியவில்லை. 'தம்பி அர்ஜுனா' படத்தில் ஒரு பாடல்! 'புலிகள் கொஞ்சம் பதுங்கும்போது நரிகள் ஆட்டம் போடுமே, நரிகள் வேஷம் கலையும்போது புலிகள் வென்று காட்டுமே' யுகபாரதி எழுதியிருக்கும் வரிகள் ஒவ்வொன்றும் அக்கினியாக ஜொலித்தன. படத்தின் இயக்குனர் விஜய் ஆர்.ஆனந் இதுபற்றிக் கூறியவை வருமாறு:-

படத்தில வாற ஒரு கட்டத்துக்கான பாடல்தான் இது. இப்படிச் சில வரிகளைக் கேட்ட எவரும், "சென்சர் போட்ல எப்படிங்க அனுமதிப்பாங்க" என்று கேட்கிறாங்க. நமது தேசிய விலங்கே புலிதானே? வீரத்தைப் பற்றி எழுதும்போது புலிகள் என்ற வார்த்தையில்லாமல் எப்படி எழுத முடியும் என்றார். ஆனால், ஒரு விடயத்தை அவரால் மறைக்க முடியவில்லை. இந்த வரிகளைக் கேட்டுட்டு உலகமெங்கும் வாழும் தமிழர்கள் நிறையப் பேர் உணர்ச்சி வசப்பட்டு பேசினாங்க. ஏராளமான பாராட்டுக்களும் கிடைச்சுது. வரிகளுக்கு பொருத்தமா இசையமைச்ச தினாவையும் இந்த இடத்தில பாராட்டனும் என்றார். ஆபாவாணன், தினா, ஷங்கர் மகாதேவன் மூவரும் பாடியிருக்கும் இந்தப் பாடல் உலகம் முழுக்கவே ஒரு எழுச்சியை உருவாக்கும் போலத்தான் தெரிகிறது.




ப்ரியாமணி



நமீதா

# கவிதைப்புனல்

## நினை மனமே!

மண்ணை யாளும் மன்னவனும்
மன்னவனின் கீழ்ச் சின்னவனும்
மண்ணுள் மண்ணாய் மாற்றமுறும்
மரணம் வருமென் றறிமனமே!

தொட்டவன் துயரிடைப் பட்டாலும்
கட்டியவள் இட ருற்றாலும்
கொட்டும் விழிநீர் சுட்டாலும்
எட்டும் மரணமென் றுணர்மனமே!

பட்டம், பதவியில் புரண்டாலும்
பணம், பொருள், சுகங்களில் உருண்டாலும்
கட்டிய மனை,கடை திரண்டாலும்
கடைசியில் மரணமே விளிமனமே!

கெட்டவர், கெட்டவை மறமனமே
உற்றவர் உவப்புற வைமனமே
நற்றவை செய்திட முனைமனமே
நல்லவ னாகநீ நினைமனமே!

ஆணவம் அடைதலை விடுமனமே
ஆகாச் சொல்,செயல் தடுமனமே
தானமும், தர்மமும் கொடுமனமே
தரணியில் நற்பெய ரெடுமனமே!

மனிதம் மலர்ந்திடச் செய்மனமே
மண்ணில் கமழ்ந்திட வைமனமே
புனிதம் புவியெழப் புரிமனமே
புண்ணியம் செய்துபின் மரிமனமே!

மரணத்தை வென்றவர் யார்மனமே?
மரணித்து மீண்டவர் எவர்மனமே?
மரணத்தின் முன்பெயர் பெறுமனமே
மரணித்தும் உன்பெயர் வரும்மனமே!

-ஏறாவூர் தாஹிர்-

## சேவைகள் தேவை!

பாவைகள் போல்பல மனிதர்-இப்
பாரிலே வாழ்வதில் ஒருசிலர் புனிதர்
மாவிலே கிண்டிய பசைபோல்-ஒரு
மாற்றமும் இன்றியே அரைத்ததைப் பிசைவர்!

ஊரிலே வாழ்ந்தது தொட்டு-இந்த
உலகினைப் பிரிகிற உயிரினை விட்டு
சேரிடம் செல்வதன் முன்னே-கடும்
சேவைகள் செய்வதே தேவை!

யாரிடம் உள்ளது ஓலை-இனி
யாருக்குப் பந்தமாய் இப்பெருஞ் சீலை?!
கூறுவோர் குறைகளைக் கேட்டு-தலை
குனியாமல் வைத்திடு அதற்கொரு வேட்டு!

செய்கையில் வேண்டும் உரங்கள்-வெறும்
சொல்லிலே சொல்பவர் உதவா மரங்கள்
கையொடு சேருங்கள் கரங்கள்-அது
காட்டிடும் இங்கொரு காவலின் சரங்கள்!

ஊக்கமே வேண்டும் எம் உழைப்பில்-இது
உதவுமே எங்களின் வாழ்க்கைப் பிழைப்பில்
தாக்கங்கள் பெருகினால் தடையாய்-அதை
தாங்குக மன்திலே தடுத்திடும் படையாய்!

புகழுக்குச் செய்வதா சேவை?-இல்லை
புதுமைக்குச் செய்வதா சேவை?-மன
மகிழ்வோடு செய்வதே சேவை-அதை
மறக்கத்தான் இல்லையே தேவை!

-சி.வாயுபுத்திரன்-

## சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்

## விளைந்த சிக்கல்!

கேள்விகள் இல்லை; எம்மைக்
கேட்பாரு மில்லை; அந்தோ
வாள்வெட்டு; கத்திக் குத்து
வைப்புத்தீ; கொள்ளை; ஏவும்
ஆள்களின் கொடுமை; இங்கு
ஆவியைத் துறப்புப் பல்லோர்
மாள்வானேன் வீணாய்; சேர்ந்து
மறப்போம்யாம் இந்த நாட்டை!

எடுத்தோம்யாம் இந்த நாட்டுக்
குடிகளாய் உரிமை; ஆனால்
அடுக்காத குண்ட ராட்டம்
அராஜகம்; இழப்பு; ஓலம்!
விடுவோம்யாம் இங்கு வாழும்
விழைவினை; கழுவிக் கைகள்
எடுப்போம்யாம் கடவுச் சீட்டு
ஏகவந் நாடு என்றார்!

மலைநாடு காடாய் மாறும்
மலைமக்கள் சென்றால்; தோட்ட
நிலைதாழும்; உழைக்க விங்கு
நினைப்பாரும் உளரோ? ஆனால்
தலைதூக்கும் பதவி கொள்ள
தாமிங்கு உள்ளார்; வேண்டாம்
கொலைநேரும் நாடு; கூடி
ஏறுவோம் கப்ப லென்றார்!

இந்தியக் கடவுச் சீட்டை
ஈட்டியோர் முன்னர், பின்னர்
அந்நாடு செல்ல வில்லை
அழைத்தேக கப்ப லின்றி
இந்நாட்டுக் கலவ ரத்தால்
இடைநீக்கம் கப்பற் சேவை!
முந்தியோர் பல்லோ ரில்லை
பிந்தியோர் இன்று சிக்கல்!

(தொடரும்)

-கவிஞர் ஸி.எஸ். காந்தி-

## அன்புக்குரிய ஆள்!

-சி.குருபரன்-

'சில்'லென்ற நடை யுடையாள்-உயர்
சிந்தனைத் தெளிவு டையாள்
கொல்கின்ற விழி யதனில்-பல
கோலங்கள் காட்டி டுவாள்!

அன்பிலே பெருங் கடலாள்-முக
அழகிலே நறும் முகையாள்
பண்பிலே உயர்ந்தி டுவாள்-சிறு
பார்வையில் கவர்ந்தி டுவாள்!

இடையிலே சிறுத்தி டுவாள்-என்
இதயத்தில் இடம்பி டித்தாள்-புழக்
கடையிலே சிரித்தி டுவாள்-வருங்
கனவையும் பறித்தி டுவாள்!

குரலிலே அவள் ஒருயாழ்-அருங்
குணத்திலே அவள் இனிப்பாள்
அரவிலே சேஷனைப் போல்-என்
அன்பிலே அவள் பெரியாள்!

### குறிப்பு

(கடந்த(மே-9-மே-15) சுடர் ஒளி வாரமலரின் கவிதைப் புனலில் 'வெளிநாடு' என்ற தலைப்பில் முகிழ்த்த கவிதையை யாத்தவர் திருமதி இராஜினி சிவலிங்கம். 'கருமைக்கு ஓர் அழகுண்டு' கவிதையை இயற்றியவர் வட்டூர்க் கடம்பன். இரு பெயர்களும் விடுபட்டமைக்கு வருந்துகின்றோம்).

## பொன் நாளைத் தேடி.....!

-இளங்குமரன்-

கால்களில் கொலுசம் கொஞ்ச
கைவளை கீதம் பாட
வேல்விழி என்னைச் சுட்டு
ஆயிரம் அர்த்தங் கூற
பால்நிலா ஒளியைப் பூசி
பளிங்குசெய் சிற்பம் ஒப்ப
மால்அவன் மாதின் அழகில்
வந்தனள் எந்தன் பெண்ணே!

பூவினை விஞ்சும் தோற்றம்
புன்னகை சிந்தும் நேரம்
காவிலே புட்கள் எல்லாம்
காலையில் கத்தும் சத்தம்
கூவிடும் குயிலே குரலாய்
ஆடிடும் மயிலின் நடையாள்
காவியம் சொல்லா அழகில்
வந்தனள் எந்தன் முன்னே!

தேவர்தம் தேசம் சார்ந்த
கன்னியர் வெட்கும் உருவாள்
பாவலர் யாரும் இங்கே
பாடிடா அழகை உடையாள்
பாவமே பூமி என்று
மெல்லென நடக்கும் திருவாள்
தேவதை போலே என்முன்
வந்தனள் எந்தன் கண்ணே!

பார்தனில் பெண்கள் எல்லாம்
பொருமிடும் அழகை உடையாள்
கார்நிறக் கூந்தல் அவளின்
இடையினில் ஆடும் நடையாள்
கூர்விழி கொண்டு என்னை
நித்தமும் குத்தி நிற்கும்
சீர்மிகு திறத்தாள் வந்து
என்றுதான் என்னைச் சேர்வாள்?



# சாமியாராகப் போகிறேன் !

ஆந்திரா டி.வி. சேனல் ஒன்று வெளியிட்ட காட்சிகளைப் பார்த்து தமிழகமே அதிர்ந்து போனது. திருப்பதிக்கு சாமி கும்பிடப்போன மனோரமாவைப் பிடித்துத் தள்ளுகிறார்கள். அடிக்க முயல்கிறார்கள். நம்ம ஆச்சி பரிதாபமாக நிற்கிறார். பத்திரிகையாளர்களிடம் ஆவேசமாகப் பேசுகிறார். என்ன ஆச்சு மனோரமாவுக்கு?

முட்டு அறுவை சிகிச்சை, திருப்பதி தள்ளு முள்ளு, மனநிலை பற்றி வதந்தி என்று தொடர் சோதனைகள் சுழற்றியடிக்க மனோரமா இப்போது ஓய்விலிருக்கிறார்.

ஆயிரம் படங்கள் தாண்டிய ஆச்சியின் கண்ணீர் கதையை செய்தியாளர்களுடன் பகிர்ந்து கொண்டார் நடிகர் சிவகுமார்.

''மனோரமா பிறந்தவுடனே தாயையும், பிள்ளையையும் தகப்பன் வெறுத்து ஒதுக்க, வசதியான வீட்டைவிட்டு வந்து வீடுவீடா வேலை செய்து மனோரமாவை வளர்த்தார் அவங்களின் அம்மா.

விளையாடுகிற வயதில் வீடுகளில் தனது அம்மாவுக்கு உதவி செய்து, படிக்க வழியில்லாததால் சினிமா தியேட்டர்களுக்கு வெளியே கேட்கும் பாட்டுகளை உள் வாங்கி கணீர் குரலில் சுயம்புவாக பாடக் கற்றுக்கொண்டார். 12 வயதிலேயே நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார்.

ராமநாதனை கல்யாணம் செய்தார். ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்து விட்டு கணவன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்துகொண்டார்.

சினிமாவில் பிஸியான நேரம் அது. அதனால் பிள்ளையை கூடவே வளர்க்க முடியாமல் ஊட்டியில் படிக்க வைத்தார். பள்ளி இறுதி படிப்பு வரைக்கும் பாசத்துக்கு ஏங்கித் தவித்தான் மகன். பிறகு அவனது காதல் திருமணம், போராட்டம், விவாகரத்து என்ற தொடர் போராட்ட வாழ்க்கை மனோரமாவிற்கு. சமீபத்தில்தான் தன்னைத் தனியாக விட்டுட்டுப் போன கணவனின் மரணச் செய்தி வந்தது. அழுவதா சிரிப்பதா தெரியவில்லை மனோரமாவுக்கு. அப்பா என்று ஒருமுறை கூட அழைக்காத பிள்ளையை கொள்ளி போட அனுப்பி வைத்தார்.

கோடானகோடி ஜீவராசிகளில் ஒன்றாய்ப் பிறந்து, பிறந்த அடையாளம் தெரியாமல் போயிருக்க வேண்டிய ஒரு ஜீவன் தனது முயற்சியால் சரித்திரம் படைத்திருக்கிறது. இப்போதும் சோதனைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். எதையும் எதிர்கொள்வார். நான் பார்த்து விட்டு வந்தபோது நல்ல நலமாயிருக்கிறார்'' - என்கிறார் சிவக்குமார்.

இரண்டு கால்களிலும் மூட்டு அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆச்சிக்கு 45 நாள் வீட்டுக்குள் அடைந்து கிடந்ததே ஒருவித சலிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. மூட்டு மாற்றியது ஒரு பக்கம் மனரீதியாக தனக்குள் ஒருவித உறுத்தலை உருவாக்கி கூச்சத்தோடு நடைபோட்டிருக்கிறார்.

மனம் மிகவும் பாதிப்படைய, அறுபடை வீட்டிற்கும் பக்தியாகப் பயணிக்க ஆரம்பித்து விட்டார். இதன் கடைசியாக திருப்பதிக்கு சென்று மொட்டையடித்துக்கொண்டார்.

தமிழக மக்களையெல்லாம் குலுங்க குலுங்க சிரிக்கவைத்த மனோரமாவின் வாழ்க்கையில் சோகங்கள்தாம் தொடர் கதையாக இருக்கின்றன. மீண்டும் சிரித்தெழ எல்லாம் வல்ல இறைவன் தான் அருள்புரிய வேண்டும். ✱

## பிறக்கும் சிசுக்களுக்கு பூரண...

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணவை ஜீரணிக்கச் செய்யும் பகுதிகளில் அதிகளவு பற்றீரியாக்கள் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான ஜீரண சக்தியை வழங்கும் பகுதிகளில் பெறும் குடலிலேயே பாரியளவில் பற்றீரியாக்கள் உள்ளன.

HMO க்கள் குழந்தைகளுக்கு நலன் தரும் பற்றீரியாக்களுக்கு உணவாகின்றன. இதனைத் தொடர்ந்து இந்த பற்றீரியாக்கள் குடல் பகுதியில் பெருகுகின்றன. இவ்வாறு ஒலிகோசக்கரைட்ஸ் அழிக்கப்பட்டதை அடுத்து நலன் பயக்கும் பற்றீரியாக்கள் குறுகிய சங்கிலியுடைய கொழுப்பமிலங்களை உற்பத்தி செய்கின்றன. இந்த குறுகிய சங்கிலியுடைய கொழுப்பமிலங்கள் கொழுப்பமில சூழலை உருவாக்குகின்றன. இது ஆபத்தான பத்தோறெனிக் பற்றீரியாக்கள் மற்றும் வைரஸ்களை குறைவாக்குகின்றது.

இந்த பொறியியல் முறையானது பத்தோஜெனிக் நுண்சேதன முறையை தடுத்து நோயை ஏற்படுத்துகிறது.

குறுகிய சங்கிலியுடைய கொழுப்பமிலங்கள் குடற்சுவரை உருவாக்கும் கலங்களுக்கு எரிபொருளாக செயற்படும். மேலும், இந்த எரிபொருளானது குடற்கலங்கள் அதிகளவு சளி போன்ற பதார்த்தத்தை உற்பத்தி செய்ய உதவுகின்றன. (இந்த பதார்த்தமானது குடற்சுவரின் உள்ளகப்பகுதியில் முழுமையாக சுற்றி அமைகிறது). இது மேற்படி நுண் பொறியியல் முறையினால் ஏற்படும் நோயை தடுப்பதற்கான எதிர்ப்புச்சக்தியை பற்றீரியாவுக்கு வழங்குகிறது.

இதேவேளை, தாய்ப்பாலில் 130 இற்கும் மேற்பட்ட ஒலிகோசக்கரைட்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானிகள் பல காலமாக மேற்கொண்ட ஆராய்ச்சிகளுக்கிணங்க இயற்கை வளங்களை பயன்படுத்தி ஒலிகோசக்கரைட்டுகளான சேர்க்கைகளை தயாரிக்கலாமென கண்டுபிடித்துள்ளனர். இதில் முதலாவது சேர்க்கையானது ஒலிகோசக்கரைட்டுகள் மற்றும் Fபரக்டோ ஒலிகோசக்கரைட்டுகளின் கலவையாகும். இதற்கான விகிதாசாரமானது 9:1 ஆகும். இதற்கான அனுமதியை குழந்தை நல, இரப்பை ஈரலில் மற்றும் போசணைக்கான ஐரோப்பிய சங்கம் வழங்கியுள்ளது.

இது தொடர்பான கட்டுரைகள் உலகளாவிய ரீதியில் விஞ்ஞான ஆராய்ச்சி சஞ்சிகைகளில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தாய்ப்பாலினை பருக முடியாத துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகும் குழந்தைகளுக்கு அதற்கொப்பான சத்துக்களை உடைய பால்மாவினை தயாரித்து வழங்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளமை விஞ்ஞானிகளுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.


இலவசம்

SUZUKI Way of Life!

SUZUKI MARUTI

Count on us

யாழ் மண்ணில் உங்களுக்காக

சுசூக்கி மற்றும்
சுசூக்கி மாரூதி
சேவை நிலையம்

21 மற்றும் 22ம் திகதிகளில்
இலவச சேவை செயற்றிட்டம்

றோயல் லுப்ரிகேஷன் சேவை நிலையம்
K.K.S. வீதி சுன்னாகம், யாழ்ப்பாணம்
இலவச பரிசோதனை
பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
முரளி 0212 241090, 0213 217771, 0776 013568

உடனடி தொடர்பு - விராஜ் 0772 245719

AMW
அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
Web : www.amwltd.lk
E mail : maruti@amwltd.com
For Trade-in offer login to : www.amwtradein.com




# வன்னியில் மீள் கட்டுமானமும் குடியேற்றமும்

வன்னிப் பகுதியில் மிதிவெடி அகற்றும் பணிகள் 90 வீதம் முடிவடைந்து விட்டன என்று ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்திருக்கிறார். மகிழ்ச்சி. 90 வீதமான இடங்களில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் முடிவடைந்து விட்டன என்றால் 90 வீதமான இடங்களில் மீள் குடியேற்றம் நடைபெறச் சாத்தியம் என்பதே அர்த்தமாகும்.

ஆகையால் மீதியாக இருக்கின்ற இடங்களிலும் மக்கள் விரைவில் குடியேற்றப்படுவார்கள் என்று எதிர்பார்க்கலாம். எனவே போர் முடிந்து ஓராண்டுக்குள் இந்த இலக்கை எட்டியதில் பலத்த கண்டனங்களின் மத்தியிலும் அரசாங்கத்துக்கு ஒரு நற்பெயர் கிடைக்கத்தான் போகிறது,

வெளியுலகின் உதவிகள் இல்லாமற் போன சூழலில், சர்வதேச உறவுகளில் பிடுங்குப்பாடுகள் நிலவுகின்ற சூழலில் மகிந்த ராஜபக்ஷ தாக்குப் பிடித்து இந்த இலக்கை எட்டியிருக்கிறார்.





இந்த மாதிரி யுத்தம் நடந்த நாடுகளில், அல்லது பேரழிவுகள் ஏற்பட்ட நாடுகளில் மீள் கட்டுமானம், புனரமைப்பு போன்ற விசயங்கள் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் நடப்பதுண்டு. அல்லது மீள் கட்டுமானத்துக்கும் புனரமைப்புக்குமாக சர்வதேச சமூகம் தாராளமாக உதவுவதுண்டு.

அது ஒரு தார்மீகக் கடமை. ஆனால், இலங்கையில் அது நடக்கவில்லை. இது கண்டிக்கத்தக்கது. சர்வதேச சமூகத்தின் மிக மோசமான அரசியல் நலன்களை இங்கே நாம் தெளிவாக உணர முடியும். அடையாளம் காணவும் முடியும்.

இலங்கையில் ஆதிக்கம் செலுத்துவதற்கு மீண்டும் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. மேற்குலகம், இந்தியா, சீனா என்ற மும்முனைப் போட்டி ஆரம்பித்துள்ளது. சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரையில் அது இலங்கையைக் குழப்புணர்ச்சிக்கு உட்படுத்தவே விரும்புகிறது.

இது ஒரு மோசமான நிலைமையாகும். இதற்கு இடையளிப்பதில் 'மஹிந்த ராஜபக்ஷ காட்டிவரும் எதிர்ப்பால்' இலங்கைக்கான உதவிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த உதவிகளை நிறுத்தியதற்கு இந்த நாடுகள் - குறிப்பாக மேற்குலகம் - 'சொல்கின்ற குற்றச்சாட்டு இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகள் நடைபெற வேண்டும், போர்க் குற்றங்களைப் பற்றி பகிரங்கமாக ஆராய வேண்டும் என்பதே.

2006 இல் போர் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கிழக்கில் அக்ஷன் பாம் என்ற தொண்டு நிறுவன ஊழியர்கள் பதினைந்து பேர் வரையில் படுகொலைக்குள்ளாகியிருந்தனர். இந்தக் கொலைகள் குறித்த விசாரணைகளை அரசாங்கம் அப்போதே இழுத்தடித்து. அதற்கு ஒத்துழைக்காமல் நடந்து கொண்டது.

ஆனாலும் அதற்குப் பின்னும் சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கான போருக்கு தாராளமாக உதவியது மட்டுமல்ல, வன்னியில் நடைபெற்ற போருக்கு இதே சர்வதேச சமூகம் தொடர்ச்சியாக முழுமையான உதவியையும் ஆதரவையும் வழங்கியது. அப்படிப் பார்த்தால் இந்தப் போர்க்குற்றங்களிலும் மனித உரிமை மீறல்களிலும் சர்வதேச சமூகத்துக்கு பெரும் பொறுப்புண்டு.

போர்க் காலத்தில் முழுமையான மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன என்று ஐ. நா. உள்ளிட்ட சர்வதேச சமூகத்துக்கு நன்றாகத் தெரியும்.

அப்படித் தெரிந்து கொண்டே, மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்காமல் சாட்டுப் போக்குகளைச் சொல்லிக் கொண்டிருந்து விட்டு இப்போது நியாயக் குரல் எழுப்ப வேடிக்கை காட்டுகின்றன.

இப்போது இப்படிக் குரல் எழுப்புவதும் இலங்கையின் மீது தமது ஆதிக்கத்தை, செல்வாக்கை நிலைநாட்டி தமது நலன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கிலேயே தவிர, நீதியை. நியாயத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காக அல்ல.

உண்மையில் என்னதான் ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும் முதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த நாடுகள் உதவ முன் வந்திருக்க வேண்டும். அது முதற் கடமை. அந்த முதற் கடமையிலிருந்து தவறிவிட்டது சர்வதேச சமூகம். இதனை தமிழ்த் தரப்பு அரசியற் கட்சிகளும் தலைமைகளும் சுட்டிக் காட்ட வேண்டும். தமிழ்த் தரப்பு மட்டுமல்ல, இலங்கையிலுள்ள ஊடகங்களும் கல்வி அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்த வேணும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவை உதவி. அந்த உதவியைச் செய்வது சர்வதேச நியமமாகும். அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் தட்டிக் கழிக்கவோ மீறவோ கூடாது. ஆனால், அந்த நியமம் மீறப்பட்டிருக்கிறது என்றால், போர்க்காலத்தில் எப்படி போருக்கு ஆதரவளித்து இந்தச் சர்வதேச சமூகம் குற்றமிழைத்ததோ அதைப் போல இன்னொரு குற்றத்தை இப்போது இழைத்துக் கொண்டிருக்கிறது.

யுத்தம் முடிந்த பின்னர் பாதிக்கப்பட்ட மக்கள், பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் நிலை தொடர்பில் எந்த விதமான ஆரோக்கியமான நடவடிக்கையில் சர்வதேச சமூகமும் ஐ. நாவும் செயற்பட்டிருக்கின்றன. சரி, இலங்கை அரசாங்கம் எல்லாவற்றையும் எடுத்தெறிந்து ஒத்துழைக்காமல் முரண்டு பிடிக்கிறது என்றால் அதன் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து அதை ஒரு நிலைக்கு கொண்டு வந்திருக்கலாமே.

ஆனால், அதைச் செய்யாமல் போர்க்காலத்தில் வெறும் அறிக்கைகளை மட்டும் விட்டு தமது தார்மீக அக்கறையை(?) நிரூபித்ததைப் போல இந்த முறையும் - மீள் நிலைப்படுத்தலிலும் வித்தை காட்டுகின்றது சர்வதேச சமூகம்.

ஆகவே சர்வதேச சமூகத்தின் ஆதரவு இல்லாமல் இந்த ஓராண்டுக்குள் தன்னாலான விசயங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை மகிந்த அரசாங்கம் காட்டியிருக்கிறது.

உண்மையில் இது சர்வதேச சமூகத்தின் மீது பூசப்பட்ட கரிதான். அதேவேளை தமிழ்மக்கள் (பாதிக்கப் பட்ட மக்கள் ) தங்களை ஏமாற்றுகின்ற இந்தச் சர்வதேச சமூகத்தின் மீது தொடர்ச்சியாக கரியைப் பூசியே வருகிறார்கள்.

தமிழ் மக்கள் தம்மீது பூசும் கரியை நீக்குவதற்காகவே அண்மையில் அமெரிக்காவும் பிரிட்டனும் தமிழ் மக்களின் மீது அக்கறை கொண்டவை போன்று நடித்துக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக புலம் பெயர் தமிழர்களுடன் நெருக்கமாக நடந்து கொள்வது. ஆகவே சர்வதேச சமூகத்தின் மனநிலையை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

அடிக்கடி இலங்கைக்கு வந்த யப்பானியத் தூதுவர் அகாஸி இப்பொழுது இலங்கையின் பக்கம் தலை வைத்தே படுப்பதில்லை. மேற் குலகத்தைப் புறக்கணித்து விட்டு அகாஸியால் இலங்கைக்கு வர முடியாது.

நோர்வே வாய் பேசாது மௌனமாகி விட்டது.

எனவே பிற உதவிகள் இல்லாமல் அரசாங்கம் தனித்து மேற்கொள்கின்ற நடவடிக்கைகளின் மூலமாகவே மீள் குடியேற்றமும் மீள் கட்டுமானங்களும் நடைபெற்று வருகின்றன. அதனால், இவை மிகவும் மந்த நிலையிலேயே நடக்க வேண்டியுள்ளன.

உண்மையில் மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்ற இடத்தில் சரத் பொன்சேகாவும் ரணிலும் வெற்றியடைந்திருந்தால் மேற்குலகின் உதவிகள் இதை விட அதிகமாகத் தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கக் கூடும். பாதிக்கப்பட்ட மக்களின் உடனடிப் பணிகள் கொஞ்சம் கூடுதலாக நடைபெற வாய்ப்பருந்திருக்கும். ஆனால், இலங்கைத் தீவு அப்படியே உறிஞ்சப்படும். இப்போதும் அதுதான் நடக்கிறது. வேகமாக அல்லாமல், சற்று மந்தமாக. ஆகவே போரிலும் பாதிக்கப்பட்டு இப்போது மீள் கட்டுமாணம், மறுவாழ்வு போன்றவற்றிலும் பாதிக்கப்படுவது தமிழ் மக்களே.

வன்னியில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மீள் கட்டுமானப் பணிகளில் தொண்ணூறு வீதமானவையும் அப்படியே இருக்கின்றன. வீதி, மின்சாரம், மருத்துவம், தொடர்பாடல், கல்வி, கிராம அபிவிருத்தி, தொழில் துறை எனச் சகலதும் மிகவும் மோசமான நிலையிலேயே இருக்கின்றன.

அங்கே மீள் குடியேற்றமோ மீள் கட்டுமானமோ நடைபெறவே இல்லை. சனங்கள் தங்களுடைய வீடுகளில் மீண்டும் அகதிகளைப் போலவே இருக்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். போருக்குப் பின்னரும் வன்னி மக்கள் போர்ப் பாதிப்பைச் சந்தித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

இதேவேளை இந்த மக்களை மர நிழல்களில் வைத்துக் கொண்டே அரசாங்கம் மக்களுடைய கண்ணுக்கு முன்னே போரின் வெற்றியைக் கொண்டாடுகிறது. இந்த இடத்தில் அரசாங்கத்தின் தவறுகள் அதிகமாக இருப்பதை நாம் அவதானிக்கலாம்.

மீள் குடியேற்றம், மீள் கட்டுமானம் போன்ற நடவடிக்கைகளில் இதுவரை சம்மந்தப்பட்ட அதிகாரிகளோ அமைச்சர்களோ வன்னிக்கு விஜயம் செய்ததில்லை. நிலைமைகளை நேரில் பார்த்ததில்லை. ஜனாதிபதியின் செயலாளர்களில் ஒருவர் கூட வன்னி நிலைமைகளை நேரில் பார்த்ததில்லை.

அப்படி அவர்கள் பார்த்தால்தான் மக்கள் எப்படி வாழ்கிறார்கள், அவர்களுக்கு என்ன தேவை, அவர்களுடைய மனநிலை எப்படியிருக்கிறது என அறியலாம். அப்படி அறிந்தால்தான் அதற்குத் தக்கமாதிரி உதவித்திட்டங்களை வகுத்துக் கொள்ள முடியும். ஆனால் அது நடைபெறவில்லை.

எனவே அரசாங்கம் இந்தத் தவற்றைத் தொடர்ந்தும் விடக்கூடாது. இதை அரசாங்கத்தின் கவனத்துக்கு உணர்த்தி, பொருத்தமான நடவடிக்கையில் ஈடுபடுத்தும் பொறுப்பு ஊடகங்களுக்கும், தமிழ் அரசியற் கட்சிகளுக்கும் உண்டு. அதை அவர்கள் செய்ய வேண்டும்.

வேண்டுமானால் அரசாங்கத்துடன் இணைந்து ஒரு செயலணியைக் கூட பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காகவும் தேவைக்காகவும் உருவாக்கியும் கொள்ளலாம்.

எதுவோ போர் முடிந்து ஓராண்டாகிறது. போர் வெற்றிகள் பலவற்றைக் கண்டவர்கள் தமிழ் மக்கள். ஆனால், அந்த வெற்றிகள் நிரந்தரமல்ல என்பதையும் அறிந்தவர்கள் வன்னி மக்கள். ஆகவே போர் வெற்றியைக் கொண்டாடுவதை அந்த மக்களின் - பாதிக்கப்பட்ட மக்களின் - வெற்றியாக்க வேண்டும். இதையே செய்ய வேண்டும். இதுதான் முதன்மைப்பணியாகும். ✸

-லோகன் தயாளன்


**வீடு/காணி விற்பனைக்கு**

அராலி வடக்கு நாகேந்திரமடத்தில் ஆறு பரப்புக்காணியில் ஆறு அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு

தொடர்புகொள்ள வேண்டிய இல 0728562448/ 0114918249

# நெருப்பு மழை

2



**வன்னேரி ஐயா**

**தொடர்கதை**

**முன் கதைச்சுருக்கம்**

**சாரதாவின் கணவன் காண்டீபன் நல்ல உழைப்பாளி. அயராத உழைப்பினால் மனைவியையும் மூத்த மகள் மாலதியையும், கைக்குழந்தையையும் ஓரளவு கஷ்டமின்றி வாழ வைத்துக் கொண்டிருந்தான். நாட்கள் நகர்ந்தன. இராணுவ முன்னெடுப்புகள் இவர்களது பகுதியையும் நோக்கி நகருகின்றன. மக்கள் வீதிகளில் இறங்கி இலக்கற்றபோக்கில் ஓடுகிறார்கள்.**

படிப்படியாக முன்னேறி வந்த படையினர் இப்போது சாரதாவின் கிராமத்தை நெருங்கி வருகின்றமையை அண்மையில் கேட்கும் வேட்டொலிகளும், வீழ்ந்து வெடிக்கும் பீரங்கிகளும் பறைசாற்றின. விரைவில் இடம் பெயர்ந்து அகதிகளாக ஓட வேண்டியிருக்கும் என்பதை ஏற்கெனவே எதிர்பார்த்திருந்தமையினால், எல்லோரும் முக்கியமான சில பொருட்களை எடுத்துக் கொண்டு புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்த போதே ஊர்மனைகளுக்குள்ளும் ஷெல்கள் வந்து வீழ்ந்து வெடித்தன. வானத்தில் விமானங்களின் இரைச்சல் வேறு. வீழ்ந்த குண்டுகளில் ஒன்று அவனது வீட்டின் மீதும் விழுந்தது. குப்புறப் படுத்தவன் மீண்டும் தனது கண்களைத் திறக்கமுடியாமல் கரும் புகையுடன் எரியும் வீட்டிலிருந்து குழறினான். கற்களும், நெருப்புத் துண்டங்களும் அருகில் வெதும்பி வதைக்கவே தட்டுத்தடுமாறி எழுந்து வெளியே ஓடி வந்தபடி கதறினான். ''ஐயோ என்ர அம்மா, அப்பா... தம்பி... தங்கச்சி...'' என அவன் கதறியபடி அவர்களைத் தேடி நாலாபுறமும் கண்களைச் சுழல விட்டான்.

மூன்று நான்கு வீடுகள் எரிந்து கொண்டிருந்தன. கற்குவியலாக்கப்பட்ட வீடுகளின் சிதறல்களிடையே இருந்து வெளியே வருவோரையும், அங்கவீனமுற்று அழும் குழந்தைகளின் இரத்த வெள்ளத்தையும், அபலைகளாக்கப்பட்ட பெண்களின் அழுகுரலையும்,சொற்ப பொழுதுக்குள் உயிர் துறந்துவிட்ட அப்பாவி மனிதர்களையும் கண்டும் ஏதும் செய்திட முடியாமல் தமது உயிரைக் காத்திட பலரும் திசையறியாது சிதறி ஓடினர். தன் தாயகத்திற்காக எதிர்த்துப் போராடி உயிரைப் பறிகொடுத்து உடலை மண்ணுக்கு வித்துடலாக்கிய வீர இளைஞர்களின் சடலங்கள் ஆங்காங்கே வீதிகளில் அநாதரவாகக் கிடந்தன. பல்குழல் பீரங்கி, கனரக ஆயுதங்கள், விமானக் குண்டுகள் என வாரி வழங்கிய அண்டை நாடும், ஆசிய மற்றும் மேற்கு நாடுகளும் நீலிக் கண்ணீர் வடித்தன. அதற்குப் பின்னர் மக்கள் பட்ட அவலங்களும், உயிர்காக்கும் இடப் பெயர்வுகளும் சொல்லில் அடங்காதவை.

சாரதாவின் கணவன் காண்டீபன் வெளியே சென்றிருந்தான். இன்னமும் திரும்பவில்லை. சாரதாவுக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. பதற்றம் நிலவுவதற்கு முன்னரே இடிந்து சரிந்து போன வீட்டை நோக்கினாள். அவளோடு வெளியே வந்த குழந்தை மாலதியும், கைக்குழந்தையும் வீறிட்டு அலறிக் கொண்டிருந்தனர். வீட்டுக்குள்ளிருந்த வேறு எவரும் வெளியே வராததனால் சாரதாவின் மனம் பதைபதைத்தது. காண்டீபனும் அருகில் இல்லாததால் அவள் மனம் பதறியது.

இடிபாடுகளுக்கிடையே அப்பாவின் குளறல் சத்தம் கேட்டது. பதட்டமான நேரத்திலும் சிலர் உதவிக்கு வந்தனர். இடிபாடுகளுக்கு இடையே சென்று பார்த்தபோது சாரதாவின் தந்தையாரைத் தவிர ஏனைய மூவரும் பேச்சு மூச்சு அற்றிருந்தனர். அப்பாவின் காலிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. நாடியோட்டத்தைப் பார்த்த ஒருவர் அம்மா, தம்பி, தங்கை மூவரும் இறந்து விட்டதாகக் கூறவே சாரதாவின் காலடியில் பூமி விலகியது. ஒருபுறம் எறிகணைகள் விழுந்தாலும், மறுபுறம் மனிதாபிமான முள்ள சிலர் காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். தூக்கிக் கொண்டு நடந்து தான் செல்லவேண்டிய அவல நிலை. அப்பாவைப் பார்ப்பதா? இறந்த உறவுகளை அடக்கம் செய்வதா? என்று அவள் தவித்துக் கொண்டிருந்த போது காண்டீபன் பதைபதைப்புடன் வந்து கொண்டிருந்தமை அவள் வயிற்றில் பாலை வார்த்தது. ஓடி வந்த அவனைக் கட்டிப் பிடித்து 'ஓ...' என அழுதாள். ''அம்மா, தம்பி, தங்கச்சி... எல்லொரும் எங்களை விட்டுப் போய்ச் சேர்ந்துவிட்டினமே.''

சாரதாவைத் தேற்றியபடி அழுது கொண்டிருந்த குழந்தைகளைத் தூக்கி அணைத்தான் காண்டீபன். அப்பா காயப்பட்டதை அறிந்தும், சாரதாவை வைத்தியசாலைக்குப் போகும்படியும், தான் இறந்தவர்களை அடக்கம் செய்து விட்டு வருவதாகவும் கூறினான். அவன் சொல்வதில் உள்ள நியாயத்தைப் புரிந்து கொண்ட சாரதா, ''கெதியில வாங்கோ... ஷெல் வந்து விழுந்து கொண்டே இருக்கு... இன்னும் கொஞ்சத்தில ஆமியளும் வந்து விடுவாங்கள்.... அவங்கள் வரமுந்தி கெதியா வாங்கோ.....'' என்று கூறிவிட்டுச் சென்றாள்.

வைத்தியசாலையும் இடப்பெயர்ந்து ஒரு கட்டடத்தில்தான் இயங்கிக் கொண்டு இருந்தது. வசதிகள் அற்ற சூழ்நிலையிலும், ஆளணி மற்றும் உபகரண, தளபாட பற்றாக்குறைகள் மத்தியிலும் தமது உயிரையும் துச்சமாக மதித்து பணியாற்றிக் கொண்டிருந்த வைத்தியர்களையும், ஏனைய ஊழியர்கள், தொண்டர்களையும் பார்க்க மெய் சிலிர்த்தது. பலருக்கு சேலைன் மருந்து ஏற்றுப்பட்ட வண்ணம் இருந்தது. வைத்தியர்களும் ஊழியர்களும் பம்பரம் போல் பணியாற்றிக் கொண்டிருந்தனர். சாரதா தகப்பனைத் தேடினாள்.

நோயாளர்களின் அழுகை ஒலி எங்கும் கழிவிரக்கத்தை ஏற்படுத்தியது. காலை இழந்தவர்கள், கையை இழந்தவர்கள், உடல் சிதைந்தவர்கள், கண்களைப் பறிகொடுத்தவர்கள், சிகிச்சை பலனளிக்காது இறந்தவர்கள் என எங்குமே குரூரமான காட்சியாக இருந்தது. சாரதா ஒருவாறு தகப்பனைக் கண்டுபிடித்தாள். நிலத்தில் படுத்தபடி குளுக்கோஸ் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. நினைவிழந்திருந்தார்.

பதற்றத்துடன் சாரதா தாதியிடம் விசாரித்தாள். சத்திரசிகிச்சை மூலம் முழங்காலுக்குக் கீழ்ப்பகுதி அகற்றப்பட்டுவிட்டதாகவும், இன்னமும் மயக்கம் தெளியவில்லை என்றும் தாதி கூறினாள்.

''உயிருக்கு ஏதும் ஆபத்தே அம்மா...?''

''இல்லை... இனிப் பயமில்லை. ஆனால் புண்மாறி எழும்ப நாளெடுக்கும்... ஆனால் ஆஸ்பத்திரியும் இடம் பெயரும் போல இருக்கு.... எல்லாம் எங்கட கையில இல்ல....''

சாரதாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவள் குமும்பிக் கொண்டிருந்த போது கரண்டீபனும் அங்கு வந்து சேர்ந்தான்.

இதற்கிடையில் வைத்தியசாலைச் சுற்றுவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்கள் கூடாரமடித்து தங்க ஆரம்பித்தார்கள்.

இத்தனை இடர்களுக்கு மத்தியிலும் ஐ.சீ.ஆர்.சி. படங்குகளை விநியோகித் தது. எனினும் எல்லோருக்கும் கிடைக் காதநதால், ஒவ்வொரு கூடாரத்திலும் சில குடும்பங்கள் தங்க நேரிட்டது. அடுத்த நேரக் கணப்பொழுது கேள்விக் குறியாக இருந்தது. குழந்தைகள் பசி தாங்குமா?

மனிதாபிமான நடவடிக்கை என்ற போலிமுகத்திரையின் மனிதாபிமான மற்ற ரணங்களை யாருக்கு யார் எடுத்துரைப்பது? தலையிடியும் வயிற்றுவலியும் தனக்குத் தனக்கு வந்தால் தானே தெரியும்?

பகலில் வெயில் வெக்கையை தாங்க முடியாமல் குழந்தைகள் அழுதன. மரங்களுக்குக் கீழ் சென்று நிழலில் பலர் இளைப்பாறுவார்கள். மரங்களை கண்ணை மூடிக்கொண்டு வெட்டுதல் எவ்வளவு முட்டாள்தனம் என்ற எண்ணம் காண்டீபனின் மனதில் தோன்றியது.

ஐ.நா. அகதிகளுக்கான நிறுவனத்தின் நிவாரண உதவிகளும் இல்லாது விட்டால் இன்று எல்லோரும் பட்டினியில் வாடிவதங்கி, போஷாக்கின்மையினால் சிலர் இறந்தும் இருப்பார்கள். கிடைக்கும் உணவுப் பொருட்களும் போதவில்லை. தோதாக சமைப்பதற்கு பொருட்களும் இல்லை. ஒவ்வொரு இடத்திலிருந்தும் இடம்பெயரும் போதும் சமையல் பாத்திரங்களையும் விட்டுவிட்டு வரவேண்டியதாயிற்று. சற்று எறிகணை வீச்சு குறைந்ததும் சிலர் திரும்பப் போய் முக்கியமான பொருட்களை எடுத்து வருவார்கள்.

அப்படிப் போனவர்களில் ஓரிருவர் திரும்புவதில்லை. இதனால் போகவும் பயம். இராணுவ நகர்வும் விரைவாகவே இருக்கிறது.

சாரதாவின் கூடாரத்துள் இருக்கும் அனைவரும் கூட்டாஞ்சோறு சமைத்துச் சாப்பிடுவார்கள். சின்ன வயதில் மணற் சோறு காய்ச்சி பூவரசம் இலைகளில் உண்டமை சாரதாவின் நினைவுக்கு வரும். கண்கள் கசியும். பசியில் அழும் குழந்தைக்கு தாய்ப்பால் கை கொடுக்கும். அதுவும் உணவின்றி சுரப்பது குறைந்து விட்டதால் அடிக்கடி குழந்தை அழும். அடிக்கடி அவளும் பாலைக் கொடுப்பாள். இப்போதெல்லாம் மற்றவர்களின் முன்னால் மார்பைத் திறந்து பால் கொடுப்பதிலுள்ள சங்கடம் குறைந்துவிட்டது. மறைப்பில்லாத கூடார வாழ்வில் இனி இழப்பதற்கு எதுவும் இல்லை, இந்த உடல் ஒன்றைத் தவிர. ''அம்மா பசிக்குது...?'' இதுதான் இப்போது மாலதிக்கு வாய்ப்பாடம். அவள் மட்டுமல்ல; எல்லாச் சிறுவர்களும் அப்படித்தான். பெரியவர்களுக்கும் பசிதான். வாய்விட்டு சொல்ல முடியாத தயக்கம். யாரிடம் யார் சொல்வது? ஓரிரு வாரங்களுக்குள்ளாகவே எல்லோரும் மெலிந்து விட்டார்கள். தொடர்ந்து இடம் பெயர்ந்து வந்து கொண்ருந்தவர் களைப் பற்றி சொல்லத் தேவையில்லை. எலும்பும் தோலுமாகி....

வயற்கரையோரமாக உள்ள காட்டில் பாலை மரங்கள் பழுத்து சொரிந்திருந்தன. குழந்தைகள் பசி தாளாது பாலைப் பழங்களைப் பொறுக்கிச் சாப்பிடுவார்கள். சில வேளைகளில் வளர்ந்த சில சிறுவர்கள் பாலை மரங்களில் ஏறி பழமுள்ள கிளைகளை முறித்துப் போடுவார்கள். சிறுவர்கள் மாத்திரமின்றி பெரியவர்களும் பாலைப் பழங்களை கிளைகளிலிருந்து பிடுங்கி சாப்பிட்டு அந்த நேரப் பசியை ஆற்றிக் கொள்வார்கள். நிவாரணம் கிடைக்கும் நாட்களில் தான் சற்று வயிறார உணவு கிடைக்கும்.

சாரதாவின் அப்பா குணமாகி விட்டார். அதிஷ்டவசமாக ஊன்று தடிகள் கிடைத்ததால், கமக்கட்டில் வைத்து மெல்ல மெல்ல நடப்பார். செயற்கைக் கால் போடும் வாய்ப்பு வன்னியில் இல்லை. வவுனியா போன பின்னராவது கிடைக்குமா என ஏங்கினாள் சாரதா. நோயாளர்களை ஏற்றிச் செல்லும் கப்பலுக்குப் பதிந்திருந்தார்கள். அதிலும் தாமதம் ஒரு புறம், பெரும் எண்ணிக்கையிலான அவசர நோயாளர்களின் காத்திருப்பு மறுபுறம். வந்து சென்ற முதற் கப்பலில் இடம் கிடைக்காத போதும், அடுத்த கப்பலில் இடம் கிடைத்து அனுப்பியாகிவிட்டதால் சாரதா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். அடுத்த இடப்பெயர்வில் அப்பாவைக் கூட்டிக்கொண்டு ஓடுவதில் உள்ள பிரச்சினை தீர்ந்திருந்தது. எந்த நேரமும் அடுத்த இடப்பெயர்வு வரலாம் என்பதால் எல்லோரும் அதற்கான ஆயத்தங்களுடன்தான் இருந்தார்கள்.

எதிர்பார்த்ததை விட சற்று தாமதமானாலும் அடுத்த இடப் பெயர்வும் விரட்ட ஆரம்பித்தது. வழமைபோல் எறிகணைகளும், விமானக்குண்டுகளும் தமது பணியைச் செவ்வனே செய்ய ஆரம்பித்தன.

மீண்டும் ஒரு அக்கினி மழை!

மனிதாபிமான நடவடிக்கை மனிதர்களை விரட்டி விரட்டி உடல் சிதற வைத்து ஒருபுறம் கொன்று குவிக்க மக்கள் உயிர் காக்க மறுபுறம் ஓட ஆரம்பித்தார்கள்.

(நெருப்பு மழை தொடரும்)

புத்தாக்கம்: கே.கான்

# நரியும் ஆடும்




# கிளி



கூண்டிலிருந்த கிளியிடம் சிட்டுக்குருவி கேட்டது: ''நீயும் மனுஷர் மாதிரிப் பேசக் கற்றுக்கொண்டாயே, நீயும் இனி மனித இனம் தானே!''

''இந்த மனிதர்களுடன் என்னையும் ஒப்பிட்டுப் பேசுகின்றாயா? அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாய் இருந்தாலும், அந்த இனத்தார்களுடன் சேர்ந்துகொள்ள எனக்கு விருப்பமில்லை'' என்று சொன்னது கிளி. ''அட பைத்தியமே, அவர்களுடன் இணைவதற்குத் தவம் கிடந்தாலும் கிடைக்காதல்லவா? நீ பாக்கியவான்'' என்று சொன்னது சிட்டு. ''அவர்களுடன் சேர்ந்து அபாக்கியவானாகக் கூடாது என்று தவமிருக்கிறேன்; ஏனென்றால், அவர்கள் அடிக்கடி நாவைப் புரட்டி இரண்டு விதமாகப் பேசுவார்கள். எனக்கு அப்படிப் பேச வராது'' என்று சொன்னது கிளி.

*மர்ஹூம் மஷ்ஹூர்*

இளஞ்சுடர்


# சிறுவர் கைவண்ணம்



வி.ஐஸ்வர்யா
தரம் 04, தெஹிவளை தமிழ்மகா வித்தியாலயம்.



தவராசா பிரணவி
தரம்-05, வவு/ சைவப்பிரகாச மகாவித்தியாலயம்.



கேதீஸ்வரன் அபிதாரணி
சைவபிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு

# சதுரங்க ஆட்டக்காரன்

2

-ஸியெம்மே அமீன்

தேவதைகள் மறைந்து போனவுடன் பகீரதன் திக்பிரமை பிடித்தவன்போல் சிறிது நேரம் இருந்தான். 'ஆண்டவா, என்ன நடந்துவிட்டது? விளையாட்டு ஆசையால் மோசம் போய்விட்டேனே! எனது மனைவி, மக்கள் இப்போது உயிர் வாழ்ந்து கொண்டிருப்பார்களா? நான் இல்லாமல் குடும்பத்தவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள்? அவர்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருந்தாலும், நான் வீட்டுக்குப் போய் நடந்த சங்கதியைச் சொல்லவும் முடியாதே' என்று நினைத்து மனம் குழம்பினான். தேவதைகளின் நிபந்தனைகளை நினைத்தபோது அவனுடைய உடம்பெல்லாம் நடுங்கிற்று. 'இனிச் செய்வதற்கு ஒன்றுமில்லை. நடந்தது நடந்துவிட்டது; வருவதை எதிர்கொள்ள வேண்டியது தான்' என்ற தீர்மானத்தோடு தன்னிடமிருந்த தங்க நாணயங்களை ஒரு மூட்டையாகக் கட்டிக் கொண்டு கற்படாரத்தின் வழியே மேல் நோக்கி ஏறி, காட்டினூடாக நடக்கலானான்.

அவன் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் கடந்துவந்த காடு இப்போது மிக அடர்த்தியானதாகக் காணப்பட்டது. மரங்கள் பெரும் இராட்சஸ மரங்களாக வளர்ந்திருந்தன. கொடிகள் பின்னிப்பிணைந்து பாதையை மறைத்தன. மிகவும் சிரமத்தோடு அதிக தூரம் நடந்தான். இனியும் நடக்க முடியாது என்று ஓர் இடத்தில் அமர்ந்தபோது, தூரத்தில் புதியதொரு குடியிருப்பு பார்வையில் பட்டது.

அங்கே மண்வீடுகளுக்குப் பதிலாக புதிய அமைப்பில் வீடுகள் பல தோற்றமளித்தன. கிராமத்துக்கு நடுவே கறுப்பு நிறமான ஏதோ ஒன்று வளைந்து வளைந்து சென்றது. அது பாதை என்று அவனுக்குத் தெரியாது. சிறிது நேரத்துக்குப் பிறகு புர் என்ற ஒரு சத்தம் கேட்டது. ஏதாவது பூதம் வருகிறதா? என்று பயந்து ஒரு மரத்துக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு எட்டிப் பார்த்தான். மறுகணம் கறுப்பு நிறப் பொருளின் மீது எதுவோ ஊர்ந்து வருவது தெரிந்தது. வந்த பொருள் நின்றது. அதிலிருந்து மக்கள் பொட்டலங்களோடு இறங்கினார்கள். இதனால் அவனுடைய பயம் சற்றுக் குறைந்தது. அப்போது தான் அது புதிய பாதை என்பதும், மாட்டு வண்டிக்குப் பதிலாக புதிய வண்டிகள் பாவனைக்கு வந்திருப்பதும் அவனுக்குப் புரிந்தது. ஆனால், அவர்கள் அணிந்துகொண்டிருந்த உடைகள் வித்தியாசமாக இருப்பதைக் கண்டு அவன் ஆச்சரியப்பட்டான். மறுகணம் தன்னுடைய உடைகளை உற்றுநோக்கினான். ஆனால், இப்போது அதற்காக எதுவும் செய்ய அவனால் முடியவில்லை. பயம் மறைய பயணத்தைத் தொடர்ந்தான்.

அப்போது பெரிய, சிறிய கடைகள பாதையோரத்தில் இருப்பது தெரிந்தது. பணம் தானே இருக்கிறது என்ற துணிவில் ஒரு கடையை அணுகினான்.

கடைக்காரன் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.அவனுடைய உடையை உன்னிப்பாகப் பார்த்தான்.

"எனக்கு நான்கு ரொட்டிகளும் தின்பண்டங்கள் எல்லாவற்றிலும் ஒவ்வோர் இறாத்தலும் தாருங்கள்" என்றான்.

"நீங்கள் எந்த உலகத்திலிருந்து வருகிறீர்கள்? இறாத்தல் கணக்கெல்லாம் போய் எவ்வளவு காலமாகிறது! இப்போது கிலோ கணக்கில் தான் எல்லாம் நிறுத்துக் கொடுக்கிறோம்" என்றான் கடைக்காரன்.

'கிலோ என்றால் என்ன? என்று அவன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. எனினும், ஐம்பது வருடங்களுக்கு முற்பட்ட பிறவி என்பதைக் காட்டிக்கொள்ளாமல் "ஒவ்வொரு கிலோ தாருங்கள்" என்றான்.

"சரி. ஆனால், ரொட்டி இல்லை; பாண் தான் இருக்கிறது" என்று கடைக்காரன் சொன்னபோது அவன் மீண்டும் மலைத்துப் போனான்.


"பாணைப் பார்ப்போம் நல்லதா என்று?" என்று கேட்டு தந்திரமாக அது எப்படியானது என்பதை அறிய விரும்பினான்.

"நல்ல பாண் தான்; இன்று காலையில் வந்தது" என்று கடைக்காரன் பாண் ஒன்றை எடுத்துக் காட்டினான். தப்பினோம் பிழைத்தோம் என்று மனதிற்குள் மகிழ்ந்தவனாக, "இரண்டு தாருங்கள்" என்றான்.

கடைக்காரன் சாமான்களைக் கட்டிக்கொடுத்தான். பகீரதன் தங்க நாணயம் ஒன்றை எடுத்து நீட்டினான்.

"இந்த நாணயம் உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தது? இது புழக்கத்தில் இல்லாத பணமாயிற்றே" என்று கடைக்காரன் சொன்னபோது அவனால் எதுவும் பேச முடியவில்லை. அவனுடைய உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது.

மீண்டும் கடைக்காரனே பேசினான்: "ஐம்பது வருடங்களுக்கு முன்பு இந்தப் பணம் தான் புழக்கத்தில் இருந்ததாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால், இது அசல் தங்கம். இதனுடைய பெறுமதி இப்போது பத்தாயிரம் ரூபாய்.



"சில நாட்களுக்கு முன்னர் கிணறு தோண்டும் போது இது அகப்பட்டது. மற்றப் பணத்தோடு இதையும் சேர்த்து வைத்துவிட்டேன். இருந்தாலும் பரவாயில்லை. இதை நீங்களே வைத்துக்கொண்டு உரிய பெறுமதியைத் தாருங்கள்" என்றான்.

மிகுதிப் பணத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு, "நான் அயலூர்க்காரன். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த விசாலாட்சியைப் பார்க்க வந்தேன். நான் அவர்களுக்குத் தூரத்து உறவு. அவர்களுடைய வீடு எங்கே இருக்கிறது என்று காட்ட முடியுமா?" என்று கேட்டான்.

கடைக்காரன் சிறிது தூரத்தில் இருந்த ஒரு குடிசையைச் சுட்டிக்காட்டி, "அதோ, அங்கே ஒரு மாமரம் நிற்கிறதே, அதற்கு முன்னால் இருக்கின்ற மண் வீடுதான் விசாலாட்சியின் வீடு" என்று கூறிவிட்டு, "அந்த விசாலாட்சிக்கு மூளை சரியில்லை. அவளுக்கு இப்போது வயது எழுபதுக்கு மேல் இருக்கும். கண்ணும் தெரிவதில்லை. காட்டுக்கு மாடு மேய்க்கச் சென்ற அவளுடைய கணவன் திரும்பி வரவில்லையாம். அவன் செத்துப்போய் விட்டதாகவே எல்லோரும் சொன்னார்கள். இது மிகப் பழைய சமாச்சாரம். ஆனால், அந்தக் கிழவி தன்னுடைய கணவன் சாகவில்லையென்றும் ஒரு நாளைக்குத் திரும்பி வருவான என்றும் சொல்லிக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்" என்று கூறினான்.

இதைக் கேட்டதும் அவனுடைய உடம்பெல்லாம் புல்லரித்தது. கண்களிலிருந்து கண்ணீர் வந்துவிட்டது. 'என் மனைவிக்கு எழுபது வயதுக்கு மேல் என்று சொல்கிறாரே. எனக்கோ இப்போது முப்பது வயது. எனது பிள்ளைகளான சத்தியசீலனுக்கும் நவநீதனுக்கும் இப்போது என்ன வயதிருக்கும்? நான் ஜமீந்தாரிடம் வேலை செய்தபோது மூத்தவனுக்கு ஏழு வயது, மற்றவனுக்கு ஐந்து வயது. இப்போது அவர்களின் வயது ஐம்பத்தி ஏழாகவும் ஐம்பத்தி ஐந்தாகவும் இருக்கலாம். மனைவியைப் போன்றே என்னுடைய பிள்ளைகளும் என்னைவிட மூத்தவர்களாகிப் போய் விட்டார்கள். நான் எப்படி அவர்களை எதிர்கொள்ளப் போகிறேன்?' இத்யாதி ஆயிரம் சிந்தனைகளோடும் தன்னுடைய வீட்டை நோக்கி மெல்ல மெல்ல நடந்து செல்லலானான்.

(தொடரும்)

---

## இழந்து போன இனிய நாட்கள்



வெண்முகில்கள் நடுவினிலே
வெண்மதியின் தரிசனம்
தென்றல் காற்றின் தழுவலிலே
தேகமெல்லாம் புதுசுகம்
அடர்ந்த இருள் கலந்துகொண்டு
அழகாய் இங்கே இரவுப்பெண்
அங்கமெல்லாம் தகதகக்க
அழகிகளாய் ஆம்பல்கள்!!

முற்றத்து வெளியிலெல்லாம்
முழங்காலில் நடைபோட்டு
அம்மா மடியில் தலைசாய்த்து
அமுதுண்ட நாட்களெல்லாம்
எங்கே ஓடி ஒளிந்தனவோ
என்னைத் தவிக்க விட்டுவிட்டு!!



அப்பா முதுகில் சவாரியும்
அக்காவோடு அடிதடியும்
பூஞ்செடிக்குள் ஒளிந்துகொண்டு
பூச்சாண்டியாய் மகிழ்ந்ததையும்
என்னியெண்ணி தவிக்கின்றேன்
ஏக்கத்தோடு விழிக்கின்றேன் !!

மழலைகளாய்க் குதூகலித்து
மனதினிலே இடம்பிடித்த
காலங்கள் இப்போதெல்லாம்
காணவே கிடைப்பதில்லை
இயந்திரமான வாழ்வதனில்
இல்லையே அந்த நாட்கள்!!

கவிஞர்
-அனலியன் மகன்

---

## இளஞ்சுடர்

தயாரிப்பு : தினா

### உங்களால் முடியுமா?

1. கீழே உள்ள 16 புள்ளிகளையும் 6 நேர்கோடுகள் வரைவதன் மூலம் இணைக்கவேண்டும். வரையத் தொடங்கி முடிக்கும் வரை பென்சிலைத் தாளிலிருந்து எடுக்கக் கூடாது. முயன்று பாருங்கள்.


* * * *

* * * *

* * * *

* * * *

1. கீழே உள்ள நட்சத்திர வடிவத்தில் அமைந்துள்ள 12 வட்டங்களையும் 1 முதல் 12 வரையுள்ள எண்களினால் நிரப்ப வேண்டும். ஒருமுறை பயன்படுத்திய எண்ணை மீண்டும் பயன்படுத்தக் கூடாது. ஒரே வரிசையில் உள்ள எந்த நான்கு வட்டங்களின் இலக்கங்களைக் கூட்டினாலும் 26 என்ற விடை வரவேண்டும். முயன்று பாருங்கள்.



விடை அடுத்த வாரம்

**முதல் பகுதியின் சுருக்கம்**

விசுமடு விதியால் இடம் பெயர்ந்து தேராவிலை அடைந்தாள் கலை அரசி. அவள் ஏற்கனவே யுத்தத்தில் கணவனை இழந்தவள். செஞ்சோலைத் தாக்குதலின் போது ஒரு காலை இழந்த கலை அரசி ஒரு கர்ப்பிணியும் கூட. வயிற்றில் குழந்தையுடன் தனிமரமாகி அவள் பட்ட கஷ்டங்களைக் கண்டு வருந்துகிறான் காண்டீபன் என்ற போராளி. போரில் காண்டீபன் இறந்து போன செய்தி கலை அரசியை இடியாகத் தாக்குகிறது. கலையரசி இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலை அடைகிறாள். அங்கு அசோக் என்ற தாடிக்கார இளைஞன் ஒருவரின் உதவி கிடைக்கிறது. அவளுக்கு பிரசவ நாளும் நெருங்கி விட்டது. கலை அரசி பிரசவ வலியால் துடிப்பதைக் கண்டு அசோக் என்ற அந்த தாடிக்கார இளைஞன் கலங்குகிறான். அங்கிருந்து சென்று ஒரு வயது போன பாட்டியைத் தூக்கிக் கொண்டு வருகிறான் கலை அரசி இருந்த இடத்துக்கு...

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம் பெற்ற சம்பவங்களை பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்த தொடரில் 'கச்சேரி சடையன்' என்ற புனை பெயரில் வெளி வருகிறது 'புதிய உறவுகள்' என்ற உண்மைக்கதை.

# புதிய உறவுகள்

4

கச்சேரி சடையன்



சென்றவாரத் தொடர்ச்சி

பாட்டி கண்டமாதிரி ஏசி முடிக்க, அண்ணா கேட்டார் ''என்ன ஏசி முடிஞ்சுதா?'' என்று. பாட்டி பேசாமல் இருக்க, ''எனக்கென்ன என்ர பாட்டிதானே! என்னை எப்படி ஏசினா என்ன....'' என்று சொல்ல, பாட்டியும் அவரை வடிவாகப் பார்த்தார். பார்த்திட்டு என்னைப் பார்த்தா. ''பாட்டி எனக்கு ஏலாம இருக்கு'' என்றேன்.

''ஏன்டி புள்ள இது உனக்கு தலைப் பிரசவமா?'' என்று கேட்டா. ''ஓம்'' என்றேன். சரி என்று ஏதோ எல்லாம் செய்தா. எனக்கு வலி அதிகரிக்க தாடி அண்ணாவைப் பாட்டி வெளியில் நிற்கச் சொன்னா. நான் அவரை வெளியில் போகவிடவில்லை. அவரின் கையைப் பிடித்தேன். அப்போது பாட்டி கேட்டா, ''ஏன்ரி பிள்ள இவன் உன்ர புருஷனா?''. ''இல்லை என்று தலையசைக்க, ''அப்ப யார் இவன்?'' என்று கேட்டார். ''இது என்ர அண்ணா'' என்றேன். ''நீ ஒன்றுக்கும் பயப்படாதே. எல்லாத்துக்கும் நான் இருக்கிறன்'' என்றா. எனக்கும் கொஞ்சம் மனத் திருப்தி. மீண்டும் எனக்கு வலி எடுத்தது. சில நிமிடங்களில் அதிக வலி எடுத்து நான் கத்தினேன். அந்த ஷெல் மழைக்குள்ளும் பதுங்கு குழிக்குள் என் செல்ல மகன் பிறந்தான். என் தாடி அண்ணாவால்தான் என் குழந்தை சுகமாகப் பிறந்தான். பாட்டி அடுத்த நாளும் வந்தா. எல்லாம் அவா சொல்லச் சொல்ல தாடி அண்ணா செய்து தந்தார். பாட்டி மெதுவாக என்னிடம் கேட்டா, ''உன்ர புருஷன் எங்க?'' என்று. நானும் என் நிலைமையைப் பாட்டிக்குச் சொல்ல பாட்டி அனுதாபப்பட்டா. ''என்ன புள்ள செய்ய. கவனமாய் இரு. அவன் நல்ல பெடியன் உன்னை வடிவாகப் பார்த்துக் கொள்வான். நீ அவன் சொல்லுறதைக் கேட்டு நட'' என்றார். தாடி அண்ணா திரும்பி வர பாட்டி வடிவாகப் பார்த்தா. தாடித் தம்பி போவோமா என்றார் பாட்டி. பாட்டியைத் தூக்கிக் கொண்டு, தாடி அண்ணா வெளிக்கிட பாட்டி தாடி அண்ணாவின் முகத்தைத் தடவிக் கொண்டு ''நீ நல்லாய் இருப்பாய். நான் ஏசினதை பெரிதுபடுத்தாதே. நீ என்ர வயிற்றில பிறந்திருந்தால் சந்தோஷப்பட்டிருப்பேன். உன்ர தாய் கொடுத்து வைச்சவள். நீ இந்தப் பிள்ளையை கவனமாகப் பார்த்துக்கொள் அப்பு'' என்று சொல்லி முகத்தைத் தடவிக் கொஞ்சினா. அவரும் ஒரு சிரிப்புடன் ''சரி இருங்கோ, பாட்டியை வீட்டில விட்டுவிட்டு வாறேன்'' என்று சொல்லிச் சென்றார். அன்றைய நாள் அப்படியே நகர்ந்தது. பின்பு மறுநாள் அறிந்தேன், பாட்டி ஷெல் விழுந்த அதிர்வில் இறந்துவிட்டா என்று. என்ன செய்ய முடியும்? எனக்கு உதவி செய்பவர்கள் எவர்தான் உயிருடன் இருக்கிறார்கள்? தாடி அண்ணா பாட்டியின் உடலைப் பார்த்துவிட்டு என்னிடம் வந்து கதைத்துக் கொண்டிருந்தார். அப்போது ஷெல் கூவும் சத்தம் கேட்டு அவர் எனக்கு மேலே விழுந்து படுத்தார். என்ர கடவுளே ஷெல் வந்து வெடித்தது. என் வீடு முழுக்கப் ஒரே புகை மண்டலம். எனது வீட்டுக்கு அருகில் தான் விழுந்திருக்கு. அவ்வளவுதான் விழுந்துபடுத்த அண்ணா எழுந்திருக்கவே இல்லை. என் உடல் பீதியால் உறைந்து போனது. ஐயோ.... இரத்தம்! அண்ணா காயப்பட்டிட்டார். உடம்பு முழுக்க காயம். எல்லாமே இரத்த வெள்ளமாக இருந்தது. கத்தினேன். அண்ணாவின் நண்பர்கள் உடனே ஓடி வந்து தூக்கிக்கொண்டு சென்றார்கள். அண்ணாவுக்கு பின்புறம் முழுவதும் காயம். எனக்கும் பிள்ளைக்கும் பிரச்சினை இல்லை. அண்ணாவுக்குத்தான் நிலைமை மோசம். நான் அழுதுகொண்டே இருந்தேன். என்னால் வேறு என்னதான் செய்ய முடியும். வன்னியில் எல்லோரும் இதைத்தான் செய்தார்கள். அண்ணா என்னால்தான் காயப்பட்டார். அண்ணா சொன்னமாதிரி இருக்காமல் காற்றுக்காக அந்தப் பாதை பக்கமாக நான் இருந்ததால்தான் அவர் காயப்பட வேண்டி வந்தது. இல்லை என்றால் அவருக்கு காயம் வந்திருக்காது. என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைச்சு அண்ணா காயப்பட்டு விட்டாரே. என்னுடன் நெருக்கமாக இருந்தவர்கள் எவரும் இல்லையே. எல்லாம் என்னால்தான் வந்தது. இது எனக்கு மட்டும் நடக்குதா? இல்லாவிட்டால் எல்லாருக்கும் நடக்குதா? எனக்குப் புரியவில்லை. அண்ணாவை கொண்டு போனவர்கள் வரும் மட்டும் நிம்மதி இல்லை.

அவர்களும் வந்துவிட்டனர். ''தம்பி அண்ணாவுக்கு என்ன மாதிரி?'' என்று கேட்டேன். ''இன்னும் சுயநினைவு திரும்பவில்லை. எதுக்கும் நாளைக்குப் பார்த்தால்தான் தெரியும்'' என்றான். ''உங்களை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று அசோக் அண்ணா சொன்னவர். மாலைப்பொழுதில் போகக்கூடிய மாதிரி நில்லுங்கோ'' என்றான். ''இனிமேல் நாங்கள் தப்பித்தான் என்ன பயன்'' என்றேன். தம்பி சொன்னான், ''அப்படி இல்லை. அசோக் அண்ணா ஏற்கனவே எமக்கு சொல்லி வைச்சவர். தனக்கு ஏதும் நடந்தால் தங்கச்சியைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கோ. அவளுக்கு எவரும் இல்லை என்று. அவர் சொன்னதைத்தான் சொல்லுகிறேன்'' என்று சொல்லிச் சென்றனர்.

சரி, என்ன செய்வது. நடப்பது நடக்கட்டும் என்று இருக்க, பிற்பகல் அவர்கள் வந்து என்னை ஏற்றிக் கொண்டு சென்றனர். கப்பலடிக்குக் கிட்டவாக ஒரு இடத்தில் எல்லா ஒழுங்கும் செய்தபடி, ஒரு கொட்டகை போட்டுத் தந்தனர். அதிலிருந்து கொண்டு நான் ''அண்ணாவைப் பார்க்கப் போகிறேன்'' என்று வந்தவர்களிடம் சொல்ல, அவர்கள் மறித்துவிட்டு தாங்கள் ஒழுங்காகப் பார்த்துப் போட்டு வந்து கூட்டிப் போறோம்'' என்று சொல்லிச் சென்றனர். மறுநாள் வந்து சொன்னார்கள் ''அவர் அங்கு இல்லை. ஆஸ்பத்திரியையும் மாற்றிவிட்டார்கள்'' என்றனர். ''நேற்று ஷெல்லடிச்சதால் தானாம் மாற்றினார்களாம். ஆனால், அசோக் அண்ணா எங்கயும் இல்லை'' என்றனர். சரி என்று விட்டு இவர்கள் எனக்குப் பொய் சொல்கிறார்களோ என்று நம்பிக்கை இல்லாமல் நான் வேறு ஆட்களிடமும் விசாரித்தேன். அவர்களும் அப்படித்தான் சொன்னார்கள். நான் என்ன செய்ய? அழுதேன். அழுதுகொண்டே தம்பி ஆட்களின் உதவியுடன் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்தேன். வரும்போது தம்பி ஆட்களை மறித்துவிட்டார்கள். பின்பு நானும் என் பிள்ளையும் தனிச்சுச் சென்று ஆனந்தகுமாரசாமி முகாமை அடைந்தோம். என் அண்ணா வரவேயில்லை. என் மகனுக்கும் பெயர் வைக்கவேயில்லை. அண்ணாவின் பெயரையே எனது பிள்ளைக்கும் வைத்தேன். அண்ணா மாதிரியே என் பிள்ளையையும் வளர்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இப்படியே சில நாட்கள் ஓடின.

ஒரு நாள் என் பிள்ளைக்கு கடும் காய்ச்சலும், சளியும். முகாம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனேன். அவர்கள் பெரிய ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் மூலம் கொண்டு போகவேண்டும் என்று சொல்லி ஒழுங்கு செய்து அனுப்பினார்கள். ஆஸ்பத்திரியிலேயே நிற்கவேண்டிய தாகிவிட்டது. மறுநாள் விடியற்காலையில் ஆஸ்பத்திரி கன்ரீனுக்குப் போய் வரும்போது எனக்கு ஓர் அதிர்ச்சி காத்துக்கிடந்தது. அது கனவா? அல்லது நிஜமா? புரியவில்லை. என் தாடி அண்ணா ஓர் ஊன்றுகோலுடன் இருந்தார். நான் கிட்டப் போய்ப் பார்த்தேன். அவர் என்னைக் கணக்கெடுப்பதாக இல்லை. இவர் வேறு ஆளோ என்று என் மனதுக்குள் நினைத்துக் கொண்டு, ''அசோக் அண்ணா... அண்ணா'' என்று கூப்பிட்டேன். அவர் திடுக்கிட்டு என் பக்கம் திரும்பினார். அண்ணா ''கலை.... தங்கச்சி...'' என்று கூப்பிட்டார். அவரைக் கண்ட சந்தோஷத்தில் ஓ.... என்று நான் அழுதுவிட்டேன். என் அழுகையை விரும்பாத அண்ணா அல்லவா. என் அழுகையைக் கேட்டு அவரும் அழுது கொண்டு இருந்தார். எனக்குப் பார்க்கப் பார்க்க கவலையாக இருந்தது. என்னை அறியாமலேயே என் உயிர் அண்ணாவைக் கட்டிப்பிடித்து அழுதேன். அருகில் இருந்தவர்கள் ஏதோ பிரச்சினையாக இருக்கும் என்று விசாரித்துச் சென்றார்கள். எனக்குக் கிடைத்த தெய்வம் இல்லை என்றபோது என் கண்முன் நின்றால் என் மனம் என்ன பாடுபடும். அந்த அளவுக்கு என் மனம் துடித்தது. அவர் கேட்டார், ''தங்கச்சி.... எப்படி அம்மா இருக்கிறாய். நான் இல்லாமல் போன பிறகு கஷ்டப்பட்டிட்டியா? என்னோட நின்ற தம்பிமார்கள் உதவி செய்தாங்களா?''

''எல்லாம் எனக்குச் செய்துதந்தார்கள் அந்தத் தம்பியாக்கள் தான் இப்ப எங்க இருக்கினம் என்று தெரியாது''

''அப்ப உங்கட மகன் எங்க?''

''அவனுக்குத்தான் வருத்தம். அதுதான் வந்தனான். அவன்தான் உங்களைப் பார்க்க வைத்தவன். நான் இப்படி வந்திருக்காட்டிப் பார்த்திருக்க முடியாது. நான் ஒரு அநாதையாக இருந்திருப்பேன்''

''எனக்கும் மகனைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கு, என்ன செய்வது... அது என் விதி. இப்படியா இருக்கிறேன்''

''உங்களுக்கு இப்ப ஒன்றும் இல்லைதானே. என்னில் உங்களுக்கு ஏதும் கோபமா?''

''இல்லையம்மா''

''அப்ப ஏன் என்னைக் கண்டும் காணாத மாதிரி இருந்தனீங்கள்?'' அவர் சிரித்தார். எனக்காக இருப்பவர் அண்ணாதான். எனக்காக கடவுள் அண்ணாவையாவது விட்டுவைத்திருக்கிறாரே அது போதும். ''அண்ணா உங்களுக்கு உந்தக் கண்ணாடி வடிவாய் இருக்கு'' என்று சொல்ல அவர் சிரித்துக் கொண்டு, ''வடிவோ வடிவில்லையோ இதைப் போட வேண்டியவன் ஆகிவிட்டேன்'' என்றார்.

''ஏன் அப்படிச் சொல்லுறீங்கள் அண்ணா?''

''எனக்கு தங்கச்சி.... கண்பார்வை இல்லாமல் போயிட்டுது. நான் ஆஸ்பத்திரியில காயப்பட்டுக் கிடக்கேக்க, அங்க நான் இருந்த இடத்தில் ஷெல் விழுந்து கண்ணில் கல்குறுணல்கள் பட்டிட்டுது. அதுதான் பார்வையில்லாமல் போயிற்றுது''

''அப்ப இனி பார்வை வராதோ? அப்ப என்னண்டு இஞ்ச வந்தனீங்கள்''

''யாரோ ஒரு புண்ணியவான் என்னை கப்பலில் ஏற்றிவிட்டார். ஒருவர் சொல்லுறார் இரண்டும் சரிவராது. இன்னுமொருவர் சொல்லு றார், ஒன்று சரி வரும் என்று. இந்தியாவில் என்றால்

(26 ஆம் பக்கம் பார்க்க)



# மின்னல்

முன்னொரு போதுமில்லாதவாறு இம்முறை இடிமின்னல் தாக்கத்தினால் இலங்கையில் பாரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. மனித உயிர்கள் காவுகொள்ளப் பட்டிருக்கின்றன. கடந்த இரண்டு மாதங்களில் 17 பேர் பலியாகி இருக்கின்றனர். வணக்கஸ் தலங்கள் உட்பட கட்டடங்கள் சேதமடைந்திருக்கின்றன. இது குறித்து பலர் சுவாரஸ்யமான அபிப் பிராயங் களையும் தெரிவிக்கின்றனர். நாட்டில் நல்லரசு அமையாத தனால்தான் இவ்விதம் நடக்கிறது என்று சிலரும், மனிதர்கள் செய்யும் அநியாயங்களைப் பொறுக்க முடியாததால் இயற்கை இவர்களை இப்படித் தண்டிக்கின் றது என்று வேறு சிலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.


ஆண்டொன்றுக்கு உலகில் 16 மில்லியன் இடிமின்னல்கள் ஏற்படுவதாக இடிமின்னல் சம்பந்தமான ஆய்வு நிலையம் ஒன்று தெரிவிக்கின்றது. அதிகமாகப் பாதிக்கப்படும் பிரதேசங்களாக மத்திய ஆபிரிக்கா, தெற்கு மெக்சிகோ, பனாமா, மத்திய பிரேசில் மற்றும் மடகஸ்கார் தீவுகள் ஆகியவற்றை இந்நிலையம் இனங்கண்டுள்ளது. ஆனால், ஜாவாத் தீவுகள்தான் உலகிலேயே இடி மின்னல் களி னால் அதிகளவில் பாதிப்புறும் நாடாக அறியப்பட்டுள்ளது. இங்கு சராசரியாக வருடம் ஒன்றுக்கு 233 நாட்கள் இடிமின்னல் கால நிலை நிலவுவதாக தெரிகின்றது.

மனிதகுலம் ஆரம்பமானதிலிருந்தே அவனைப் பயமுறுத்திவரும் மிகப் பயங்கரமான இயற்கை சக்தியாக விளங்கி வருகின்றது இந்த இடிமின்னல். ஆனால், இது குறித்து விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டது ஏறக்குறைய 250 ஆண்டுகளுக்கு முன்புதான். பல்வேறு புதிய சாதனங் களின் கண்டுபிடிப்பாளரும், புதிய செயல்முறைகளின் முன்னோடியுமான பெஞ்சமின் பிராங்ளின் அமெரிக்கா வில் பிலடெல்பியாவில் இந்த ஆய்வை மேற்கொண்டார்.

இடிமின்னல் கால நிலையுள்ள ஒரு நாள், பட்டுத் துணியிலான பட்டமொன் றைப் பறக்கவிட்ட அவர், அந்நூலின் இறுதிப் பகுதியிலும் பட்டு நூலொன்றை இணைத்து அதனை உலோகத் திறப்பு ஒன்றுடன் கட்டிவிட்டார். அவர் ஒவ்வொரு தடவையும் தன்னுடைய முழங்காலினால் (உடையணியாமல்) தொடும் போதும் பலமான தீப்பொறி கிழம்பியதுடன் அதிர்ச்சியையும் உணர்ந்தார். இதன் மூலம் இடிமின்ன லுக்கும் மின்சாரத்துக்கும் உள்ள தொடர்பை நிரூபித்தார். அவர் இப்பரிசோதனையின்போது ஏன் பாதிப்புக்குள்ளாகவில்லை என்பதற்குப் போதிய விளக்கங்கள் தரப்படவில்லை.

அதன்பின் இத்துறையில் குறிப் பிடத்தக்களவான முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. கடந்த நூற்றாண்டுக்குள்ளான காலப்பகுதி யில்தான் இந்த ஆய்வு விரிவடைந்து நிறைய விடயங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. பூமி வாயுவைக் குளிரச் செய்து அதைத் திரவ வடிவத்தில் களஞ்சியப்படுத்தும் ஓர் பூதாகரமான 'கன்டென்ஸர்' போன்றதென்றும் இதிலிருந்து இடைவிடாது மின்சாரம் கசிந்து சூழலில் கலந்து கொண்டிருக்கிற தென்றும், பூமியை 'ரீசார்ஜ்' செய்வதற்கு இடிமின்னல்கள் உதவுகின்றன என்றும் இப்போது விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

ஒவ்வொரு இடியின்போதும் மின்னலினூடாகக் காற்றிலிருந்து பெருமளவிலான நைட்ரஜன், நைட்ரஸ் அமில வடிவில் பூமியை வந்தடைகின்றது. இது பயிர்ச்செய்கைக்கு மிக அத்தியாவசியமானதொன்றாகும். இவ்வாறு பூமியை வந்தடையும் நைட்ரஸ் அமிலத்தின் நிறை எவ்வளவாயிருக்கும் என்று



நினைக்கின்றீர்கள்? சுமார் 100 மில்லியன் தொன் என்கின்றார்கள் இது

வி.எஸ்.நவமணி

சம்பந்தமான அதிகார பூர்வமான ஆய்வாளர்கள். இது உலகில் உள்ள அனைத்துத் தொழிற்சாலைகளிலும் தயாரிக்கப்படும் உரத்தின் மொத்த அளவைவிட மிக அதிகமானதாகும்.

இடிமின்னலுக்கான திரளான மேகங்கள், வளியின் வேகமான ஓட்டத்தின்போது விரைவாக மேலெழுவதால் உண்டாகின்றன. மேலேறும் வெப்பமான காற்றோடு குளிர்ந்த காற்று கலப்பதால் பயங்கரக் கொந்தளிப்பு உண்டாகின்றது. இம்முகில் மண்டலங்கள் மணிக்கு சுமார் 100 மைல் வேகத்தில் சுழன்று உரய்வுண்டு மோதுகின்றன. இம்முகில் மண்டலங்களிலே பிரமாண்டமான அளவிலான நீர் உள்ளது. இது சுமார் மூன்று லட்சம் தொன் என மதிப்பிடப் பட்டுள்ளது. பனிப்படிவங் களாகவும், ஆலங் கட்டிகளாகவும் அடங்கியுள்ளன. வான் பரப்பில் சுமார் 9 கிலோமீட்டர் தொலைவு வரை முகில் கூட்டங்கள் காணப் படுகின்ற போதும் 2 முதல் 3 வரையி லான கிலோமீட்டர் தொலைவுக்குள் ளேயே இடிமின்னலை ஏற் படுத்தும் இம்முகில் கூட்டங்கள் காணப்படும்.

இச்செயற்பாடுகளினால் இடிமின்னல் முகில் கூட்டங்களின் அடிப்பாகத்தில் மறைமின் (நெகடிவ்) திரள்கின்றது. இதே நேரத்தில் புவிப்பரப்பில் திரண்டுள்ள நேர்மின் (பொசிடிவ்) பயணித்து மறைமின்னைக் கவர்ந்திழுக்கின்றது. இந்த நேர்-மறை மின்சாரத்தின் பதட்ட நிலை போதுமான அளவு அதிகரிக்கையில் இடிமின்னல் முகில்கள் பூமியை நோக்கி ஓர் எதிர் விசையை விடுக்கின்றன. இச்செயற் பாட்டின்போது மிகப் பிரகாசமான மின்னல் பூமியிலிருந்து முகில்களை நோக்கிப் பாய்கின்றது. நாம் காண்பது அல்லது இதுவரை நம்பிக்கொண்டிருப்பது இதற்கு மறுதலையாகவே முகில்களிலிருந்து பூமியை நோக்கிப் பாய்வதாக. இதன் வேகம் நம்மைப் பிரமிக்கவைக்கும். ஒரு மணித்தியாலத்திற்கு இதன் வேகம் 22 மில்லியன் மைல்களாகும்.

இடியில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று குளிர்வகை; மற்றது வெப்பவகை. குளிர் இடி மரங்கள், கட்டடங்கள் என்பவற்றைச் சேதப்படுத்தக்கூடியது. ஒரு விநாடியில் 10,000 பங்கு நேரத்தில் மின்னி மறையக்கூடியது. இவ்வகை இடி தீயைத் தோற்றுவிப்பதில்லை.

வெப்பவகை இடி 100 முதல் 1,000 தடவைகள் வரை பிரகாசத்தை ஏற்படுத்தக்கூடியது. இவ்வகை 'இடி' தாக்கினால் தாக்கப்படும் பொருட்கள் எரிந்து போய்விடும். சில வேளைகளில் இதன் உஷ்ணம் 27000° Fஐத்தாண்டி விடும். இது சூரியனின் மேற்பரப்பு உஷ்ணத்தை விட அதிகமானதாகும்.

மின்னலின் பாதையிலுள்ள வளியும் பெருமளவில் விரிவடைகின்றது. மின்னல் பிரயாணம் செய்யும் பாதையின் மையப்பகுதி ஒரு விரலளவே பருமனுடையதாகும். எனினும், அதனைச் சூழவுள்ள பகுதி வெடிப்புறுவதன் காரணமாக அது ஒரு மனிதனின் கால் அளவான பருமனைப் பெறுகின்றது. வெப்பமடைந்த இக்காற்று குளிர்ந்து சுருங்கியதும் புதிய வளி அந்த இடத்திற்கு விரைகின்றது. இத்தொடர் செயற்பாடுகளினாலேயே இடி சத்தம் உண்டாகின்றது.

இப்புதிய கண்டுபிடிப்புக்கள் இடிமின்னல் செயற்பாடு குறித்து ஏற்கனவே கொண்டிருந்த கருத்துக்களிலிருந்து சற்று வேறுபடுவதை அவதானித்தல் வேண்டும். இந்த உண்மைகள் மிக நுண்ணிய உயர் தொழில்நுட்பச் சாதனங்களை இதற்காக வடிவமைக்கப்பட்ட விசேட விமானங்களின் மூலம் இடிமின்னல் முகில்களின் மையப்பகுதிக்கு அனுப்பி கண்டறியப்பட்டவைகளாகும்.

இடிமின்னலிலிருந்து பாதுகாப்புப் பெற நாம் சாதாரணமாகச் சில வழிமுறைகளைப் பின்பற்றுகின்றோம். இது குறித்து இத்துறைசார் நிபுணர்கள் என்ன சொல்லுகின்றார்கள் என்று பார்ப்போம்.

**1.** இடிமின்னல் காலநிலையில் அனைத்து விதமான விளையாட்டு நிகழ்வுகளையும் தவிர்த்து விடுங்கள். சைக்கிள், டிராக்டர் போன்றவற்றை கராஜில் போட்டு வையுங்கள். அல்லது முடிந்தளவு மறைத்து வையுங்கள். சுற்றுலா போன்ற வெளிவேளைகளை தவிர்த்துவிடுங்கள்.

**2.** நீங்கள் வெளியில் சென்றிருக்கையில் இடிமின்னல் ஆரம்பித்தால் மிக விரைவாக ஒரு பாதுகாப்பான இடத்தைச் சென்றடைந்துவிடுங்கள். வெகு தொலைவில் உள்ள தனியான இடமொன்றில் நீங்கள் அகப்பட்டு கொண்டீர்களானால், இடிமின்னல், மழை ஓயும்வரை தரையில் படுத்துக்கொள்ளும்படி நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

**3.** தனியான மரங்கள், தண்ணீர்த் தாங்கிகள், முகடுகள் ஆகியவற்றின் கீழ் நிற்காதீர்கள். இடிதாக்கி இறப்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தனியான மரங்களின் கீழ் நிற்பவர்களே என்று தெரியவருகின்றது. ஒரு மரத்தோப்பு தனிமரத்தைவிட பாதிப்பு குறைந்ததாக கருதப்படுகின்றது.

**4.** கம்பிகள், உலோகச்சட்டங்கள் மற்றும் உலோகக் குழாய்களினாலான வேலிகள், எல்லாவிதமான கம்பிகள், உலோகக் குழாய்கள் ஆகியவற்றை விட்டு விலகியிருங்கள்.

**5.** நீந்திக் கொண்டிருந்தால் அல்லது படகிலே இருந்தால் உடனடியாகக் கரையை அடைந்து விடுங்கள்.

**6.** வீட்டின் உள்ளே கதவு, ஜன்னல், உப்பரிகை ஆகியவற்றின் அருகே இருக்க வேண்டாம். எந்தவிதமான மின்சாரச் சாமான்களையும் இயக்க வேண்டாம். டி.வி, ரேடியோ, பிரிஜ், மின்விசிறி, கம்பியூட்டர் ஆகியவற்றின் 'பிளக்'களைக் கழற்றிவிட வேண்டும். மொபைல் போன் உட்பட எல்லாவிதமான போன்களையும் உபயோகித்தலை முடிந்தளவு தவிர்த்துவிடல் வேண்டும். போனை சார்ஜுக்கு போடுதல் ஆகாது.

**7.** பஸ், கார், ரயில் ஆகியவற்றில் பயணம் செய்து கொண்டிருந்தால் இறங்கி பாதுகாப்பான இடத்தை நாட முயலாதீர்கள். வாகனங்கள் ஒப்பீட்டளவில் பாதுகாப்பானவை. விமானப் பயணமும் பாதுகாப்பானதே.


நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ள இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் போதுமான பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலங்கையில் பாக்குவெட்டி, கத்தி, சுத்தியல், கோடரி, அலவாங்கு, மண்வெட்டி ஆகியவற்றைப் பயன் படுத்தும்போதும் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து கேள்விப்படுகின்றோம். இத்தகைய பொருட்களைப் பயன் படுத்துவதைத் தவிர்த்தல் வேண்டும்.

வீட்டினருகில் மாமரம் இருந்தால் இடியினால் ஏற்படும் பாதிப்பு குறையுமென்று பொதுவாக நம்பப்படுகின்றது. இப்போது புதிதாக வீடுகட்டுபவர்கள் பெரும்பாலும் ஒரு ஒட்டு மாங்கன்றை வீட்டு முற்றத்தில் நட்டு வளர்ப்பது வழக்கமாகி வருகின்றது. இதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரம் ஏதும் இருக்கின்றதா என்று தெரியவில்லை.

இடிமின்னல் ஏற்படும்போது மிகுந்த நம்பிக்கையுடன் 'அர்ச்சுனா அர்ச்சுனா' என்று முணுமுணுப்பவர்கள் இன்றும் நம்மிடையே இருக்கின்றார்கள். இந்தப் பழக்கம் ஏற்படுவதற்கு மூல காரணம் என்ன என்பது புரியவில்லை. அர்ஜுனனுக்கும் இடிமின்னலுக்கும் தீராதபகையென்றும், அவனுக்கு பயந்து இடிமின்னல் ஒளிந்திருப்பதாகவும், இடிமின்னல் ஏற்படும் நேரத்தில் அவன் பெயரை உச்சரித்தால் பயந்து விலகிவிடும் என்றும் சொல்கிறார் என் மனைவி.

# "படகு ஒன்றின் மூலம் அவுஸ்திரேலியா போய்ச்சேர முடியுமென நான் எண்ணினேன். நான் தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்டேன்."



**கண்ணன், வயது 40**
**இனந்தெரியாத நாடு ஒன்றில்**
**நிர்க்கதி நிலையில்**

படகு மூலம் அவுஸ்திரேலியா செல்வதற்கு கண்ணன் கடன்பட்டார். துரதிஷ்டவசமாக ஆட்கடத்தல்காரர்கள் வழங்கிய உறுதிமொழிகள் பொய்யாகிவிட்டன. இந்தப் பயணத்தின் போது கடத்தல்காரர்கள் படகையும் அதிலிருந்த பயணிகளையும் கைவிட்டுச் சென்றனர். தற்பொழுது கண்ணன் வெளிநாடு ஒன்றில் கைவிடப்பட்ட நிலையிலுள்ளார். படகு மூலம் முறையற்ற விதத்தில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சிக்கும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் அனர்த்தங்களை விளக்கும் கதைகளில் ஒன்றாக இது அமைந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் எண்ணிலடங்கா இலங்கையர்கள் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலிக்கடாக்களாகின்றனர். படகு மூலம் முறையற்ற விதத்தில் பயணம் செய்பவர்கள் தமது குடும்பம் உட்பட அனைத்தையும் இழக்கும் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். நீங்கள் எதனை இழக்கப்போகின்றீர்கள்?

---

**இலங்கையர்களின்**
**புகலிடக் கோரிக்கைகள்**
**பரிசீலிக்கப்படுவதை**
**அவுஸ்திரேலியா**
**இடைநிறுத்தியுள்ளது.**


---

மனிதக் கடத்தல்காரர்களால்
பிழையாக வழிநடத்தப்பட
வேண்டாம்.

அவுஸ்திரேலிய அரசாங்கம்
உங்களுக்கு வழங்கும்
சேமநலச் செய்தி.

ஒருவர்: உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் கூறிய கதைகள், அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.








பாலன்,
யாழ்ப்பாணம்..


**கேள்வி:** புரான இதிகாசங்களிலே கின்னரா் என்று அழைக்கப்படுவோா் யாா்?


**பதில்:** இவா்கள் கஸ்யப்ப முனிவரின் புத்திரா்களாகக் கருதப்படுகின்றனா். மனித உடலும் குதிரைத் தலையும் கொண்டவா்களாக இவா்கள் புராணங்களில் சித்திரிக்கப்படுகின்றனா். இலட்சுமியின் செல்வங்களைப் பாதுகாத்து வரும் குபேரனுடைய அரச சபையில் இசைக் கலைஞா்களாக இவா்கள் விளங்கினா் என்று சொல்லப்படுகிறது. முற்காலங்களில் இசைக் கலைஞா்கள் தமது ஆற்றலை விருத்திசெய்து கொள்வதற்காக கின்னரா்களை வணங்கும் வழக்கமுடையவா்களாக இருந்தனா்.

கலா,
கொட்டாஞ்சேனை.

**கேள்வி:** கடவுள் இல்லையென்ற கொள்கை இப்போது இல்லை என்ற அளவுக்குக் குறையக் காரணம் என்னவென்று கருதுகிறீா்கள்?

**பதில்:** மனித சிந்தனையும் ஆராய்ச்சிகளும் வளர வளர இறைவன் மீதான நம்பக்கை வளா்ந்ததே ஒழிய தளரவில்லை. நாஸ்திகத்தை அடித்தளமாகக் கொண்டு எழுந்த மதங்கள் கூட, பன்னா் தமக்கெனப் பல கடவுளா்களை உண்டாக்கிக் கொண்டன. மகாயான(சீனா), ஹீனயான(இலங்கை), சென் (யப்பான்), வஜ்ரயான (திபெத்) பௌத்தங்களை இதற்கு உதாரணமாகக் கூறலாம். இதனால், நாஸ்திகம் பெரிய அளவில் பரவவில்லை. அடக்குமுறையால் நாஸ்திகத்தைத் திணித்த ரஷ்யாவிலும் கூட அது வெற்றி பெறவில்லை. அடக்குமுறை நீங்கியபோது மீண்டும் கடவுள் நம்பிக்கை பலம்பெற்று வளரலாயிற்று. சீனாவிலும் நாஸ்தி கத்தை நிலைநிறுத்தும் முயற்சி வெற்றியளிக்கவில்லை.



சஞ்சீவ்,
தெஹிவளை.

**கேள்வி:-** கடி ஜோக் ஒன்று கூறுங்கள் பித்தரே....?

**பதில்:-** முதலாளி ஒருவா் தனது பெண் ஊழியருக்கு முதல் மாதச் சம்பளமாக 'கவுண்' வாங்கிக் கொடுத்தாா். அடுத்த மாதம் சம்பளத்தை உயா்த்தி விட்டாா்...!

யேசுதாஸ்,
கொழும்பு.

கேள்வி: அந்தக் காலத்தில் ஆசிரியா்களைக் கண்டால் மாணவா்கள் மரியாதை கொடுப்பாா்கள் - இப்போ அவ்வளவு இல்லையே பித்தா....?

**பதில்:** காலம் செய்த கோலம்.
அந்தக் காலத்தில் ஆசிரியா் எதிா்த்தாற் போல் வருகிறாா் என்று கண்டால் மாணவா்கள் வேறு பாதையால் திரும்பி ஒளித்து ஓடுவாா்கள்... ஆனால் இன்று மாணவா்கள் எதிா்தாற்போல் வருகிறாா்கள் என்று கண்டால் ஆசிரியா்கள் வேறு பாதையால் திரும்பி ஒளித்து ஓடுகிறாா்களே...!

இ. அரியரத்தினம்,
இரத்தினபுரி

**கேள்வி:** எதிா்காலம் பற்றிய பயம் என்னை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கிறது. இதிலிருந்து விடுபட வழி ஏதும் உண்டா?

**பதில்:** இறைவனில் உறுதியான நம்பிக்கை வைத்து உங்கள் விருப்பத்துக்குரிய தொழில் முயற்சியில் முற்றிலும் உங்களை அா்ப்பணித்து விடுங்கள். சுயமுன்னேற்றம் பற்றிய நூல்களை வாசித்து மனதில் தைரியத்தை வளா்த்துக்கொள்ளுங்கள். எல்லாம் நல்லபடி நடக்கும் என்று எண்ணுங்கள். அழகிய குணங்களை அணிகலன்களாகக் கொள்ளுங்கள். முயற்சி திருவினையாக்கும். அதன் பிறகு எதிா்காலம் பற்றி நீங்கள் பயப்பட வேண்டியிராது.

எம். பி. பிர்தௌஸ்,
திகாரிய

**கேள்வி:** எமக்கு நெருக்கமானவா்களென்ன உறவினா்கள் - சகோதா்கள் கூட நன்றாக வாழ்ந்தால் நமக்கு பிடிக்காமல் இருக்கிறதே... பித்தரே ஏன்...?

**பதில்:** இதனை வயிற்றெரிச்சல் என்றும் சொல்வாா்கள். இது மருந்து காணப்படாத - காண முடியாத ஒரு நோய் அவ்வளவுதான்.

நாதன்,
பெரியகல்லாறு.

**கேள்வி:-** இந்த நாடு ஆக்கப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறதா? அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறதா?

**பதில்:-** எக்கட்சி வந்தாலும் பெரும்பான்மையினா் ஆக்கப் பாதையில்தான் பயணிப்பாா்கள்; சிறுபான்மையினரின் கதி அதோ கதி தான்.

டிலான்,
சிலாபம்.

**கேள்வி:-** பித்தரே! உங்கள் மனைவி உங்களை எப்படி அழைக்கிறாள்....?

**பதில்:-** திருமணமான புதிதில் 'அன்பே...!' என்று அழைத்தாள். இப்போது அதில் முதல் இரண்டு எழுத்தையும் விட்டு விட்டாள்...!

விமல்,
கொழும்பு.

**கேள்வி:-** வீட்டிலே மீன் வளா்ப்பது நல்லதல்ல... பொல்லாத நோய்கள் எல்லாம் வரும் என்கிறாா்களே உண்மையா பித்தா?

**பதில்:-** ஆம். மீனுக்கு.....

## சொற்சிலம்பம் போட்டி இல. 418


சொற்சிலம்பம் 418 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் 2010 ஆம் ஆண்டு மே 30 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றிபெற்றவா்களின் பெயா்கள் ஜூன் 06 ஆம் திகதி சுடா் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 416 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலா் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிா்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவா்கள் தோ்ந்தெடுக்கப்படுவாா்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடா் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.416

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | த் | 2 து | 3 ம | 4 தி | ப் | 5 பு | ■ |
| ங் | ■ | 6 வ | ல் | சை | ■ | 7 ரு | து |
| 8 கு | 9 ம | ர | ர் | ■ | 10 அ | வ | ■ |
| 11 ம | ற | ம் | ■ | 12 ஆ | ர | ம் | 13 பி |
| ம் | ■ | 14 ப | 15 தி | ப் | பு | ■ | டி |
| ■ | 16 அ | ரு | ம் | பு | ■ | 17 அ | வா |
| 18 அ | ர | ப் | பு | ■ | 19 சி | ந் | த |
| 20 க | ம் | பு | ■ | 21 ச | ரி | 25 த | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.418



## சொற்சிலம்பம் போட்டி இல. 418

### இடமிருந்து வலம்

1. மாணிக்கவாசகரின் பக்திப் பாடல் தொகுப்பு
6. உடலை நடுங்க வைக்கும் பயம்
7. மறைசூழ்ச்சி
9. கபடம்/ யானை கட்டும் கயிறு
10. பயணம்/ பிரயாணம்
11. காலவேளை
12. மாடு இதனைத் தின்னும்
13. எல்லாச் சமயங்களும் இது அருந்துவதைத் தடை செய்கின்றன.
15. மலை/ முகத்திலோ அல்லது உடலின் ஏனைய பகுதிகளிலோ கறுப்பு நிறமாகக் காணப்படும் புள்ளி
17. வதனம்
18. காவற்காரன்
20. அல். குர்ஆனின் மொழி.
21. பொய்/ மறைதல்

### மேலிருந்து கீழ்

1. அர்ப்பணிப்பு.
2. தர்க்கம் செய்தல்
3. பொறு/ தோழி
4. திருமணம்
5. நாற்காலி
8. அவை/ மறைப்பு
12. கண்களுக்கு மேலால் இருக்கும் மயிர் வரை
13. இராசிகளில் ஒன்று.
14. கயிறு தயாரிப்பதற்கு உதவும் பொருள்.
15. பெரிய மனிதன்
16. இலகுவான/ சிக்கலற்ற

## சொற்சிலம்பம் போட்டி இல. 416

### பரிசு பெறுவோர்

1. திருமதி. வி. இராசலிங்கம்,
ஆ.18 1/2, மாளிகாவத்தை தொடர்மாடி,
கொழும்பு - 10.
2. திருமதி. ஞானம்,
11- 5/1, சென். லோறன்ஸ் வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06.
3. இ. இராஜேந்திரா,
21 ஆ, கனகரட்ணம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 416

### பாராட்டுப் பெறுவோர்

01. திருமதி ஜெ. ஆபிரகாம், நுவரேலியா.
02. மு. ஜெயம், கண்டி.
03. க. சிவப்பிரகாசம், மொரட்டுவ.
04. எஸ். சின்னராசா, பெரிய போரதீவு.
05. ம. குருச்சந்திரன், திருகோணமலை.
06. வா. அனுஷன், வவுனியா.
07. பொ. நவசிவாயம், யாழ்ப்பாணம்.
08. மா. சுப்பிரமணியம், மட்டக்களப்பு.
09. சி. சசிகூவலிங்கம், மட்டக்களப்பு.
10. ஈ.எச்.எம்.எம். நளீம், அக்குறணை.
11. ம. மனோரஞ்சன், கல்முனை - 02.
12. சி. இராஜேந்திரா, கொழும்பு - 06.
13. திருமதி. மதனிகா நடராஜா, தெஹிவளை.
14. வி. செல்வநாயகம், புத்தூர்.



# ''நாங்கள் அப்படி ஒன்றும் வசதியில்லை''

## ஒரு நாயகன் உருவான கதை

''நாங்கள் தள்ளுவண்டில பொரி கடலை விற்று அன்றாடம் கஞ்சி குடிக்கிற குடும்பம். சின்னாளப்பட்டியைத் தாண்டினால் திண்டுக்கல், கொடைரோடு, மதுரை என்று இவ்வளவு ஊரும்தான் எமக்குத் தெரியும். எங்கே எம்.ஜி.ஆரின் படம் போட்டாலும், போய்ப் பார்த்திடுவேன். தியேட்டர் வாசலில் கடலை விற்கிற நான், என் பிள்ளையும் ஒரு சினிமாவில் நடிப்பான் என்று கனாக்கூடக் கண்டதில்ல. இந்தா... நடிச்சிட்டான். எந்த டி.வியைப் போட்டாலும் இவன் முகம்தான் மாற்றி மாற்றி வருது. வீட்டிலே உக்கார்ந்து பார்த்துக்கிட்டே இருக்க வேண்டும் என்று தான் ஆசை. ஆனால், பொரி விற்றால் தானே எமக்கு வாழ்க்கை!''



தனது குடும்பத்துடன் மகேஷ்

சின்னாளப்பட்டி லட்சுமி தியேட்டர் வாசலில் பொரி கடலைக்குப் பொட்டலம் போட்டபடி பேசுகிறார் சுப்பிரமணி. 'அங்காடித் தெரு' ஹீரோ மகேஷின் அப்பா.

பின்புறச் சுவரில் திண்டுக்கல் தியேட்டரில் ஓடும் 'அங்காடித் தெரு' படத்துக்கான போஸ்டர்கள். ''இன்னும் நான் கடலை விற்கும் தியேட்டருக்கு அங்காடித் தெரு வரலை. வரட்டும்... எத்தனை படங்களுக்குக் கடலை விற்றிருக்கிறேன். அதேபோல் என் மகன் படத்துக்கும் சந்தோஷமா விற்பேன்'' என்கிறார் சுப்பிரமணி பெருமிதமாக.

அருகிலேயே புன்னகைத்து நிற்கும் மகேஷின் நண்பர்கள் தங்களின் செல்போன் கமெராவால் புகைப்படம் எடுக்க, 'என்னடா மாப்பிள இது' எனக் கூச்சத்தில் நெளிகிறார் ஹீரோ. மகேஷின் உண்மைப் பெயர் மோகன். அம்மா பெயரான மகேஷ்வரியைச் சுருக்கி சினிமாவுக்காக மகேஷ் ஆக்கியவர் இயக்குநர் வசந்தபாலன்.

''ஊரில் இருந்தால் மோகனும் வியாபாரத்துக்கு என்னுடன் வருவான். இப்போது சினிமாக் காரன் ஆயிட்டான். இனிமேல் அவனே வாறேன் என்றாலும் முடியாது. இப்பவே, 'உன் மகன் ஹீரோவாயிட்டான். நீ எதுக்கு இன்னமும் பொரி விற்கிறாய்?' என்று கேட்கிறாங்கள்'' - சிரிக்கிற சுப்பிரமணி தன் கையில் எம்.ஜி. ஆர். பெயரைப் பச்சை குத்தி இருக்கிறார்.

சின்னச் சிரிப்புடன் தொடர்கிறார் மகேஷ், ''10 ஆம் வகுப்பு வரைக் கும் சின்னாளப்பட்டியில் படித்தேன். அதுக்குப் பிறகு மயிலாடுதுறையில் ஹொஸ்டலில் இருந்து படித்தேன். நான் வொலிபோல் பிளேயர். அதனால் விளையாடுறதுக்காக வட மாநிலங்களுக் குக் கூட்டிட்டுப் போவாங்க. மற்றப்படி நான் வேறு எந்த வெளியூரும் போனது இல்லை. ஆனால் ஏற்கெனவே ஒரு படத்துல நடிச்சிருக்கேன். அதான், 'ஆட்டோகிராப்' படத்தில் ஸ்கூல் போர்ஷன் ஒன்று வரும்... அதை சின்னாளப்பட்டி தேவாங்கர் பாடசாலையில்தான் எடுத்தாங்கள். நான் அப்போது எட்டாம் வகுப்பு படிக்கிறேன். படத்துல ஸ்கூல் படிச்சு முடியும்போது எல்லாரும் ஒன்றாக நின்று குரூப் போட்டோ எடுப்பாங்கள். அந்த போட்டோவில் நானும் இருக்கேன்''- சிரிக்கிறார் கூச்சமாக.

''இந்தப் படம் வருவதற்கு முன்னாடி சின்னாளப்பட்டியில் எங்களை யாருக்கும் தெரியாது. பொரிகடலை விற்கிறவரோட பையனை எத்தனை பேருக்குத் தெரியப்போகுது? ஆனால், இப்போது தெரிந்தவர்கள், தெரியாதவங்கள் எல்லாரும் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாங்கள். படம் ரிலீஸானதும் எப்பவும் போல நான் சைக்கிள்ல வந்துட்டு இருந்தேன். 'என்ன சைக்கிளில?' என்றார்கள் நண்பர்கள். சரி என்று ஒரு பைக்கைக் கடன் வாங்கி ஓட்டிட்டுப் போனால், 'என்ன பைக்கில?' என்கிறாங்கள்.



ஒரு டி.வியில் பேட்டி எடுத்தாங்கள். வரிசையாக இரண்டு பெண்கள் போன் பண்ணி 'ஐ லவ் யூ' என்கிறார்கள். எனக்குப் படபட என்று பதறிப் போச்சு. இத்தனை வருஷத்துல, 'நீ ஸ்மார்ட்டா இருக்கே, நல்லா இருக்கே' என்று ஒருத்தி கூடச் சொன்னது இல்ல. இப்ப யாரென்றே தெரியாத பெண்கள் போன் பண்ணி, ஐ லவ் யூ சொல்கிறார்கள்'' என்கிற மகேஷ், ப்ளஸ் டூ பரீட்சை எழுதுவதற்கு முன்பே நடிக்க வந்துவிட்டார்.

அம்மா மகேஷ்வரிக்கு வீட்டில் கட்டில்கள், நாற்காலிகள் பின்னுவது தான் வேலை. மகனைப்பற்றிப் பேச ஆரம்பித்தாலே மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் முகத்தில். ''டி.வியில் இவன் பாட்டு வந்துட்டா, போட்டது போட்ட மாதிரி வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிடுவேன். 'என்னமா நடிக்கிறான் இந்த மோகன்' என்று சுத்தி உள்ளவர்கள் ஆயிரம் தடவை சொன்னாலும் கேட்டுக்கிட்டே இருக்கலாம் போல இருக்கு. ஆனால், இதுவரைக்கும் படத்துல இவனை அடிக்கிற இடத்தை மட்டும் பார்க்கலை. தியேட்டரில பார்க்கும் போதும், டி.வியில் போடும்போதும் கண்ணை மூடிக்கு வேன். அடிக்கிறதையும் அழுவுறதையும் பார்த்தா மனசு தாங்காது. ஒரே ஒரு ஆம்பிளப்பிள்ளையைப் பெத்துவெச்சிருக்கோம்!'' என்கிற மகேஷ்வரி, சிவாஜி ரசிகை. மகேஷின் தங்கை சுகன்யா கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கிறார். தமிழின் பெஞ்ச் மார்க் சினிமா ஒன்றில் நடித்த ஹீரோவின் வீடு, தமிழ்நாட்டின் எளிமையான வர்க்கத்தின் எல்லா அடையாளங்களுடனும் இருக்கிறது.

முதலாளிகளின் உழைப்புச் சுரண்டலை வெளிக்கொண்டு வந்தது மட்டுமல்ல... ஓர் உதிரித் தொழிலாளியின் குடும்பத்தில் மகிழ்ச்சியை ஏற்றிவைத்திருப்பதும் 'அங்காடித் தெரு'வின் வெற்றியே! ★

---

## அழுக்கு நீரால் குளித்தல்!

(04 ஆம் பக்க தொடர்ச்சி)

ஐ.தே.க. - தனக்குக் கிடைத்த 09 தேசியப்பட்டியல் நியமனங்களில் இரண்டினை மு.காங்கிரஸுக்கு வழங்கியது. மிகுதி 07 நியமனங்களில் ஒன்றைக் கூட, முஸ்லிம் ஒருவருக்கு வழங்க அந்தக் கட்சி நினைக்கவில்லை.

ஆனால், ஆளுந்தரப்பு தனது தேசியப்பட்டியல் நியமனத்தில் ஒன்றை ஏ.எச்.எம். அஸ்வருக்கு வழங்கி, அவரை நாடாளுமன்ற உறுப்பினராக்கியிருக்கின்றது. இதன் மூலம் முஸ்லிம் மக்களை தனது அரசாங்கம்; கௌரவித்துள்ளதாகவும், முஸ்லிம் மக்களின் மீட்பர் - தானே எனவும் ஜனாதிபதி ராஜபக்ஷ வால் கூறிக் கொள்ள முடிகிறது.

(அஸ்வரைக் காட்டிக் காட்டியே - முஸ்லிம் நாடுகளில் நிறைய உதவிகளை அரசு சுருட்டியெடுத்துக் கொள்ளும் என்பது வேறு கதை)

ஆக, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியின் மிக மோசமான பலவீனங்களாலும், செயலாற்றல் அற்ற தலைமைத்துவத்தினாலும் - ஆளுந்தரப்பு இன்று தட்டிக் கேட்க முடியாததொரு சண்டியனாக வளர்ந்து போயுள்ளது.

இந்தச் சண்டித்தனத்தை அரசு மாற்றிக் கொள்ளும் என்று நாம் இப்போதைக்கு எதிர்பாக்க முடியாது. ஆனால், மாற்றிக் கொண்டது போல் நடிக்கும். அவ்வளவுதான்! ★

---

## குருதியில் நினைவெழுதி...!

(12 ஆம் பக்க தொடர்ச்சி)

செத்திருந்தது. மக்களை மீட்கப் போகிறோம் என்று அரசும், மக்களை காக்கவே யுத்தம் செய் கிறோம் எனப் புலிகளும் சொல்லிக் கொண்டாலும், மக்களுக்காகவே தம்முடைய எல்லாச் செயற்பாடுகளும் என அவர்கள் சத்தியம் செய்தாலும் உண்மையில் முள்ளிவாய்க்காலில் மக்களையே இரு தரப்பும் பலி வாங்கியது. அந்தப் பலியின் வலியில் இருந்து இன்னமும் மீள முடியாதவர்களால் ஓங்கி அடிக்கப்பட்ட ஆணிபோல இரத்தம் வழியும் நினைவுகளை முள்ளிவாய்க்காலில் இருந்து மீண்ட மக்கள் சுமந்துகொண்டிருக்கிறார்கள்.

மக்களில் பலர் நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டார்கள். எனினும் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இன்னமும் 12ஆயிரம் தமிழ் இளைஞர்கள் புனர்வாழ்வு முகாம்களில் அடைபட்டிருக்கிறார்கள். தம்முடைய வாழ்வினை சொந்த இடங்களில் ஒரு சிலர் மீளவும் ஆரம்பிக்க எத்தனங்களில் இறங்கியிருக்கிறார்கள். இவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் தாங்க முடியாத அடியை வாங்கி மறக்க முடியாத நினைவுகளை சுமந்துகொண்டிருப்பவர்கள்தான். ஆனாலும் அது பற்றியெல்லாம் அக்கறையின்றி அவர்களின் மீள்வாழ்வு பற்றிய பிரக்ஞையின்றி நாம் எல்லாவற்றையும் மறந்து கொண்டிருக்கிறோம். புதிதுகளில் நம்மை இழந்து கொண்டிருக்கிறோம். காற்று நாட்களை அள்ளிக் கொண்டு போனாலும் மக்களின் - முள்ளிவாய்க்காலில் இருந்து மீண்டவர்களின் - மனதில் இன்னமும் குருதியால் எழுதிய நினைவுகள் மாளாது மீளெழவே செய்கின்றன. அந்த நினைவுகள் காலங்காலமாக உயிர்த்திருக்கும்.

---

## புதிய உறவுகள்

(22 ஆம் பக்க தொடர்ச்சி)

இரண்டையும் செய்யலாம் என்று சொல்லுகினம். எனக்கு இதுகள் எல்லாம் எப்படிச் சாத்தியப்படும். யார் இதைச் செய்வது? இது எல்லாம் சரிவராது'' என்று சொன்னன்.

''எல்லாம் சரி வரும் அண்ணா. நீங்க என்னோட வாங்கோ'' என்றேன். அவர் என்னோடு வர மறுத்தார்.

''உங்களோட இருக்கிறது உங்களுக்குத்தான் கஷ்டம். எனக்குத் தெரிந்தவர்கள் இருக்கினம். நான் அங்க போகிறேன்'' என்றார்.

''இல்ல நீங்க என்னோட வாங்கோ...'' என்றேன் மறுபடியும்.

''நான் உங்களுக்குப் பாரமாக இருக்க விரும்பல்ல...'' என்றார்.

"அது ஒன்றும் பரவாயில்லை" என்றேன்.

''இல்ல தங்கச்சி. இப்படி இருக்கிறத சமூகம் ஏற்காது. ஏன் கெட்ட பெயர் வாங்கணும்''

''உங்களுக்காக நான் எதையும் செய்வேன். எதையும் தாங்குவேன் அண்ணா. இந்த சமூகத்துக்கு சரியான நட்புப் புரிவதில்லை. புரிய வைக்கவும் முடியாது. எனக்கு எங்களைப் பற்றி விளங்கும். உங்களுக்கு என்னைப் பற்றி விளங்கும்... வாங்கோ'' என்று அவர் கையைப் பிடித்துக்கொண்டு, என் மகனையும் தூக்கிக்கொண்டு முகாம் சென்றேன். அங்கு அவருக்குத் தேவையான முழுவதையும் ஓரளவு பூர்த்தி செய்தேன்.

இப்போது புலம்பெயர்ந்த சிலரின் உதவியுடன் கண் வைத்தியத்துக்காக இந்தியா புறப்பட உள்ளோம். என் அண்ணாவின் கண்கள் மீண்டும் என்னைப் பார்க்கும். பார்க்க வேண்டும். அதற்காக நான் கடவுளை வேண்டுகிறேன். மீண்டும் என்னையும் என் மகனையும் அவர் கண்களால் பார்க்க வேண்டும். எனது பழைய தாடி அண்ணா வர வேண்டும். இதுதான் என் கடைசி ஆசையும்.

முற்றும்.

# ராசி-பலன்

## 10 - 05 - 2010 முதல் 16 - 05 - 2010




### அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

எல்லோரிடமும் ஆதரவாக பழகும் மேஷ ராசி அன்பர்களே!

நீங்கள் எடுத்துக்கொண்ட செயல்களில் பெரும்பாலும் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நீங்கள் எதிர்பார்த்துச் சென்ற நபர் உங்கள் பணிகளில் ஆதரவாக இருப்பார். பண வரவு உண்டு. மேற்குத் திசையில் இருந்து எதிர்பார்க்கும் நல்ல தகவல் வந்து சேரும்.

குடும்பம் சீராக நடைபெறும். ஆனாலும், சிறு கடன் தொல்லைகள் தலைகாட்டும். நெருங்கிய உறவினர் ஒருவரின் இல்லத்து நிகழ்ச்சியில் குடும்பத்தோடு கலந்து கொள்வீர்கள். பங்குச்சந்தை வியாபாரம் சிறப்பாக நடைபெற்று நல்ல லாபம் ஏற்படலாம். புதிய நண்பர்களின் ஆலோசனை பயன்படும். அதிர்ஷ்ட எண்கள்: 1,6,8. அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி




### கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீடம் 1,2

நுண்ணறிவோடு செயல்படும் ரிஷப ராசி அன்பர்களே!

செயல்களில் ஏற்படும் தொய்வுகளை தீவிர முயற்சிகளால் வெற்றி கொள்ள முற்படுவீர்கள். பிரபலமானவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடும். எல்லாச் செயல்களிலும் பொறுப்புடனும், பொறுமையுடனும் செயல்படுவது அவசியம். கனிவோடு நடந்து கொள்வது காரிய வெற்றிக்குப் பெரிதும் பயன்படும்.

சிறு சிறு பிரச்சினைகளின் மத்தியில் குடும்பம் சீராக நடைபெற்று வரும். தாய்வழி உறவுகளின் மங்கல நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்போது மனதிற்கு இனிய சம்பவம் ஒன்று நடைபெறலாம். பங்குச்சந்தை வியாபாரத்தில் லாபம் சுமாராக ஏற்படும். அன்றாட நிலவரங்களை சரியாக கவனித்து வந்தால் அதிக லாபம் பெறலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,6. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்மஞ்சள். அதிர்ஷ்டக் கிழமை: புதன்.




### மிருக சீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2,3 ஆம் பாதங்கள்

வளமான கற்பனை ஆற்றல் பெற்ற மிதுன ராசி அன்பர்களே!

எடுக்கும் செயல்களில் ஏற்றமிகு வெற்றிகளைப் பெற முற்படுவீர்கள். புதிய பணவரவுகளால் நிதி நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். முடியாது என்று கைவிட்ட செயல் ஒன்று கடைசி நேரத்தில் வெற்றியுடன் முடிந்து மகிழ்வளிக்கும்.

உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு அவர்கள் பணியாற்றிய அலுவலகத்திலேயே பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கக்கூடும்.

குடும்பத்தில் அமைதி இருந்தாலும், சிறு சிறு பிரச்சினைகளும் இருக்கக்கூடும். கடன் தொல்லைகளை எளிதாகச் சமாளித்து விடுவீர்கள். பங்குச்சந்தையில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்க நண்பர்களின் ஆலோசனைகள் பயன்தரும். அதிர்ஷ்ட எண்கள்: 2,5,7. அதிர்ஷ்ட நிறம்: வெண்மை. அதிர்ஷ்டக் கிழமை: திங்கள்.




### புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

நண்பர்களை ஆதரிக்கும் கும்ப ராசி அன்பர்களே!

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றம் பெற கடினமாக உழைக்க நேரிடும். தடைதாமதங்கள் தவிர்க்க இயலாததாக இருக்கும். அவசியமான நண்பர்களும் உறவினர்களும் தக்க சமயத்தில் உதவ முடியாத நிலையில் இருக்கக்கூடும். கொடுக்கல், வாங்கலில் கவனமாக இருப்பது அவசியம்.

சுயதொழில் செய்பவர்களுக்கு பொறுமை மிக அவசியம் தேவை. கூட்டுத்தொழிலில் எதிர்பாக்கும் லாபம் காணப் படாது. போட்டியாளரின் கரங்கள் ஓங்கி இருக்கும்.

குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டு பெண்களால் சாமர்த்தியமாகச் சமாளிக்கப்படும். சகோதரி வழி உறவுகளின் மூலம் மனக்கவலை உருவாகக்கூடும். பங்குச்சந்தை வியாபாரத்தில் அதிக லாபம் பெற பெரிய நிறுவனங்களின் அன்றாட நிலவரங்களை செய்தித்தாள்கள் மூலம் கவனிப்பது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9. அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்டக் கிழமை: வியாழன்.




### மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

செயல்களைதிட்டமிட்டு செய்யும் சிம்ம ராசி அன்பர்களே!

எதிர்பார்க்கும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். நண்பர்களின் ஆதரவும், தக்க சமயத்தில் கிடைக் கும். உங்களுக்கு ஞாயிறு மாலை 3 மணி முதல் திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமை வரை சந்திராஷ்டமம் உள்ளதால் செய்யும் செயல்களில் தேக்கமும், சஞ்சலமும் உண்டாகக்கூடும்.

குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் இருந்தாலும் சீராக நடைபெற்று வரும். சகோதரி வழி உறவுகளில் ஏற்படும் மங்கல நிகழ்ச்சிகளில் குடும்பத்தோடு கலந்து கொள்வீர்கள். குலதெய்வ வழிபாட்டுக்கு குடும்பத்தோடு செல்லத் திட்டமிடுவீர்கள். அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9 அதிர்ஷ்ட நிறம்: பச்சை. அதிர்ஷ்டக் கிழமை: புதன்.




### உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

வேலைகளை சிறப்பாகச் செய்யும் கன்னி ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் திட்டமிட்ட காரியங்களிலும் தடைதாமதங்களைச் சந்திக்கலாம். உங்களுக்கு புதன் மற்றும் வியாழக்கிழமை சந்திராஷ்டமம் உள்ளதால் வாக்குறுதிகளில் நிதானம் தேவை. தேவையற்ற விஷயங்களில் மனதை செலுத்த வேண்டாம்.

குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். பூர்வீக சொத்துக்கள் விஷயமாக தந்தை வழி உறவுகளில் சிறு மனவேறுபாடு உருவாகலாம். சிலருக்கு இருக்கும் இடத்தை மாற்ற வேண்டிய நிலை வரும். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் தீவிர முயற்சியின் பேரில் புதிய வாய்ப்புகளைப் பெற்றாலும் எதிர்பாக்கும் வருமானம் இல்லாமல் போகலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 6,7,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: வெள்ளி.




### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

எப்போதும் நேர்மையை விரும்பும் துலாம் ராசி அன்பர்களே!

இந்த வாரம் உங்கள் முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். தடைபட்ட செயல்களில் தீவிர முயற்சிகளை செய்து நிறைவேற்ற முற்படுவீர்கள்.

உங்களுக்கு இந்த வாரம் சற்று மனச்சோர்வு காணப்படும். தொடர்ந்து மருந்து எடுத்து வருபவர்கள் உடல் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். வார்த்தைகளில் கவனமில்லாவிட்டால் அமைதிக் குறைவு ஏற்படலாம்.

குடும்பத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்த ஆலோசிப்பீர்கள். உடல்நலக் கோளாறுகளால் அவதிப்பட்டவர்கள் ஆரோக்கியம் பெறுவார்கள். வெளியிடங்களில் பணியாற்றும்போது உணவுக் கட்டுப்பாட்டில் கவனமாக இருப்பது நல்லது. அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம் : இளம்சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்.




### விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கோட்டை

எந்தச் செயலையும் திறமையாக செய்யும் விருச்சிக ராசி அன்பர்களே!

நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் சிலவற்றில் வெற்றி கிடைக்கும். தடைபட்டவைகளை வெற்றியாக்க முக்கியமானவர்களை அணுகக்கூடும். அவசரமான செலவுகளைச் சமாளிக்க நெருங்கிய நண்பர்களை நாடுவீர்கள். மேற்குத் திசையில் இருந்து நல்ல தகவல் வந்து சேரும்.

குடும்பத்தில் தம்பதிகள் ஒற்றுமை இருக்கும். சிறு சிறு கடன் தொல்லைகளைச் சமாளித்து விடுவீர்கள். தாய்வழி உறவுகளின் மூலம் சிறு தனலாபம் உண்டு. சகநண்பர் ஒருவர் தொழில் ரீதியான முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பார். சுமாரான லாபம் கிடைக்கக்கூடும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: செவ்வாய்.




### மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

முன்னெச்சரிக்கையோடு பழகும் தனுசு ராசி அன்பர்களே!

செய்யும் செயல்கள் சிலவற்றை சிறப்பாக முடித்து வெற்றி காண்பீர்கள். பணவரவு எதிர்பார்த்தபடி கிடைத்தாலும் எதிர்பாராத செலவுகள் முன்னால் நிற்கலாம். நீண்டகாலம் வராத முக்கிய உறவினர்களின் திடீர் வருகை மகிழ்வளிக்கும். ஆவலுடன் எதிர்பார்த்த தகவல், நீங்கள் எதிர்பார்த்தது போலவே அமைந்து மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

குடும்பம் சிறு சிறு பரச்சினைகளுக்கு இடையில் சிறப்பாக நடைபெற்று வரும். குடும்ப அங்கத்தினரில் ஒருவர் பழைய வேலையை விட்டுவிட்டு புதிய தொழில் தொடங்க முற்படுவார். சுற்றுலா சென்று மகிழும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும். கலைஞர்கள் பழைய தொடர்புள்ள பணிகளில் சுறுசுறுப்பாக ஈடு படுவர். புதிய ஒப்பந்துங்கள் ஏற்பட்டு மனம் மகிழும் வாய்ப்பு உண்டு.

அதிர்ஷ்ட எண்கள்: 5,8,9. அதிர்ஷ்ட நிறம் : வெளிர்நீலம். அதிர்ஷ்டக் கிழமை: சனி.




### உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

தனது காரியங்களைத் தானே செய்யும் மகர ராசி அன்பர்களே!

எதிர்பாக்கும் காரியங்களில் முன்னேற்ற மடைய சிறிது காலம் பொறுமையைக் கடைபடிக்க வேண்டியிருக்கும். பணவரவு தாமதமாகலாம். அவசர செலவுகள் உண்டு.

குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். கடன் தொல்லைகள் இருந்தாலும் பாதிப்பு ஏற்படாது. தாய்வழி உறவுகளில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெண்களுக்குள் சிறிது மனவேறுபாடு ஏற்படக்கூடும். கலைஞர்கள் கடினமான பணிகளில் செயலாற்றும்போது சிறு விபத்துக் களைச் சந்திக்க நேரலாம். சகக்கலைஞர் ஒருவர் உங்களுக்கு மிகவும் ஆதரவாக இருக்கக்கூடும். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராகவே நடைபெறும். அதிர்ஷ்ட எண்கள்: 3,8,9. அதிர்ஷ்ட நிறம்: கருநீலம். அதிர்ஷ்டக் கிழமை: சனி





### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

நண்பர்களை ஆதரிக்கும் கும்ப ராசி அன்பர்களே!

நீங்கள் எதிர்பார்க்கும் முன்னேற்றம் பெற கடினமாக உழைக்க நேரிடும். தடைதாமதங்கள் தவிர்க்க இயலாததாக இருக்கும். அவசியமான நண்பர்களும் உறவினர்களும் தக்க சமயத்தில் உதவ முடியாத நிலையில் இருக்கக்கூடும். கொடுக்கல், வாங்கலில் கவனமாக இருப்பது அவசியம்.

குடும்பத்தில் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டு பெண்களால் சாமர்த்தியமாகச் சமாளிக்கப்படும். சகோதரி வழி உறவுகளின் மூலம் மனக்கவலை உருவாகக்கூடும். பங்குச்சந்தை வியாபாரத்தில் அதிக லாபம் பெற பெரிய நிறுவனங்களின் அன்றாட நிலவரங்களை செய்தித்தாள்கள் மூலம் கவனிப்பது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9. அதிர்ஷ்ட நிறம்; மஞ்சள். அதிர்ஷ்டக் கிழமை: வியாழன்.




### பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

தைரியமான மனதுடன் செயல்களில் ஈடுபடும் மீன ராசி அன்பர்களே!

உங்கள் செயல்கள் பலவற்றில் முன்னேற்றம் காண்பீர்கள். சிறு சிறு தடைகள் இருந்தாலும் தீவிர முயற்சியினால் அவைகளை உடைத்தெறிவீர்கள். பிரபலமான ஒருவர் அறிமுகமும், அவரால் முக்கிய திருப்பமும் நேரக்கூடும்.

குடும்பத்தில் பிரச்சினைகள் இருந்தாலும், சீராக நடைபெற்று வரும். திட்டமிட்ட சுபகாரியங்கள் நன்றாக நடைபெறும். தாய்வழி உறவுகள் மூலம் சிறு மனத்தாங்கல் ஏற்பட்டு விலகும். பெண்கள், மனதிற்கு இனிய சம்பவம் ஒன்று நடந்து மகிழ்வார்கள். எதிர்பார்க்கும் வருமானம் இல்லாது போனாலும், தொழிலில் திருப்தி காணப்படும். கடினமான பணிகளில் நேரடியாக பங்கேற்பதை தவிர்ப்பது நல்லது. பங்குச்சந்தை வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கலாம். அதிக லாபம் பெற நிலையான பங்குகளை வாங்குவது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள்: 1,5,9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக் கிழமை: ஞாயிறு.



திரு. திருமதி திருஞானம் தம்பதியரின் புதல்வியும், நாட்டிய கலாமந்திர் இயக்குனர் ஸ்ரீமதி. கலாசூரி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியுமான செல்வி. சுலக்ஷிதா திருஞானத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் 15ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக கலைமாமணி ஸ்ரீமதி. ஊர்மிளா சத்யநாராயணன் (நாட்டிய சங்கல்பா சென்னை), பிஷப் கல்லூரி அதிபர் ஹேமமாலி பிபிலே ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



# கஸாப் மரண தண்டனை நிறைவேறுமா?

இயக்கத்திலிருந்து அழைப்பு வந்து விட்டது. மும்பையில் ஒரு வேலை இருக்கிறது, வா! அதுதான் இப்போது கஸாபை மரணத்தின் வாசலில் கொண்டு போய் நிறுத்தியிருக்கிறது. பலர் கொதிப்பது போல் கஸாபுக்கு மரண தண்டனை உடனே நிறைவேற்றப்படுமா? இன்னும் அப்பீல், கருணை மனு என்று ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கின்றன. சட்டத்தின் வேலை தண்டிப்பது அல்ல, குற்றவாளி யைத் திருத்துவது என்பது நீதியின் அடிப்படை. கஸாப் திருந்துவதற்கு வாய்ப்பே இல்லை. அவனிடம் எந்த குற்ற உணர்வும் இல்லை என்கிறார் தீர்ப்பை வழங்கிய நீதிபதி தஹிலியானி.

மும்பைத் தாக்குதலில் 166 பேரை ஈவு இரக்கமின்றி கொன்று குவித்தவர்களில் ஒருவனான அஜ்மல் அமீர் கஸாபுக்கு தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப் பட்டிருப்பதை இந்தியாவே கொண்டாடிக் கொண்டிருக்கிறது. மரண தண்டனைக்கு எதிராகப் போராடிக் கொண்டிருப்பவர்கள் கூட கஸாபுக்கான தூக்குத் தண்டனையை விமர்சிக்கக் கொஞ்சம் யோசிக்கவே செய் கிறார்கள். காரணம், கொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் அப்பாவி மக்கள். பணி முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தவர் கள். எளிய கனவுகளோடு தங்கள் குழந்தை கள், குடும்பத்துடன் உறங்குவதற்காக வந்து கொண்டிருந்தவர்கள். அவர்களை வேட்டையாடுவதை வெறியோடு செய்தவன் கஸாப். அந்த நடுத்தர மக்களின் கோபம்தான் நாடு முழுக்க பற்றி எரிகிறது.

ஆனாலும் ஒரு விஷயம், கஸாப் ஒரு கருவிதான். அவனை ஆட்டுவித்தவர்கள் உலகெங்கும் மறைந்திருக்கிறார்கள். கஸாபின் மீது அவர்கள் கோபமாகவும் இருக்கிறார்கள். ஏனென்றால் புனிதப் போரில் காரியம் முடிந்ததும் செத்துப் போய் விட வேண்டும், எந்தக் காரணம் கொண்டும் பொலீஸாரிடம் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதுதான் அவர்கள் கஸாபுக்கு இட்ட கட்டளை. அதை மீறி கஸாப் மாட்டிக் கொண்டதால் சொன்னபடி அவனுடைய குடும்பத்துக்கு பணம் கிடைக்காது. இந்த மாபெரும் படுகொலைக் குற்றத்தைச் செய்வதற்கு அவனுக்குப் பேசப்பட்ட கூலியும் ஒரு லட்சத்துக்கும் குறைவான பணம்தான்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் பாரித்காட் என்கிற சிறிய கிராமத்தில் பிறந்தவன் அஜ்மல் கஸாப். கிராமம் முழுவதும் வறுமை. அங்குள்ள இடிபாடுகளைப் போன்ற வீடுகளின் சுவர்களில் 'புனிதப் போருக்கு வாருங்கள்' என்கிற அழைப்புகள் எழுதப்பட்டிருக்கும். கஸாப் மும்பை பொலீஸில் சிக்கிக் கொண்டதும் இந்த கிராமத்தையே வளைத்து விட்டது பாகிஸ்தான் அரசு. யாரும் எதற்கும் வாயைத் திறக்கக் கூடாது என்பது கட்டளை. அதையும் மீறி ஒரு பாகிஸ்தான் பத்திரிகை நிருபர் உள்ளே புகுந்து கஸாப் குடும்பத்தின் புள்ளிவிவரங்களை ஆதார பூர்வமாக வெளியிட்டு விட்டார். கஸாப் எங் கள் குடிமகனே அல்ல என்று முதலில் மறுத்த பாகிஸ்தான் அரசு இதன் பிறகு வேறு வழி இல்லாமல் ஒப்புக் கொண்டது.

கஸாப் பரித்காட் கிராமத்தின் சிறுவர் களிடையே பிரபலமானவன். அவர்களுக்கு நீச்சல், மல்யுத்தம் போன்றவற்றைக் கற்றுக் கொடுத்தவன். அப்பாவிடம் பண்டிகைக்கு புதுச் சட்டை கேட்ட போது அவர் பணம் இல்லை என்று சொன்னதால் கோபித்துக் கொண்டு ஊரை விட்டுக் கிளம்பிய கஸாப் நகரங்களுக்குச் சென்று, சின்னச் சின்ன குற்றங்களைச் செய்து விட்டு லஷ்கர்-, -தொய்பா இயக்கத்தில் போய்ச் சேர்ந்திருக்கிறான்.

ஜிகாத் பிரசாரப் பணி அவனுக்கு முதலில் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு தீவிரமான பல ஆயுதப் பயிற்சிகள். மறுபடி கிராமத்துக்குத் திரும்பிய போது ஆளே மாறியிருந்தான். கொஞ்ச நாளிலேயே

